
அக்ஷயாவின்

அழகிய

# நந்தினி ஸ்பெஷல்

₹20



# கண்மணி ஆகுமா..?

## அகிலா கோவிந்த்

# கண்மணி சுகமா...?



## அகிலா கோவிந்த்





# 1

நிர்மலாவின் மைவிழிக்கண்கள் அன்று ஒரே பரபரப்பாய் அலைபாய்ந்து கொண்டிருந்தது. காலையிலே வீட்டிலிருந்து உற்சாகமாய் கிளம்பி விட்டாள்

அவளுக்குப் பிடித்தமான அன்பு இல்ல நிர்வாகி ராஜமணி அம்மாள் கொடுத்த டோனர் அட்ரஸ் அவள் கையிலிருந்தது. பஸ் ஏறி, சரியான நிறுத்தத்தில் இறங்கி முகவரியைத் தேடினாள்.

அப்படி அட்ரஸைக் கண்டுபிடித்து கட்டிடத்தை நெருங்கும் போது தான் நிர்மலா கவனித்தாள். கரும் கிரானைட் கற்களின் பளபளப்பில் குளிரூட்டப்பட்ட பெரிய அலுவலகம் அது. ராஜா அட்வர்டைசிங் சர்வீஸஸ்.... என்ற பளபளப்பான டிஜிட்டல் போர்டு முகப்பில் வரவேற்க, உள்ளே ஒரு விளம்பரக் கம்பெனிக்குரிய பெரிய பரபரப்பு இருப்பது தெரிந்தது. நிர்மலா உள்ளே நுழைந்து ரிசப்ஷன் பக்கம் சென்றாள். நுனி நாக்கு ஆங்கிலப் பெண் மெல்ல நிமிர்ந்தாள்.

நான் எம்.டி.யைப் பார்க்கணும்... என்றாள் நிர்மலா.

அப்பாயிண்ட்மெண்ட் இருக்கா?

இல்லை, ஆனா....

இப்ப அவரு பிஸி... மீட்டிங்கில இருக்கார்....

நான் காத்திருக்கிறேன். ஒண்ணும் அவசரமில்லை.

என்ன விஷயமான்னு சொல்றீங்களா?

நிர்மலா சட்டென அன்பு இல்ல முகவரி கார்டை நீட்டினாள், வாங்கிப் பார்த்த ரிசப்ஷன் பெண் முகம் சுருங்கி, ஓ... டொனேஷனா? என்றபடி அலட்சியமானது.

நிர்மலா அமைதியாக சிரித்துக் கொண்டே நின்றது, அவளுக்கு ஆச்சரியமளித்திருக்க வேண்டும். எதிர் இருக்கைகளைக் காட்டி உட்காரச் சொன்னாள்.

நிர்மலா உட்கார்ந்து அலுவலகத்தை அளவெடுத்துக்கொண்டிருந்தபோது பணியாள் ஒருவன் தேநீர் கோப்பையை நீட்டினான்.

ப்ளீஸ்.... வேண்டாம்...

சும்மா குடிங்கம்மா... ஆபீசுக்கு வர்ற விருந்தாளிகளுக்க கண்டிப்பா சாப்பிடக் கொடுக்கணும்ங்கிறது முதலாளியோட உத்தரவு.

அவள் கெஞ்சலில் மறுக்க மனமில்லாமல் வாங்கிக் கொண்டாள், சுவையான தேநீர் அது. இரண்டு உறிஞ்சியதும் அரக்க பரக்க வீட்டிலிருந்து கிளம்பியது பஸ்ஸூக்குக் காத்து நெரிசலில் ஏறிய களைப்பு எல்லாம் நீங்கியது போல இருந்தது. மேலும் ஒரு வார்வையை சுழல விட்டபோது அவளுக்கு நகைப்பு வந்து விட்டது. அந்த அலுவலகத்தில் ஒன்றிரண்டுபேரைத் தவிர வேலை பார்ப்பது அனைவரும் பெண்கள்தான். ஆனால், எல்லோருமே மிடி, ஸ்கேர்ட் என முட்டு வரையான நாகரீக உடைகள்தான். அங்கு சேலை கட்டி நளினமாய் உட்கார்ந்திருப்பது அவள் ஒருத்தி மட்டுமே!

அதற்குள் ரிசப்ஷன் பெண் இண்டர்காமில் பேசினாள். அவளை சைகையால் அழைத்தாள்.



நீங்க முதல்ல மேனேஜரைப் பார்த்து விஷயத்தைச் சொல்லுங்க. அவர் எம்.டியை சந்திக்க ஏற்பாடு செய்வார்.

கேலியாய் புருவங்களை உயர்த்தி அவள் சொல்வது போல் இருந்தாலும் நிர்மலா பலமாய் தலையாட்டினாள்.

மேனேஜர் அறை...?

அதோ.... அங்க வலதுபுறம்... ஓரமா....

அவள் வழிகாட்டிய இடத்தை நோக்கி நிர்மலா நடந்தாள். அதுவும் கண்ணாடி தடுப்புகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட கதவை லேசாக தட்டி அனுமதி பெற்று நுழைந்தாள். உள்ளே மிடுக்கான இளவயதுக்காரன் பைல்களை பார்த்தபடி சீரியசான முகத்துடன் தெரிந்தான். பார்வையை நிமிர்த்தாமலேயே அவளை உட்காரச் சொன்னான்.

சொல்லுங்க.... என்ன விஷயமா முதலாளியைப் பார்க்கணும்? என்றான் அதிகாரமாய்.

நான் அன்பு ஆசிரமத்தில் இருந்து வர்றேன். ஆசிரமத்துக்கு நிறைய பண உதவி தேவைப்படும். அதனால் எம்.டி.யோட அறக்கட்டளை மூலமா ஏதாவது டொனேஷன் கொடுத்தா ரொம்ப உதவியா இருக்கும்....

அறக்கட்டளை மூலமா பண உதவி செய்யறதா உங்களுக்கு யார் சொன்னாங்க?

பேப்பரில் விளம்பரம் பார்த்ததா எங்க மேடம் சொன்னாங்க...

மேடமா.... அது யாரு?

எங்க இல்லத்தை ஆரம்பிச்சு நடத்துறவங்க ராஜாமணி அம்மாள். அவங்கதான் என்னை அனுப்பினாங்க....

அப்போ நீங்க? என்றபடி அவன் முகம் நிமிர்ந்து பார்த்து கூர்மையாக அவளை அளவெடுத்தான்.

நான் நிர்மலா, மேடத்தோட, உதவியாளரா இருக்கேன்....

சம்பளம் உண்டா?

சம்பளம் கிடையாது. வாலண்டியர் சர்வீஸ்....

அதாவது சமூக சேவை...?

அப்படியும் வைச்சுக்கலாம்... அவள் பலமாய் தலையாட்டியபோது அவனது சிரிப்பு கேலி போல் தொனித்தது.

எனக்கு சிறு வயது முதலே இந்த மாதிரி மெர்ஸ் ஹோமுல ஆர்வம் உண்டு. அதனால படிப்பு முடிஞ்சதும் வேலை தேடாம நேரா போய் அன்பு இல்லத்தில் உதவியாளரா சேர்ந்துக்கிட்டேன்....

அவள் சொல்வதை கதை கேட்பது போல கேட்டு தலையாட்டியது. என்னை நம்பச் சொல்றீயாக்கும்? என கேட்பது போல் இருந்தது. கூடவே நிர்மலாவுக்கு எரிச்சலும் வந்தது. முதலாளியை பார்க்க வந்தால்.... இவன் யார் நடுவில் வந்து கேள்விகளை கேட்டுக்கொண்டு....?

அவள் எரிச்சலைப் புரிந்து கொண்டான் போலும். அவனது அடுத்த பேச்சு அப்படி இருந்தது.

இதெல்லாம் என் முதலாளி கேட்கச் சொல்லி நான் கேட்பதுண்டு. அவர் நிச்சயம் உங்களுக்குப் பண உதவி செய்வார். இது போன்ற மெர்ஸி ஹோம்கள், அன்பு, அனாதை இல்லங்களுக்கு அறக்கட்டளை மூலம் உதவி செய்வதை ரொம்பவும் விரும்புவார். ஆனா....

அவன் நிறுத்தி விட்டு அவளை குறுகுறுவென பார்த்ததற்கு அர்த்தம் அவளுக்குப் புரியவில்லை.

என்ன... சொல்லுங்க?

அவரு எவ்வளவு பணம் கொடுக்கணும்னு தீர்மானிக்கிறது நான் சொல்றது வைச்சுத்தான்...



அவன் நிறுத்தி விட்டு அவளையே மறுபடி கூர்ந்து பார்த்தான்.

புரியுதா...? என்றான்.

அவன் கேட்பதற்கு அர்த்தத்தை நிர்மலாவால் புரிந்து கொள்ள முடியவில்லை.

புரியலே, என்ன சொல்ல வர்றீங்க?

சரி புரியற மாதிரியே வெளிப்படையாகச் சொல்றேன். எம்.டி டொனேஷனா பணம் கொடுக்கிறது ஆயிரங்களாவோ லட்சமாகவோ கூட இருக்கலாம். ஆனா நான் ரெக்கமண்ட் பண்ணினாத்தான் பணம் கொடுப்பார். அவர்கிட்ட உங்களுக்காக ரெக்கமண்ட் பண்றேன். நிறைய பணம் வாங்கித் தாரேன்.... எனக்கு அதில் எவ்வளவு கமிஷன் கிடைக்கும்?

சர்வ சாதாரணமாய் அவள் பேசுவதைக் கண்டு கொதித்தவள், எ... என்னது கமிஷனா..? என்றபடி எழுந்து விட்டாள்.

ஜிவுஜிவு என உதடு துடிக்க எழுந்த அவளது கோபத்தை எந்தவித உணர்ச்சியுமில்லாமல் பார்த்தவன் கைகளை வேகமாக அசைத்தான்.

ஹலோ... மொதல்ல உட்காருங்க...

பல்லைக் கடித்துக் கொண்டு நிர்மலா உட்கார்ந்தாள்.

கமிஷன் தருவீங்களா.... மாட்டீங்களா? என்றான் விடாப்பிடியாய்.

ஹலோ மிஸ்டர், இது ஆதரவற்றி சின்ன குழந்தைகள், முதியவர்களுக்காக நடத்தப்படுகிற இன்ஸ்டிடியூஷன். இதில் போய் இரக்கமே இல்லாமல் கமிஷன் கேட்கிறீங்க? இதை உங்க முதலாளிகிட்ட கண்டிப்பா சொல்லுவேன். அவர் எங்க இல்லத்துக்கு டொனேஷன் தராட்டி கூட பரவாயில்லை.

அதற்கு மேலும் உட்காரப் பிடிக்காதவளாய் நிர்மலா எழுந்துவிட, அவளைப் போலவே அவனும் எழுந்தான்.

சரி... என் பின்னால வாங்க...முதலாளியைக் காட்டுறேன், என்னைப் பற்றி அவர்கிட்ட கம்ப்ளையின்ட் பண்ணுங்க.

சொல்லியபடி அவள் பதிலுக்குக் காத்திராமல் விறுவிறுவென நடந்தாள்.

நிர்மலாவுக்கு விசித்திரமாய் இருந்தது. ஆனாலும் கோபம் சிறிதும் குறையாமல் அவனைப் பின் தொடரந்தாள். அவன் நேராக சென்று திரும்பி பெரிய ஹால் போன்ற ரூமைத் திறந்து உள்ளே நுழைந்தான். நிர்மலாவும் பின்னாலே நுழைந்தாள்.

உள்ளே.. பெரிய பளபளப்பான மேஜைக்கு முன்னால் மிடுக்கான எக்ஸிகிட்டிவ் இருக்கை. அது காலியாய் இருக்க மேனேஜராய்ப் போனவன் நிதானமாய் அதில் போய் உட்கார்ந்தான்.

சீரியஸான அவன் முகம் மறைந்து மெல்லிய சிரிப்பொலியும் கேலியான பார்வையும் வந்தது.

திகைத்தவளிடம், என்ன பார்க்கிறாய்? இந்த கம்பெனியின் முதலாளி நான்தான். உண்மையை அறிய... உன்னிடம் மேனேஜர் போல் நடித்தேன்.... என்றான் சாதாரணமாக. நிர்மலா நம்ப முடியாத ஆச்சரியத்துடன் மூச்சு வாங்கினாள்.

நடித்தீர்களா? உண்மையை அறியவா?

ஆமாம்... நான் செய்கிற உதவி உண்மையாக உரியவர்களிடம், உதவியை எதிர்பார்ப்பவர்களிடம் போக வேண்டும் என்று எதிர்பார்ப்பேன். உங்கள் அன்பு இல்லத்தைப் பற்றி முன்பின் எனக்குத் தெரியாது. அதனாலே ஒரு பானை சோற்றுக்கு ஒனரு சோறு பதம் போல் உன்னை கமிஷன் கேட்பது போல் சோதித்தேன். நிஜத்தை புரிந்து கொண்டேன்.



ம்ம் வாங்கிக் கொள் என்றபடி மேஜையின் டிராயரைத் திறந்து செக்புக்கை எடுத்து நிரப்பி நீட்டினான்.

நிர்மலா ஆச்சரியம் விலகாமல் செக்கில் பார்வையை ஓட்டியவள் மேலும் அதிர்ந்தாள். ஒரு லட்ச ரூபாய்க்கான செக்!




நிர்மலா வீட்டிற்கு வந்தபோது தங்கை சுபா வழக்கம் போல் டி.வியை அலற விட்டுக் கொண்டிருந்தாள். அத்தை கனகம் குழாயில் பாத்திரங்களை தேய்த்துக் கொண்டிருந்தாள்.

சுபா.. சத்தத்தைக் குறைடி.... என்றபடி நிர்மலா உள்ளே நுழைவதைப் பார்த்ததுமே அத்தை ஓடி வந்து விட்டாள்.

நிர்மலா எங்கே போய்ட்டடி?

என்ன விஷயம் அத்தே?

கொஞ்ச நேரத்துக்கு முன்னால அப்பா போன் பண்ணி.... முக்கியமான விஷயம். உன்கிட்ட பேசணும்னு சொன்னான். நீ வரலைன்னதும் போனை வைச்சுட்டான்.

அப்படி என்ன முக்கியமான விஷயம்?

சொல்லலைடி. கேட்டதும் பட்டுன்னு வைச்சுட்டான்.

சரி.... நான் பார்த்துக்கிறேன்...

மொதல்ல.... நீ இவளை பாரு....

யாரை?

அத்தை சுபாவை நோக்கி கை காட்டினாள். இவ்வளவு நேரம் இவா என்ன செஞ்சா தெரியுமா?

கனகம் சொல்லப் போவதைப் பார்த்து சுபா ஓடி வந்தாள்.

ஐயோ... அத்த சொல்லாதே...

நீங்க சொல்லுங்க...

ஏதோ ஒரு கண்றாவிப் பாட்டை டி.வி.யில போட்டுக்கிட்டு டான்ஸ் ஆடிக்கிட்டு இருந்தா, சரியான கொழுப்படி.!

டான்ஸா...?

அக்கா... அது மியூசிக் சேனலில் ஆல்பம் க்ளிப்பிங்ஸ் போட்டாங்க. அதுக்கு டான்ஸ் மூவ்மெண்ட்ஸ் பார்த்தேன், அவ்வளவுதான்!

உனக்கு எதுக்குடி டான்ஸ் மூவ்மெண்ட்ஸ்?

அடுத்த வாரம் பரீட்சை வருது...

பரீட்சையா?

ஆமா கல்ச்சுரல் அகாடெமி தேர்வு. அதில் கலந்துக்க பேரு கொடுத்திருக்கேன்... இது தப்பா?

தப்புதான். இப்படி டான்ஸ் ஆடி ஆடித்தான் செமஸ்டர்ல கோட்டை விட்டுறாத...

இந்த தடவை கண்டிப்பா விட மாட்டேன். பர்ஸ்ட் கிளாஸை தாண்டிருவேன்....

நீ தாண்டனும், இல்லாட்டி அப்பா தோலை உரிச்சுடுவார்...

கண்டிப்பா.... என்னை நம்பு. என் செல்ல அக்கா இல்ல? சுபா பக்கத்தில் நிர்மலாவின் கன்னத்தை வருடி தாடையை கொஞ்சினாள்.



நிர்மலாவின் குரல் மெல்ல இறங்கி இளகியது.

அது இருக்கட்டும். அத்தைகிட்ட வீணா வம்பு பண்ண வேண்டாம்ன்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்?

அவள் சொல்வதைப் பார்த்து நல்லா சொல்லு... உரைக்கட்டும்... என்று அத்தை கனகம் கைகளையாட்டிச் சொல்ல, அவளைப் போலவே தன் கைகளைச் செய்து நல்லாச் சொல்லு உரைக்கட்டும்.... உவ்வ்வே... என கிண்டலாய் கலாய்த்தாள் சுபா. நிர்மலா தங்கையின் தோளைப் பிடித்து திரும்ப . அதட்டினாள்.

சுபா, இப்படியெல்லாம் செய்யக்கூடாது. அத்தை.... பாவம்...

நிர்மலாவின் அதட்டலுக்குப் பயப்படாமல் பெரிதாய் சிரித்த சுபா அவள் கழுத்தை குழந்தை போல் கட்டிக் கொண்டாள். தலையாட்டினாள்.

சரிக்கா....

சுபா... பீ... சீரியஸ்.. நான் கோபமாகச் சொல்றேன்....

நிர்மலா குரலை உயர்த்த.... சுபா கழுத்தின் பிடியை இறுக்கினாள்.ஷ

சரிக்கா... சரிக்கா.... சரி... சரி.... சரிக்கா....

பாட ஆரம்பித்து கன்னத்தோடு உரசினாள்.

ஹூம்.... உன்னை திருத்தவே முடியாது... என்றபோது நிர்மலாவின் கோபம் பொசுங்கி சிரிப்பாகி விட்டது. அதற்கு மேல் அடக்க முடியாமல் சிரிக்க ஆரம்பிக்க....இருஜவரும் சேரந்து சிரிப்பதைப் பார்த்த அத்தை தோள்களை சிலுப்பினாள்.

ரெண்டு பேரும் சேர்ந்து என்னை தனி மரமான ஆக்கிட்டீங்க... இருங்க சமயம் வரட்டும்... பொய்க் கோபமாய்

கனகம் அகலவும் அப்பா சதாசிவம் வீட்டினுள் நுழையவும் சரியாயிருந்தது.

அப்பாவைப் பார்த்து நிர்மலா துணுக்குற்றாள்.

அப்பாவின் முகத்தில் வழக்கம் போல் புன்னகை இல்லை. கப்பல் கவிழ்ந்தது போல் கவலை தோய்ந்த முகத்துடன் சோகமே உருவாய் நுழைந்தவரைக் கண்டு நிர்மலா திடுக்கிடத்தான் செய்தாள்.

அப்பா வாங்க! என்ன ஒரு மாதிரியா.... என்று இழுத்தபடி நிர்மலா பக்கம் போக பதில் ஏதும் பேசாமல் சோர்வாய் சதாசிவம் போய் ஈஸி சேரில் உட்கார்ந்தார்.

என்னவோ... பெரிய சோகத்தில் அப்பா சிக்கியிருக்கிறார் என்பதை நிர்மலா புரிந்து கொண்டவள் அவரை ஆசுவாசப் படுத்தும் நோக்கில் ஓடிப் போய் செம்பில் நீர் மேந்து கொண்டு வந்தாள்.

முதல்ல....இதை குடிங்கப்பா....

சதாசிவம் வாங்கி மடமடவென குடித்தார். பெருமூச்சு விட்டபடி நிர்மலாவைப் பார்த்தார்.

என்னப்பா என்னாச்சு? ஏதே கப்பல் கவிழ விட்டது மாதிரி சோகமா இருக்கீங்க? என்று நிர்மலா கேட்டதும் அவரும் தலையசைத்தார்.

நிஜம்மாவே.... கப்பல் தான் கவிழ்ந்து விட்டதம்மா... என்று அப்பா வாய் விட்டு அரற்றினார். நிர்மலா பயத்தில் அப்படியே துணுக்குற்று விட்டாள்.

என்னப்பா சொல்றீங்க?

ஆமாம்மா.... நான் வேலை பார்க்கும் கம்பெனியில் பெரும் பணம்மோசடி நடந்திடுச்சு அதுக்கா நான் காரணமாயிட்டேன்.....



என்னப்பா சொல்றீங்க?

ஆமாம்மா.... நான் தானே சீஃப் அக்கவுண்டண்ட்? கம்பெனிக்கே கணக்குப் பிள்ளை மாதிரிதான்? ஆனா எனக்குத் தெரியாம நிறைய பணம் களவு போயிருக்கு. கம்பெனி குடோவுனில மேனேஜரா இருக்கிற ஆளு கேஷியரா இருக்கிற ஆளும் சேர்ந்து பொய்க் கணக்கு எழுதி முதலாளி பணத்தை லட்ச லட்சமாய் கொள்ளையடிச்சிருக்காங்க..... முதலாளி இதைத் திடீர்னு கண்டுபிடிச்சதும் இரண்டு பேரும் தலைமறைவாகி ஓடிப் போய்விட்டாங்க.....

அப்புறம்....?

அப்புறம்தான் விஷயமே.... நிர்மலா, முதலாளி அந்த ரெண்டு பேர் மேலும் போலீஸ் கம்ப்ளையிண்ட் பண்ணிட்டாரு. அவருக்கு என் மேல எக்கச்சக்க கோபம் வந்திடுச்சி....

உங்க மேல ஏனப்பா கோபப்படணும்?

காரணமிருக்கு நிர்மலா, குடோனோட கணக்கு வழக்குகளை சரிபார்க்க வேண்டியது என்னோட பொறுப்பு. என்னோட கவனக் குறைவால.... அவங்க பொய்க்கணக்கு எழுதினதை கண்டுபிடிக்காம விட்டுட்டேன். அதனால லட்ச லட்சமா ரூபாய் கொள்ளை போனதுக்கு நான்தான் காரணம்....

அது... கவனக்குறைவுதான்? நீங்க மன்னிப்பு கேட்டுட்டீங்கதானே....?

மன்னிப்பு கேட்டுட்டா போதுமா...? தப்பு தப்புதானே..? அதான் முதலாளி கோபப்படுறார்...

அப்படி கோபத்தில் என்னதான்ப்பா சொல்றார்?

களவு போன தொகைக்கு நான் பொறுப்பேற்கணுமாம்.... எப்படியாவது அந்த தொகையை வசூலிக்கணுமாம்....

அது எப்படிப்பா முடியும்... களவு செய்தவங்கதான் ஓடிட்டாங்களே?

அதைத்தான் நானும் சொன்னேன். ஆனா' அவர் விடாப்பிடியாய் கோபப்படுறார். நான்தான் பொறுப்பேற்கணுமாம். ஏதாவது செய்யுங்கன்னு சொல்றார்....

அப்பா தலையில கைவைத்து பேசுவதைக் கண்டு நிர்மலா திகைக்கத்தான் செய்தாள். அதே நேரத்தில் அப்பாவை எப்படி சாந்தப்படுத்துவது ஆறுதலளிப்பது என யோசித்தவள், அப்பா எனக்கு ஒன்று புரிகிறது.... நிறைய ரூபாய் மோசடி போன திகைப்பில் முதலாளி அப்படிப் பேசியிருப்பார் என நினைக்கிறேன். நீங்க ஒரு வார்த்தை அவரை எதிர்த்துப் பேச வில்லையா? என்றாள்.

சதாசிவத்திற்கு நிஜமாகவே நிர்மலாவின் பேச்சு ஆறுதலளித்திருக்க வேண்டும். மெல்ல நிமிர்ந்து கொண்டார். நீ சொல்வது சரிதான் நிர்மலா. அவ்வளவு பெரிய தொகை இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்றால்... எந்த முதலாளிக்குத்தான் கோபம் வராமல் போகும்? ஆனால்.., நான்.... நான்.... அது தெரிந்துதான் ஒரு வார்த்தை எதிர்த்து பேசவில்லை, தலையாட்டியபடி நான் வந்துவிட்டேன்....

அப்டபாவின் மனநிலை மாறியது கண்டு உள்ளூர மகிழ்ந்த நிர்மலா தொடர்ந்து அவரை சாந்தப்படுத்தும் விதத்திலே பேசினாள்.

ரொம்பவும் நல்லது செய்தீர்கள். நீங்கள் மட்டும்; எதிர்த்து ஏதாவது பேசியிருந்தால் அவரது கோபம் அதிகரித்திருக்கக் கூடும்.... என்றாள்.

சதாசிவம் அதை ஆமோதித்தவர் ஏதோ யோசனையுடன் நிர்மலாவைப் பார்த்தார்.

நிர்மலா எனக்க இன்னும் ஒரு விஷயமும் தோன்றுகிறதம்மா....



என்ன விஷயமப்பா?

உனக்கத்தான் தெரியுமே? எனக்கு இந்த மாதத்துடன் வேலை ஓய்வு.... ரிட்டையர்மெண்ட் வருகிறது. நான் வேறு வேலையை விட்டு போய்விட்டால், இந்த மோசடி கணக்கு விபரங்களை கண்டுபிடிப்பது சிரமமாக விடும் என அவர் நினைத்திருக்கலாம்.... எனக்கு வேலை நீட்டிப்பு செய்வது பத்தி அவர் யோசித்திருக்கலாம்....

அனால்... உங்கள் உடல் நிலை அதற்கெல்லாம் ஒத்துவராதே.... அதுவும் உங்கள் முதலாளிக்கு தெரிந்ததுதானே?

ஆமாம்.... ஆமாம்... நிர்மலா.... அதனால் எனக்கு ஒன்று தோணுகிறது. நாளை நான் அலுவலகத்திற்கு செல்லும்போது நீயும் என்னுடன் வா. நாம் இருவரும் முதலாளியுடன் பேசுவோம். அவர் என்னதான் நினைக்கிறார் என தெரிந்து கொள்வோம்....

சதாசிவம் சொன்னதற்கு வரப்போகும் ஆபத்தையறியாமல் பலமாக தலையாட்டி ஆரம்பித்தாள் நிர்மலா.




மறுநாள் அப்பாவுடன் அவர் வேலை பார்க்கும் அலவலகத்திற்கு நிர்மலா கிளம்பினாள். சதாசிவம் வேலை பார்ப்பது. ஆர்.கே. டெக்ஸ்டைல்ஸ் என்னும் மிகப் பெரிய துணி ஏற்றுமதி நிறுவனமாகும். நிர்மலா அவ்வப்போது தந்தையிடம் பேச அலுவலக ரிசப்ஷன் வரை சென்றிருக்கிறாள். ஆனால் இம்முறை உள்ளே நிர்வாக கட்டிடத்திற்கு தந்தை கூட்டிச் சென்ற போது பிரும்மாண்டமான அலுவலக சூழ்நிலையைக் கண்டு பிரமிக்கத்தான் செய்தாள்.

நிர்வாக இயக்குநரின் ரூமை அடைந்ததும்; சதாசிவம், அவளை வெளி இருக்கையில் உட்காரச் சொன்னார்.

முதலாளி வரவில்லை. வந்ததும் உன்னை அழைத்துச் செல்கிறேன்....

சதாசிவம்சொல்லி விட்டு மற்றொரு அலுவலக பிரிவுக்கு பார்வையிட கிளம்பினார்.

நிர்மலா, சுற்றும் முற்றும் பார்த்தபடி காத்திருந்தாள்.

கொஞ்ச நேரத்தில்...

பெரிய நீளமான பளபளப்பு கார் அலுவலக முகப்பில் வந்து நின்றது.

உள்ளிருந்து சூட்கேஸும் கையுமாய் விடுவிடுவென இறங்கினான் அவன்.

மிடுக்கான நடையுடன் வேகமாய் வந்தவனின் முகத்தைப் பார்த்து நிர்மலா அதிரத்தான் செய்தாள். நேற்று ராஜா அட்வர்டைசிங் ஏஜென்சியில் முதலாளியாய்ப் பார்த்த அவனேதான்! அவளிடம் கமிஷன் தருவது போல் பேசி அவளை பரிசோதனை நடத்தியவன். கொஞ்சமும் யோசிக்காமல் ஒரு லட்ச ரூபாயை அன்பு இல்லத்திற்கு நன்கொடையாய் அளித்தவன்! அவன் எப்படி இங்கே?

அவளது மனக் கேள்விக்கு அவன் விருட்டென நிர்வாக இயக்குனரின் ரூமைத் திறந்து நுழைந்தபோது பதில் கிடைத்தது.

அப்படியானால்.... இவன்தான் முதலாளியா? அவளது தந்தை வேலை பார்ப்பது இவனிடம்தானா? இது கூட தெரியாமல் நேற்று துணிந்து நன்கொடை கேட்க சென்று விட்டோமே!

அவள் நினைத்துக் கொண்டிருந்த போது சதாசிவம் வந்து விட்டார்.



நிர்மலா, பார்த்தாயா? அவர்தான் முதலாளி....

ம்ம்.... அப்பா, அந்த ராஜ் அட்வர்டைசிங் கம்பெனிங்கறிது....?

அதுவும் இவருடையதுதான்....

அப்போ நிறைய பிசினஸ் பண்றாரா?

நிறையம்மா பரம்பரை பரம்பரையா துணி வியாபாரம். ஏற்றுமதி இறக்குமதின்னு நிறைய பிசினஸ் பண்றாங்க...

பணம் மட்டுமல்ல, குணமும் இருங்கப்பா.

என்னம்மா சொல்ற?

நிர்மலா நேற்று அன்பு இல்ல நன்கொடைக்காக சென்றதை விவரித்தாள்.

அப்படியா ஆச்சரியமா இருக்கே...!

அதற்குள் பணியாளர் வந்து அழைப்பதாய் கூற இருவரும் அறைக்குள் நுழைந்தார்கள்.

உள்ளே.... நந்தகுமார், மானேஜிங் டைரக்டர் என்று மின்னும் எழுத்துக்களுக்குப் பின்னால் கம்பீரமாய் அவன்.

ஓ.... நந்தகுமார்...? பிருந்தாவன நந்தகுமாரனா...? இதுதான் இவன் பெயரா?

அந்த நிலையிலும் நிர்மலாவின் மூளையில் அவனது பெயர் ராஜகுமாரனாய் பளிச்சிட்டு மறைந்தது.

சதாசிவத்தை கண்டவுடன் மரியாதைக்காக, வாங்க... அக்கவுண்டண்ட் சார்... என்றவன், நிர்மலாவின் மேல் பார்வை பட்டதும் அப்படியே நின்றான்.

இருவருர் பார்வையும் ஒரு விநாடி உள்வாங்கி ஸ்தம்பித்து விலகியது.

நீ.... நீ.... நீங்க?

சார், இது.... என் பொண்ணு நிர்மலா.... நேத்து கூட நீங்கதான் என்னோட முதலாளின்னு தெரியாம உங்ககிட்டவே டொனேஷன் வாங்கியிருக்கா....

அப்பா முந்திக் கொண்டு படபடவென சொல்ல தன்னையறியாமல் தலையைக் குனிந்த நிர்மலா, மறுகணமே நாம எதற்கு குனிய வேண்டும் என நிமிர்ந்து நேராய் அவனைப் பார்த்தாள்.

ஆனால் அப்பா அடுத்து சொன்ன வாக்கியம் அவளைத் தூக்கி வாரிப் போட்டது.

சார், நீங்க சொன்னபடி என் மகளை கூட்டி வந்திருக்கிறேன்.... என்றார் சதாசிவம் பவ்யமாய்.

என்ன சொன்னபடி என்னை கூட்டி வந்திருக்கிறாரா? என அதிர்வோடு அப்பாவை பார்க்க அவரோ தப்பு செய்தவரைப் போல் தலையைக் குனிய வைத்திருந்தார்.

இங்கு என்னதான் நடக்கிறது? எதற்கு நான் வரவேண்டும். என்னை ஏன் அழைக்க வேண்டும்?

அவள் குழப்பத்தை மேலும் அதிகரித்தான் நந்தகுமார்.

சதாசிவம் சார், நீங்க வெளியில் அமர்ந்திருங்கள். நான் உங்கள் மகளிடம் பேசிக் கொள்கிறேன்.

பதில் பேசாமல் சதாசிவம் வெளியே நடந்தார்.

நிர்மலா புரியாமல் அப்பா.... நீங்க.... எனக் கூப்பிடப் போக உஷ் என சைகையால் கூப்பிட்டு வாயில் விரல் வைத்து அவளை உட்காருமாறு ஏறக்குறைய அதட்டி ஆணையிட்டான் நந்தக்குமார்.

நிர்மலா வாய் பேசாது உட்கார்ந்தாள்.



அப்பா ஏதாவது சொன்னாரா?

சொன்னார்....

என்ன சொன்னார்...? நந்தகுமாரின் முகம் சீரியஸானது.

ஏதோ... பண மோசடி.... நடந்து விட்டது. அதற்கு தான் காரணமாகி விட்டதாக சொன்னார்.

பணம் எவ்வளவு என்று தெரியுமா?

பத்து பதினைந்து லட்சம் வரை... என்று அவள் முடிப்பதற்குள்.

பதினைந்து லட்சம் அல்ல.... எழுபது லட்சம்! என குரலை உயர்த்தி அழுத்தந்திருத்தமாய் நந்தகுமார் சொல்ல நிர்மலாவுக்கு சங்கடமாய் போய்விட்டது.

அவளை மேலும் சங்கடப்படுத்தியது அடுத்த அவனது வார்த்தைகள்.

எல்லாவற்றுக்கும் காரணம் உன் அப்பாதான். அவருடைய கவனக் குறைவுதான்...

நிர்மலாவால் பதில் பேச முடியவில்லை. எந்தவித உணர்ச்சியையும் காட்டாது, நிமிர்ந்து அவனையே பார்த்தாள்.

என்னதான் பணம் இருந்தாலும்.... எழுபது லட்சம் ரூபாய் சாதாரண தொகை இல்லை. அது கம்பெனிக்கு பெரும் இழப்பு....

புரிகிறது சார்.... அந்த ரூபாயை மோசடி செய்தவர்களை போலீஸ் மூலம் பிடித்து விட்டால்..? யோசனை சொல்லும் பாங்கில் நிர்மலா பார்த்தாள்.

ம்ம்ம்...அது நடக்கிற காரியம்தான். எனக்கு வேண்டிய போலீஸ் அதிகாரிகளிடம் தான் கேஸை ஒப்படைத்திருக்கிறேன்.

அவர் எப்படியும் கண்டுபிடித்து விடுவார். பணத்தையும் மீட்டு விடலாம்., ஆனால்....

சொல்லுங்க சார்....

பிரச்சனை அதுவல்ல...

பின் ஏது சார்?

இப்படி.... இந்த எழுபது லட்ச ரூபாய் மோசடியை கண்டுபிடிக்காம கவனக் குறைவாய் இருந்தது உன் அப்பாதான்....

அவன் சுற்றி சுற்றி அப்பாவிடமே வருவது கண்டு அவளுக்கு ஆச்சரியமாய் இருந்தது.

கவனக்குறைவாய் இருந்தால் அவரது தவறுதான். ஆனால் அப்பா.... பாவம்...

பாவம் என்று விட்டுவிடச் சொல்கிறாயா? என்னால் முடியாது... அதற்குரிய தண்டனையை அவர் அனுபவித்துதான் ஆக வேண்டும்....

நிர்மலாவின் குரல் கெஞ்சலாய் மாறியது.

சார், என் தந்தை முப்பது ஆண்டுகளுக்கு மேலாக ஒரு சிறு கரும்புள்ளி கூட இல்லாமல் இங்கே பணி புரிந்திருக்கிறார். இந்த முறை ஒரு சிறு தவறு நடந்து விட்டது...

சிறு தவறு அல்ல.... பெரிய தவறு.... அவன் திருத்தினான்.

இருக்கட்டும், பெரிய தவறுதான்.... அதற்காக அவரை பெரிய மனதுடன் மன்னிக்கக் கூடாதா?

மன்னிக்கப் போய்தான் இந்த தண்டனையை கொடுக்க முடிவு செய்திருக்கிறேன்.

என்ன... தண்டனையா? திகிலோடு பார்க்க நிதானமாய் எழுந்து அவள் முன் வந்து கைகட்டிக் கொண்டான் அவன்.



இதோ பார்.... உன் பெயரென்ன?

நி....நி...நிர்மலா சார்....

ம்ம், நிர்மலா.... உன் தந்தை இடத்தில் வேறு யார் இருந்தாலும்மோசடிக்கு காரணமானவர்கள் என்று கூறி ஜெயிலுக்கு அனுப்பியிருப்பேன். என்ன, உன் தந்தை ரொம்ப நாள் நம் கம்பெனிக்கு விசுவாசமாக உழைத்ததால் அவர் மீது கொஞ்சம் கரிசனத்தோடு நடவடிக்கை எடுக்க நினைத்திருக்கிறேன்....

என்ன நடவடிக்கை சார்?

சொல்கிறேன், முதலில் உன் தந்தை ஓய்வு பெற இன்னும் எத்தனை வருடங்கள் இருக்கிறது என்று உனக்குத் தெரியுமா?

தெரியும், மூன்று ஆண்டுகள் சார்....

ம்ம்.... ரொம்ப சரி. மூன்று ஆண்டுகள் இருக்கிறதுதான், ஆனால்...

சொல்லுங்கள் சார்...

அவர் அந்த மூன்று ஆண்டுகள் இனி வேலை பார்க்கத் தேவையில்லை. இன்றே அவருக்கு விருப்ப ஓய்வு கொடுத்து விடத் தீர்மானித்திருக்கிறேன்...

என்ன விருப்ப ஓய்வா?

ஆமாம். இப்படி ஒரு தவறு செய்தவர் இந்த ஆபீஸ் பக்கமே இனி தலைகாட்டக் கூடாது. அப்படித்தானே?

அப்படியும் வைத்துக் கொள்ளலாம்...

சார்... இதை கேட்டால் என் தந்தை ரொம்பவும் நொந்து விடுவார்....

வேறு வழியில்லை நிர்மலா. இவ்வளவு பெரிய தொகையை கவனக் குறைவால் கோட்டை விட்டவரை இன்னும் நான் வேலைக்கு வைத்துக் கொண்டிருந்தால்... அலுவலகத்தில் உள்ளவர்கள் என்னை நொந்து கொள்வார்கள்...

இவன் இப்படிக் கறாராய் பேசவும் ஒரு நிமிடம் நிர்மலாவுக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றாள்.

விஷயம் அத்தோடு முடியவில்லை! இன்னும் இரக்கிறது...

சொல்லுங்கள்.... என்றாள் சுரத்தில்லாமல.

உன் தந்தை கம்பெனியில் சொந்த காரணங்களுக்காக, உங்கள் படிப்புச் செலவிற்காக, ஐம்பதாயிரம் ரூபாய் கடன் வேறு வாங்கியிருக்கிறார்.... அதை எப்படி நான் வசூலிப்பது?

நீங்கள் சொல்லுங்கள்.... என்றாள் விட்டேந்தியாய்.

அதற்கும் ஒரு வழி தோன்றுகிறது..... என்றான் அவன்.

என்ன வழியோ....? என ஏறக்குறையாய் கிண்டலாகவே கேட்டாள் நிர்மலா.

ஆனால் நந்தகுமாரோ அவளது உணர்ச்சிகள் எதையும் பொருட்படுத்தாது சீரியஸாகவே அவளைப் பார்த்தான்.

உன் தந்தைக்குப் பதில் நீ என் கம்பெனியில் வேலை பார்க்க வேண்டும். வேலை பார்த்து கடன் ஐம்பதாயிரத்தை அடைக்க வேண்டும்.... என்றான் நிதானமான குரலில்..



## 4

நிர்மலாவுக்கு நடப்பதை நம்ப முடியவில்லை.



முழிப்பு வந்த பிறகும் போர்வையை விலக்க மனமில்லாமல் மாறி மாறி படுத்தாள். முந்தைய நாள் நடந்தது ஒவ்வொன்றாய் ஞாபகத்திற்கு வந்து பயத்தைக் கொடுத்தது.

அவள் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தும் நந்தகுமார் மசியவில்லை. கறாராய் இருந்தான். நான் சொன்னது சொன்னதுதான் என அதிகார தோரணையில் அவன் ஆணையிடுவது போல் சொன்னது அவளுக்கு எரிச்சலைக் கிளப்பியது. அவனைப் பற்றி உயர்வாய் பிருந்தாவன ராஜகுமாரன் போல் நினைத்த பிம்பம் உருமாறி சர்வாதிகாரனாய் கொடுங்கோல் அரசனாய் அவளைக் காட்டியது.

அவளது பயம் எல்லாம் அப்பாவிடம்எப்படிச் சொல்வது என்றுதான்.

நந்தகுமார் அறையை விட்டு வெளிவந்ததும் அப்பா ஆர்வமாய் துளைத்து விட்டார்.

நிர்மலா, முதலாளி என்ன சொன்னார்?

அது...

சொல்லுமா...

நிர்மலாவுக்கு சடக்கென மனதில் ஒரு யோசனை பளீச்சிட்டது.

அப்பா அவர் ஒர யோசனை சொல்கிறார்..

என்ன யோசனைம்மா?

நீங்கள் பார்த்த கணக்க வழக்குகளை என்னைப் பார்க்கச் சொல்கிறார். வேறு எதுவும் மோசடி நடந்திருக்கிறதா? என்று கண்டுபிடிக்கச் சொல்கிறார்..

அப்படியா...? என சதாசிவம் ஒரு கணம் யோசித்தவர் மறுகணமே முகம் மலர்ந்தார்.

அதுவும் நல்ல யோசனைம்மா...! நீ இந்த மாதிரி கணக்குகளில் புத்திசாலி. உன்னால் முதலாளி எதிர்பார்க்கிறபடி திறமையாய் செயல்பட முடியும். மேலும்... என்றபடி உற்சாகமாய் நிர்மலாவைப் பார்த்தார்.

சொல்லுங்கப்பா...

இதன் மூலம்வேறு ஒரு பெரிய வாய்ப்பும் உனக்கு கிடைக்கலாமம்மா..

வாய்ப்பா... என்ன சொல்கிறீர்கள்?

அதாவது வேலை வாய்ப்பு நிர்மலா. நான் பார்த்த வேலை அப்படியே ஈஸியாக உனக்கு கிடைத்து விட வாய்ப்பு இருக்கிறதே!

அதுவும் சரிதான்... ஒரு வழியாய் அப்பாவைச் சமாளித்து விடலாம் என்ற நம்பிக்கை பெருமூச்சாய் நிர்மலாவுக்கு வெளிப்பட்டது.

அப்பாவே தொடர்ந்து வழி ஏற்படுத்தினார். நிர்மலா, இது முன்பே நான் யோசித்த விஷயம் தான். என்னுடைய உடல் நிலை முன்பு போல் இல்லை., சர்க்கரை அளவு கூடினால் ஒரே படபடப்பாகி விடுகிறது. அதனால் நானே முதலாளியிடம் விருப்ப ஓய்வு பற்றி பேச நினைத்திருந்தேன். இப்போது இந்த வாய்ப்பு வசதியாய்ப் போய் விட்டது. நாளை முதல் எனக்குப் பதில் நீயே செல். முதலாளி விருப்பப்படி நடந்தாற் போல் இருக்கும். எனக்கு ஓய்வு கிடைத்தாற் போல் இருக்கும்.

நிர்மலா பலமாய் தலையாட்டியவாறு தந்தையையே கூர்ந்து பார்த்தாள். அப்பா நிஜமாகவே இப்படிச் சொல்கிறாரா.... இல்லை நந்தகுமார் சொல்லிய விஷயங்கள் இவருக்குத் தெரிந்திருக்குமா? என்ற சந்தேகமும் எழுந்தது.



ஆனால் தந்தையின் நடவடிக்கைகளில் எந்த சலனமும் இல்லாமல் இருக்கவே பயத்தை நீக்கினாள். மறுநாள் தந்தையே அவளை எழுப்பி முகம் மலர அலுவலகத்திற்கு அனுப்பு வைத்தபோது நிர்மலாவுக்கு நிம்மதியாகவும் இருந்தது.

வெளியே கிளம்பியவள் முதல் வேலையாய் அனுப்பு இல்லத்துக்குப் பூத்திலிருந்து போன் செய்தாள். ராஜாமணி அம்மாளிடம் சூழ்நிலை காரணமாக அப்பா அலுவலகம் செல்லும் விபரத்தையும் கூறி, இனி அன்பு இல்லப் பணிகளை மாலை ஆறு மணி முதல் இரவு ஒன்பது மணி வரை கவனிக்க ஆவன செய்யுமாறு வேண்டினாள். ராஜாமணி அம்மாள் பெரும் மகிழ்ச்சியுடன் அவள் யோசனைக்கு சம்மதம் சொல்ல குஷியடைந்தவளாய் போனை வைத்துவிட்டு கிளம்பினாள்.

ஆர்.கே.டெக்ஸ்டைல்ஸ்' அலுவலகத்தைஅடையும்போது சரியாக மணி ஒன்பது. ரிசப்ஷன் பெண் நிர்மலாவை பார்த்ததும் படபடவென கேள்விகள் வீசினாள்.

நீங்கதான்.... நிர்மலாவா?

ஆமா...

உங்க சர்டிபிகேட்டுகளை எல்லாம் எம்.டி.வாங்கி வைக்கச் சொன்னர்.... நிர்மலா தயாராய் கொண்டு வந்தவைகளை நீட்டினாள்.

நீங்க இந்த அப்ளிகேஷன் பாரங்களை பூர்த்தி செய்யணும்....

நிர்மலா வாங்கி பூர்த்தி செய்தாள்.

உங்களுக்கு அக்கவுண்டிங் செக்ஷன்ல அனுபவம் இருக்கா?

இருக்கு. ஆடிட்டர் ஒருவர்கிட்ட உதவியாளரா ரெண்டு வருஷம் பார்த்திருக்கிறேன்..

நிர்மலா சொன்னதை குனிந்து அப்ளிகேஷனிலே ரிசப்ஷன் பெண் எழுதிக் கொண்டாள்.

உங்களுக்கு ரெண்டு வருஷ காண்ட்ராக்ட் வேலைதான், நிரந்தரப் பணியில்லை.

காண்ட்ராக்ட் வேலையா?

ஆமா, உங்க அப்பா பேரில் ஐம்பதாயிரம் கடன் இருக்கு. உங்க மாச சம்பளம் நாலாயிரத்தில் மாதம் இரண்டாயிரம் பிடித்து ரெண்டு வருஷத்தில் ஐம்பதாயிரமும் வலோயிடும், கணக்கு புரியுதா?

புரியுது... உங்க எம்.டி.க்கு ரொம்ப பரந்த மனசுதான்....

நிர்மலா சொன்னதற்கு ரிசப்ஷன் பெண் புன்னகைக்காமல் நிமிர்ந்து ஒரு வெறித்த பார்வை பார்த்தாள்.

நேரா எம்.டி.ரூமுக்கு போங்க!

அங்க எதுக்குப் போகனும்? என்றாள் திரும்பவும் அவனது முகத்தைப் பார்க்க விருப்பமில்லாதவளாய்.

உங்களுக்கு எந்தப் பிரிவில் வேலைன்னு அவர்தான் சொல்வார்..

நிர்மலா சுரத்தில்லாமல் நடந்து எம்.டி.ரூமை நெருங்கினாள்.

அனுமதியுடன் நுழைந்தபோத பெரி குஷன் சேரில் சிங்கம் போல் நந்தகுமார் உட்கார்ந்திருந்தான்.

நுழைந்தவளை கண்கள் சுருக்கி பார்க்க இவளும் கோபமாய் பதிலுக்குப் பார்த்தாள்.

சட்டென ஒரு இகழ்ச்சி புன்முறுவல் அவன் இதழ்களில் ஓடியது.



ரொம்பவும் நன்றி... என்றான்.

நன்றியா எதற்கு?

என்னை பரந்த மனசுக்காரன் என்று பாராட்டியதற்கு...

ரிசப்ஷனில் பேசியது இவனுக்கு எப்படித் தெரியும் என அவள் திடுக்கிட.... கைகளால் சொடுக்கிட்டு எதிர் டி.வி. திரையை காட்டினான்.

அதிடில் அலுவலக க்ளோஸ் சர்க்யூட் காமிரா ரிசப்ஷனை காட்டிக் கொண்டிருந்தது.

இருந்தாலும் அவள் பின்வாங்கவில்லை.

நான் உள்ளதைத்தான் சொன்னேன். என்றாள்.

எது உள்ளது?

எனக்கு வேஷம் போடுவது பிடிக்காது...

நான் என்ன வேஷம் போட்டேன்? என்றான் அவன் குழந்தை போல.

புரியாதது போல் நடிக்காதீர்கள்....

நடிக்கவில்லை, விளக்கமாகச் சொல்....

என் தந்தை வைத்திருக்கும் ஐம்பதாயிரம் பாக்கியை வசூலிக்க இப்படி வேலை கொடுப்பது போல் ஓர் ஏற்பாடு.

அவன் கோபப்படாமல் நிதானமாய் கைகளைக் கட்டிக் கொண்டான்.

அது நியாயம்தானே? என்றான். அவள் முறைக்கவும், இதோ.... பாரம்மா... இந்தக் காலத்தில், கலியுகத்தில் ஒரு ரூபாய் கூட ரொம்பவும் மதிப்பு வாய்ந்தது. அப்படி இருக்கையில் ஐம்பதாயிரம் ரூபாய் பணத்தை போனால் போகிறதென்று விட்டுவிட முடியுமா?

அவள் வெறுப்பாய் முகத்தை வெட்டிக் கொண்டாள். இவனிடம் இனி என்ன பேச்சு?என்ற பாவனையில் நிமிர்ந்து என்னுடைய வேலை என்ன? என்றாள்.

அவள் மூஞ்சைத் தூக்கி வைத்துக் கொண்டு அப்படிக் கேட்டது அவனுக்கு சிரிப்பை வரவழைத்து விட்டது.

அடக்க முடியாமல் அவன் சிரித்தது அவளுக்கு கோபத்தை வரவழைத்தது. பாக்கியை வசூலிக்க இவ்வளவு தீர்மானித்தவருக்கு என்ன வேலை கொடுப்பது என்று தீர்மானிக்க முடியவில்லையாக்கும்? குத்தலாகக் கேட்டாள்.

அவன் அதற்கும் சிரித்தபடி, உன்னை மாதிரி திறமை சாலியை அதிபுத்திசாலியை வேலைக்கு வைத்துக் கொள்ளும் போது என்ன வேலை கொடுப்பது என்ற தடுமாற்றம் ஏற்பட்டு விடுகிறது என்றான்.

அவள் பற்களைக் கடித்துக கொண்டு சிலை போல் நின்று விட்டாள்.

நந்தகுமாரும் முகத்தை சீரியஸாக்கினான்.

உனக்கு வேலை...? என்றபடி நெற்றி சுருங்க யோசித்தவன், நிர்மலா, நீ என்னதான் என் மீது கோபப்பட்டாலும் உன் துடுக்குத்தனம் எனக்குப் பிடித்திருக்கிறது. என் ரூமில்தான் உனக்கு வேலை. இனி என் பர்ஸனல் செகரட்டரி நீதான்! என்றான் அவன்.




மறுநாள் நந்தகுமாரின் உதவியாளினி என்ற அலுவலக முத்திரையுடன் அவனது விசாலமான அறையிலே அவளுக்கு



இருக்கைஒதுக்கப்பட்டது.அவனுக்கு நேர் எதிர்இருக்கை என்றாலும் சிறிய பிளைவுட் தடுப்பு இடையே அவனை மறைத்திருந்தது.

எங்கே அந்த கொடுமைக்காரனை வேலை பார்க்கும் ஒவ்வொரு நிமிடமும் பார்க்காமல் அவனது பார்வை படாமல் இருக்கலாம் என நிம்மதியடைந்தாள். அவள் மேஜை முன், அவன் அழைக்க இண்டர்காம் ஒன்றும், அவனுக்கு வரும்தொலைபேசி அழைப்புகளுக்கு கனெக்ஷன் கொடுக்கும் எக்ஸ்சேஞ்ச் பாக்ஸும் வைக்கப்பட்டிருந்தது. முதல் நாள் முழுவதும் அவள் அந்த டெலிபோன்ஆப்ரேட்டர் வேலைதான் பார்த்தாள். நொடிக்கொருதரம் அவனுக்கு வந்த போன் அழைப்புகளை விசாரித்து விசாரித்து லைன் கொடுத்தாள். அழைப்பு மணி கிணுகிணுப்பதும் அதை எடுத்து பேசுவதும் ரிசீவரை கீழே வைப்பதுமாய் இருந்த வேலை அவளுக்கு எரிச்சலான அலுப்பை கொண்டு வந்தது.

மறுநாள் வேலைக்கு வந்ததும் இருக்கையில் உட்காராமல் அவன் முன் போய் நின்றாள்.

இதுதான் என் வேலையா? என்றாள்.

அவன் எது? என்றான் புரியாதவனாய்.

வெறும் போன் அழைப்புகளுக்குப் பதில் சொல்லும் டெலிபோன் ஆபரேட்டர் வேலை போரடிக்கிறது. வேற ஏதாவது கொடுங்கள்... என்றாள்.

போரடிக்கிறதா?

அவன் மறுபடி நெற்றியை சுருக்கினான்.

ம்ம்...அப்படியானால் கம்பெனி கிரெடிட் டெபிட் அக்கவுண்ட் பைல்களை தினமும் தரச் சொலகிறேன். அவைகளையும் சேர்ந்து கவனி.

அவள் வேறு எதுவும் பதில் சொல்லாமல் ஒற்றை ம் வார்த்தையோடு அகன்றாள்.

அவன் சொன்னபடியே வரவு செலவு டேலி கணக்குகள் அவள் மேஜைக்கு வர ஆரம்பித்தது. பெரிய லெட்ஜர்களில் இருந்த கணக்கு குறிப்பீடுகள், வங்கிக் காசோலைகைள், செலுத்த வேண்டிய லோன் தொகை கணக்குகள், வசூலாக்க வேண்டிய விபரங்கள் என சகலத்தையும் இழுத்துப் போட்டு வேலை பார்த்தாள். முன்பு ஒரு ஆடிட்டர் ஒருவரிடம் வேலை பார்த்த அனுபவம் அவளுக்கு ரொம்பவே கைகொடுத்தது.

எல்லாவற்றையும் குறித்த நேரத்தை விட மிகச் சீக்கிரமாகவே செய்தாள். அதிலும் அவளதுடேலி கணக்குகள், கணக்கு குறிப்பீடுகள் எவ்வித தவறுமில்லாமரல் துல்லியமாக இருந்தது கண்டு அக்கவுண்டு செக்ஷனிலே வியந்தார்கள். நந்தகுமாரே ரொம்பவும் ஆச்சரியப்பட்டவனாய் அவளை அழைத்துப் பாராட்டவும் செய்தான்.

அந்தப் பாராட்டலிலும் ஒரு சின்ன குட்டு வைக்க அவன் தவறவில்லை.

உனது பாணி என்னை பிரமிக்க வைக்கிறது பாராட்டுக்கள்.. என்றவன், நிர்மலா, நிஜமாகவே நீ அதிபுத்திசாலிதான்...! என முடித்தும் வைத்தான்.

நிரிமலாவும் அவன்கேலி செய்கிறானா இல்லையா என்பதை தெரிந்து கொள்ள முடியாமல், அதே பாவனையில் புரிந்தால் சரி.... என்று விடாது சொன்னாள். சட்டென அங்கிருந்து அகன்றாள்.

அவன் எப்போது கூப்பிட்டாலும் சரி, வந்து அவன் கேள்விகளுக்குப் பதில் சொல்லிவிட நொடிக்கு மேல் அவன் முன் நிற்க பிடிக்காதவளாய் வெடுக்கென அவள் அகல்வதை



நந்தகுமாரும் அடிக்கடி கவனித்து ஒரு முறை கேட்டும் விட்டான்.

நிர்மலா....

ம்...

ஒரு நிமிடம்.... என்னைப் பாரு....

பார்க்கப் பிரியமில்லாமல் கண்களை திசை திருப்பி, என்ன விஷயம்? என்றாள்.

ப்ளீஸ்...என்னைப் பாரேன்....

வேண்டுமென்றே கோபமாய் கருவிழிகளை உருட்டி வைத்துக் கொண்டு அவனைப்ட பார்த்தாள்.

இன்னும் என் மீது கோபம் குறையவில்லையா?

இது அலுவலக நேரம், நாம அலுவலக வேலையை மட்டும் கவனிப்போமா சார்? என்றாள் முதலாளியிடம்பேசும் பவ்யத்தை போலியாய் காட்டியபடி.

நந்தகுமார் சிரித்து விட்டான். ம்ம்.... இன்னும்.... நி..... என்னை புரிந்து கொள்ளவில்லை...

அமாம்... முழுதாய் பரிந்துக் கொள்ளவில்லை. ஆனால் புரிந்து கொண்ட அளவே போதும் போதும் என்றிருக்கிறது!

மறுபடியும் அதே விரைப்புடன் அகலப் போனாள்.

நிர்மலா...., நில்லு.

திரும்பி நடந்தவள் முகத்தை திருப்பாமல் அப்படியே நின்றாள்.

உன் தைரியம் எனக்குப் பிடித்திருக்கிறது... என்றாள்.

ஆனால் உங்கள் சர்டிபிகேட் எனக்குத் தேவையில்லை.... என்றாள் அவள் பட்டென்று.

ஆனால் அது எனக்குத் தேவைப்படுகிறது....

அவன் சொல்லவும் திரும்பி புரியாமல் அவனைப் பார்த்தாள்.

நான் ஒவ்வொரு மாதமும்எங்கள் தோட்டத்தை ஒட்டிய காட்டுப் பகுதியில் முயல் வேட்டைக்குச் செல்வது வழக்கம்....

ஓயோ....

இம்முறையும்வேட்டைக்காக இன்று மதியம் செல்ல விரும்புகிறேன்....

தாராளமாகச் செல்லுங்கள். யாரையாவது வேட்டையாட வேண்டுமென்றால் உங்களுக்கு குஷிதானே?

அவள் கேலியை பொருட்படுத்தாமல் சிரித்தவனின் பார்வை குறுகுறுப்பானது.

ஆனால் இம்முறை வேட்டைக்கு உன் போன்ற தைரியசாலியை கூட்டிச் செல்ல விரும்புகிறேன்.

அவன் சொன்னதும் ஒரு கணம் திக்கென்றது. அவளுக்கு. நம்மை ஏன் கூப்பிடுகிறான்....? என அதிர்ந்தாள்.

உனக்கு பயமாய் இருந்தால்.... வேண்டாம்.... பாவம்... உன்னை விட்டு விடுகிறேன்....

அவன் குரலை ஏற்றி இறக்கி ஒருவித பரிகாசமாய் தோள்களை குலுக்கி சொன்னபோது விசுக்கென அவளுக்குகோபம் வந்து விட்டது.

எனக்கு பயம் ஒன்றுமில்லை, வருகிறேன்.:.. என்றாள் ஆத்திரத்துடன்.



## 6

மதியம் இரண்டு மணி. நந்தகுமார் சொன்னபடியே ஜீப்பை எடுத்துக் கொண்டு கம்பெனி அவுட் ஹவுஸ் பக்கம் வந்து விட்டான். அவளும் தயாராக காத்திருந்தாள்.

ம்ம்... ஏறிக்கொள்... ஜீப்பை உறும விட்டபடி அவன் சொன்னபோது நிர்மலா எந்த சலனமுமில்லாமல் ஏறினாள். ஜீப் பெரிய தடித்த டயர்களுடன் காட்டுப் பாதைக்கு ஏற்ப வசதியாய் வடிவமைக்கப்பட்டிருந்தது. பின் சீட்டில் இரண்டு நீள குழாய் தப்பாக்கிகள், ரவைகள், பெரிய இரும்புத் தடி, பெரிய இரும்புத் தடி, டார்ச்லைட் என வேட்டைக்கு வேண்டிய பொருட்களை குவிந்திருந்தான். காலில் கணத்த பூட்ஸ், இறுக்கமான உடைகள், தலையில் ஹெல்மெட் தொப்பி என அசல் வேட்டைக்காரன் போன்ற அவனதுதோற்றம் அவளுக்கு சிரிப்பையே வரவழைத்தது. சாதாரண முயல் வேட்டைக்கு இப்படி ஒரு ஏற்பாடா?

அவளது இகழ்ச்சி புன்முறுவலை ஓரக் கண்ணால் கவனித்தவன் ஜீப்பின் வேகத்தைக் கூட்டினான். கம்பெனி அவுட் ஹவுஸை தாண்டி பின்புறமாய் தெரிந்த அடர்ந்த புதர்கள் மண்டி ஒற்றைச் சாலையில் ஜீப் விரைசலாய் சென்றது. ஓரமாய் கிடந்த கூலிங் கிளாஸை எடுத்துப் பொருத்திக் கொண்டு அவளைப் பார்த்தான்.

உனக்கு பயமா இல்லை?

போறது.... புலி வேட்டைக்கா? முயல் வேட்டைக்குத்தானே?

உங்களை விடவா? வாய் வரை வந்துவிட்ட வார்த்தைகளை அடக்கிக் கொண்டாள்.

அங்கு ஓநாய்கள் காட்டுப் பன்றிகள் சில சமயம் சூழ்ந்து கொண்டு விடும். அவைகளிடம் போக்கு காட்டி தப்பிப்பது சிரமமான காரியம்....

அவள் பின்புறமாய் திரும்பி துப்பாக்கிகளைப் பார்த்தாள்.

சுடக்கூடிய தப்பாக்கிகள் தானே?

அவளதுகேலி புரிந்தாலும் சீரியஸாகவே அவன் பேசினான்.

சுடக் கூடியது என்றாலும் துப்பாக்கியை எடுக்க அவகாசமில்லாமல் பாய்ந்து பிறாண்டி விடும்.... நீயெல்லாம் பயந்து விடுவாய்.

நானா....? பயப்படுவதா....?

அவள் சொன்னபோது அவனுக்கு கோபம் வந்திருக்க வேண்டும். முகத்தை இறுக்கிக் கொண்டான். மேற்கொண்டு ஒரு வார்த்தை பேசாமல் வண்டியை செலுத்துவதில் கவனமானான்.

நிர்மலாவுக்கு உள்ளூர பயம்தான். அடர்ந்த காட்டுச் செடிகள், வினோத வண்டு ரீங்காரங்கள், ஆள் நடமாட்டமில்லாத ஒதுக்குப்புற பகுதி என எல்லாமே அவளை மிரள வைத்தது. ஆனாலும் அவன் முன் தன் உணர்ச்சிகளை காட்டிவிடக்கூடாது என்பதில் உறுதியாய் இருந்தாள். கூடவே அவனது நினைவை மாற்றி, பேச்சை திசை திருப்ப விரும்பியவளாய் எனக்கு புலி வேட்டைக்குப் போய்ப் பழக்கம்.... என்றாள்.

அட... இதென்ன புதுக் கதை?

கதையல்ல, உண்மை என்அப்பாவின் தூரத்து உறவு முறை மாமா அப்போது முண்டந்துறை வனப் பகுதியில் பாரஸ்ட் ரேஞ்சராக பணியாற்றினார். ஒரு முறை நகர்



பகுதிக்கு வந்து அட்டகாசம் செய்யும் சிறுத்தைப் புலி ஒன்றைச் சுட்டுப்பிடிப்பதற்காக தனது உதவியாளர்களுடன் காட்டுக்குச் செல்லும்போது விருந்தாளியாய் சென்ற என்னையும் கூட்டிப்போனார்.

காட்டில் என்ன நடந்தது?

அது இதைவிட பெரிய பயங்கரமான காடு. நீள நீள மரங்கள். காட்டுச் செடிகள் என ஒரே அடர்த்தி ஜீப் செல்வதற்கு கூட சரியான பாதையில்லை. வனப்பகுதியின் உள்ளே ரொம்ப தூரமாய் சென்ற பின் அது நிகழ்ந்தது..

என்ன நிகழ்ந்தது?

மாடு ஒன்றை அடித்து துவம்சம் பண்ணிக்கொண்டிருந்த அந்த சிறுத்தைப் புலியைக் கண்டுபிடித்தோம். மாமா தாமதிக்காமல் துப்பாக்கி எடுத்து குறி பார்த்து சுட்டார். அவ்வளவுதான். புலி செத்து விட்டது...

அம்புலிமாமாவில் இது போன்ற கதைகளை சிறு வயதில் படித்திருக்கிறேன்....

இப்போது அவனது முகத்தில் கேலி படர அவளுக்கு கோபமானது.

ஐயோ... நான் சொல்வது நிஜம்....

அவன் நம்பாததற்கு அடையாளமாய் சிரிப்பை பெரிதாக்கினான்.

நம்பாவிட்டால்... எனக்கென்ன...? அவளும் சிலிர்த்துக் கொண்டாள்.

சினம் கொண்டவளாய் அவனை பார்க்க விரும்பாமல் எதிர்திசையில் வேண்டுமென முகதி;தை வைத்துக் கொண்டாள். அப்போது சரசரவென முட்புதர்களில் அசைவும் கரகரவென

சப்தமும் கேட்க திகிலடைந்தவளாய் அவன் கரங்களை பிடித்து உலுக்கினாள்.

அங்க.... அங்க... சப்தம்....

நந்தகுமார் ஜீப்பின் வேகத்தைக் குறைக்காமல் அவள் காட்டிய இடத்தை உற்றுப் பார்த்தவன் அதே சிரிப்புடன் இயல்பாகி, புதருக்கு வலப்புறமா கீழ் நோக்கி பாரு புரியும்.... என்றான்.

நிர்மலா கண்களை இடுக்கி அங்கு பார்த்தவள் அதிர்ந்து போனாள்.

பெரிய நீளமான மலைபாம்பு ஒன்று சிறிய மான் ஒன்றை வளைத்து உயிரோடு விழுங்கிக் கொண்டிருந்தது.

என்ன இது அக்கிரமம்....!!

வாய் விட்டு கத்தியே விட்டாள்.

அக்கிரமமா? அதற்கான இரை அது. தேடிப் பிடித்து விழுங்குகிறது.

துப்பாக்கியை எடுங்கள், முதலில் அதை சுடுவோம்....

ஸ்ஸூ.... நாம் வந்தது முயல் வேட்டைக்கு. பாம்பு வேட்டைக்கு அல்ல...

அவன் ஜீப்பின் வேகத்தை மேலும் கூட்டினான். அவனது பார்வை தற்செயலாய் அவள் மீது பட அவளது பயந்த முகம் தெரிந்தது.

புலி வேட்டைக்கே வோனவள் பாம்மைப் பார்த்து இந்த பயம் பயப்படுவது ஆச்சரியமாயிருக்கிறதே!

அவன் வேண்டுமென்றே சீண்டினான்.

அவளும் விடவில்லை.



நான் புலியைத்தான் பார்த்திருக்கிறேன். பயமில்லை என்றேன். ஆனால், பாம்பு...? பாம்மை முதன் முதலாய் இப்போதுதான் பார்க்கிறேன்...

அதனால் பயமாக்கும்?

அவன் முடித்து வைக்க அவளும் ஒப்புதலாக தலையசைத்தாள்.

அதற்குப்பின் கொஞ்ச நேரம் இருவரும் பேசவில்லை. வழி நெடுக இருந்த அடர்ந்த காட்டுச் செடிகள் மறைந்து பெரிய பெரிய மரங்கள் பச்சைப் பசேலென தென்பட ஆரம்பித்தன. வானமே தெரியாதபடி குடை பிடித்த இலைகளால் வெளிச்சம் குறைந்து இருள் படிய ஆரம்பித்து வண்டுகளில் ரீங்காரம் நொய்ய்ய்... என பெரிதாகிக் கொண்டே போனது. இரை தேடி திரும்பும் பறவைகளின் வினோத ஒலி வேறு விசித்திரமாய் கிளம்பி அவ்வப்போது பயங்காட்டிக் கொண்டிருந்தது. போய் கொண்டிருந்த நந்தகுமார் எதையோ கவனித்தவன், அடடா...! என நெற்றியை தேய்த்தவாறு வண்டியை நிறுத்தினான்.

என்னாச்சு?

பச்... பேசிக்கிட்டு வந்ததால் பாதை மாறி வந்துட்டேன்....

என்னது.... பாதை மாறிட்டீங்களா? என்றாள் அவள் அதிர்ந்து.

வழியில அடர்ந்த சவுக்குத் தோப்பு பக்கம் ஓரமா, நாம திரும்பியிருக்கணும். திரும்பாம நேரா வந்துட்டோம்... என்றபடி ஸீட்டில் இருந்து எழுந்து சுற்றிலும் உன்னிப்பாய் பார்த்தான்.

ஜீப்பின் இஞ்சின் ஓசையைத் தவிர திடுமென ஏற்பட்ட நிசப்தம் நிர்மலாவுக்கு பெரும் பயத்தை ஓட்டியது.

என்ன செய்யப் போறீங்க?

இன்னும் கொஞ்ச தூரம் போய் பார்க்க வேண்டியது தான்...

எதுக்கு... திரும்ப போயிரலாமே?

அ.... அது முடியாது. பாதை குறுக்குப் பாதை. ரெண்டு ஓரமும் பள்ளம், ஜீப்பை திருப்ப முடியாது....

சொல்லியபடி அவன் கியரை போட்டு ஜீப்பை வேகமாய் செலுத்தினான்.

நிர்மலா அவன் முகத்தையே உற்றுப் பார்த்தவள், எவ்வித பதட்டமுமில்லாத அசாத்திய கம்பீரம் ஒன்று ஓடுவதை அந்தச் சூழ்நிலையிலும் அதிசயித்துப் பார்த்தாள்.

மேலும் கொஞ்ச தூரம் சென்று வளைவு ஒன்றில் நந்தகுமார் ஜீப்பை ஒடித்த டமார் என பெருஞ்சப்தம் கேட்டது.

இருவரும் திடுக்கிட்டுப் போனார்கள்.

ஜீப்பின் இடது ஓர பின் டயர் கூர்மையா கல் ஒன்றில் மோதி வெடித்திருந்தது.

போச்சு, டயர் வெடிச்சிட்டு.... என்றபடி குலுங்கிய வண்டியை பிரேக் போட்டு நிறுத்தினான் நந்தகுமார்.

குலுங்கிய வேகத்தில் தடுமாறிய நிர்மலாவும் ஓரிரு நிமடங்கள் கழித்தே நிலைக்கு வந்தாள். டயர் பஞ்சரானதில் வண்டியே குடை சாய்ந்த தேர் போல் ஒருபுறம் தாழ்ந்துவிட.... இருவரும் இறங்கினார்கள்.

எவ்வளவு உறுதியான டயரு... எப்படி வெடிச்சது?

எனக்கும் அதே ஆச்சரியம்தான்!.... என்றபடி நந்தகுமார்டயரை ஆராய்ந்தவன் பெருமூச்சு விட்டான்.



என்ன ஆகியிருக்கு?

முள் காயம் தான்? பெரிய முள் ஒண்ணு டயரை குத்தி கிழிச்சிருக்கு. அதே இடத்தில் கூரா கல்லு பட்டதும் வெடிச்சிட்டு.

இப்போ என்ன செய்யப் போறீங்க?

பயப்படத் தேவையில்லை. ஸ்டெப்னி இருக்கு ஆனா....

என்ன சொல்ல வர்றீங்க?

அவன் பதில் சொல்லாமல் சுற்றும் முற்றும் ஆராய்ந்தபடி பார்த்தான்.

சூழ்நிலையைப் பார்த்தா சீக்கிரமே இருட்டிரும்னு நினைக்கேன்....

இருட்டிட்டா? அவள் புரியாதவளாய்க் கேட்டாள்.

இருட்டிட்டா. அவ்வளவுதான். இந்த அத்துவானக் காட்டில இருளோடு இருளா உட்கார்ந்துட்டு விடியற வரை காத்திருக்க வேண்டியதுதான்....

என்னது இரவு முழுக்க காட்டிலா?

அவள் அதிர்ச்சியின் உச்சத்தில் கேட்க அவன் சர்வ சாதாரணமாய் பார்த்தான்.

வேறு வழி?

ஐயோ வீட்டுல தேடுவாங்க...

....

ஏதாவது செய்யுங்க. நான் வீட்டுக்குப் போயாகணும்....

அவன் சிரித்தான்.

கொஞ்ச நேரத்துக்கு முன்னால புலி வேட்டைக்கெல்லாம் போயிருக்கேன்னு வீரம் பேசிய பெண்ணா இப்படி பயந்து நடுங்குகிறது?

அவளுக்கு கோபமே வந்தது.

கேலி செய்ய நேரமில்லை. யோசிங்க, இருட்டுறதுக்குள்ள இந்த காட்டுல இருந்து நாம வெளியே போயாகணும்....

நானும் அதைத்தான் யோசிக்கிறேன். ஆனா உன்னை மாதிரி பதட்டப் படக் கூடாது. பொறுமையா நிதானமா யோசிக்கணும். அப்பதான் மூளை தெளிவா வழி தேடும்... என்றபடி இரண்டடிட குறுக்கும் நெடுக்குமாய் நடந்தான். நெற்றியைத் தேய்த்தபடி சிந்தித்தான்.

நிர்மலா அவனையே உற்றுப் பார்த்தாள். ஆறடி உயரத்தில் ஆஜானு பாகுவாய் பிடறியை உலுக்கிக் கொண்டு ஒரு சிங்கம் போலவே தெரிந்தான். முகத்தல் எவ்வித பதட்டமும் இல்லாத அசாத்திய கூர்மை அவளை வியந்து பார்க்க வைத்தது. வேல்குத்தும் அவனது விழிகளது பார்வை சரட் சரட்டென அவள் கண்களில் பாய்ந்தபோது அப்படியே ஊடுருவது போல் இருந்து. அந்த மயக்கும் விழிகளை உருட்டியபடி பக்கத்தில் வந்து சொடுக்கிட்ட போது தான் அவள் நினைவுக்கு வந்தாள்.

என்ன வழி கண்டுபிடிச்சீட்டீங்களா?

ம்ம்... வழி ஒண்ணும் இல்லைங்கிறதை தெளிவா கண்டு பிடிச்சிட்டேன்....

என்ன சொல்றீங்க?

அவன் தோள்களை குலுக்கி உதடுகள் பிதுக்கினான்.

ஸ்டெப்னி டயரை எடுத்து மாட்ட எப்படியும் அரை மணி நேரம் பிடிக்கும்... இன்னிக்கு வானிலை சரியில்லாம



இப்பவே மங்க ஆரம்பிச்சிட்டு. இன்னும் பத்து பதினைஞ்சு நிமிஷத்திலே கடும் இருட்டாயிடும். அதுக்குள்ள நாம மறைவிடம் தேடியாகணும்...

மறைவிடமா?

ஆமா.. நாளை காலை விடியற வரைக்கும் இந்தக் காட்டுல பாதுகாப்பா நாம தங்கணுமே?

ஏன்... ஏன் ஜீப்பிலே உட்கார்ந்திருக்கலாமே?

உட்கார்ந்திருக்கலாம். ஆனா... மோப்பம் பிடிச்சு வர்ற கரடிகளுக்கு இரையாகவும் தயாராயிரக்கணும்..

என்ன... கரடியா?

அதேதான்... கறுப்பா... புஸுபுஸுன்னு முடியோடு....

அவள் கோபமாய் விடுவிடுவென அவன் பக்கத்தில் வந்தாள். உங்க கேலிக்கு அளவே இல்லையா? இப்போ போய் விளையாடுறீங்க?

விளையாடுறது நீதான்... சூழ்நிலை புரியாம....

என்ன சொல்றீங்க?

பத்து பதினைஞ்சு நிமிஷத்தில் இருட்டிடும். ஒருத்தர் முகத்தைக் கூட ஒருத்தர் பார்க்க முடியாதுன்னு சொல்றேன். நீ என்னன்னா கேள்வியா கேட்டுக்கிட்டு இருக்க...

சரி, நான் என்ன செய்யணும்?

நான் துப்பாக்கிகளை வைச்சுக்கிறேன். நீ உடைகளையும் அந்த லெதர் பேக்கையும் தூக்கிட்டு பின்னால் வா...

அவன் சொல்லிவிட்டு முன்னால் விறுவிறுவென்று நடக்க அவளும் சுறுசுறுப்பாண் எடுத்துக் கொண்டு பின் தொடர்ந்தாள். ஆகுனாலும் விரைசலான அவனது பூட்சு கால்கள் முன் அவளது செருப்புக் கால்களால் போட்டி போட முடியவில்லை.

வழி நெடுக முட் செடிகளும் இருக்க... சிரமப்பட்டே பின் நடந்தாள்.

அவள் ஜாக்கிரதையாக நடந்தாலும் காற்றில் அசைந்து ஒதுங்கிய முட்செடியொன்று சுரீரென அவளது வலது கால் சதைப் பகுதியை கிழித்து விட்டது.

ஸ்ஸ்...ஆ...ஆ... என வலியில் கத்தப் போனவள் அவனது அவசரமான நடையையும், சூழ்நிலையையும் உணர்ந்து பொறுத்துக் கொண்டு தொடர்ந்தாள்.

ரத்தம் சொட்டு சொட்டாய் உதிர்ந்து வழிவதை அவள் கவனிக்கா விட்டாலும் தற்செயலாய் திரும்பிய நந்தகுமார் கவனித்து விட்டான்.

ஹேய்... ரத்தம் என்ன இது?

அவன் தனக்காக பதட்டம் காட்டி திரும்புவது கால் வலிக்கு இதமான ஒத்தடம் தரும் சந்தோஷத்தைத் தர ஒரு கணம் மெய்மறந்து ரசித்தாள்.

உன்னைத்தான்... என்ன இது? அவன் உசுப்பில் நினைவுக்கு வந்தாள்.

ஒண்ணுமில்ல... முள் சிராய்ப்பு....

ரத்தம் ஒழுகுது... நீ பாட்டுக்கு நடக்க...?

நேரமாயிட்டுன்னு...

அதுக்காக.... என்ன பெண் நீ...? அவன் உரிமையாய் கடிந்ததோடு மட்டுமில்லாமல் கைகளால் வழியும் ரத்தத்தை அழுத்த துடைத்துவிட்டு சரட்டென தனது கர்ச்சீப்பை எடுத்து பாண்டேட்ட கட்டும் போட்டான்.

அவனது விரல் ஸ்பரிசம் அவளை திக்குமுக்காட வைத்ததென்றால், காலில் கட்டுப் போடும்போது மிக



நெருக்கமாக வந்த அவனது முகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் கண்கள் விரிய பார்க்கவும் செய்தாள்.

அவளுக்குத்தான் ஜிவ்வென இவ்வளவு உணர்ச்சிகளும் ஏற்பட்டிருக்க வேண்டும். அவனுக்கு எதுவும் நடவாதது போல, ம்...ம்... இப்போ சரி... நடக்கலாம்... என்றபடி முன்புபோல் நடக்க ஆரம்பித்துவிட்டான்.

ம்ம்... பார்த்து கொஞ்சம் விரைசலா நட... எப்படியும் உயரமான அந்த திட்டுப் பகுதியை நாம அமைஞ்சாகணும்...

அவன் கைகளால் தூரமாய் தெரிந்த சிறு குன்று போன்ற மணல் மேட்டுப் பகுதியை காட்டினான்.

அவ்வளவு தூரம் போனுமா? என்றாள் மலைப்பாய்.

வேறு வழியில்லை. அந்த திட்டுப் பகுதியிலதான் நாலைஞ்சு பெரிய பாறைகள் தெரியுது. நாம பயமில்லாம இரவு தங்கலாம்...

என்ன.... இரவு... இங்கயா...? இந்த அத்துவானக் காட்டிலா?

அவன் சிரித்தான்.

சரிதான்... விடிய... விடிய ராமாயணமத் கேட்ட கதையாச்சு...

எனக்குப் புரியுது... புரியுது.... ஆனா?

என்ன ஆனா?

என்னால் ஜீரணிக்க முடியல. இந்தக் காட்டுல போய் எப்படித் தங்க முடியும்?

வேறு வழி இல்லையே....

இதுக்கு முன்னாடி இப்படி தங்கி இருக்கீங்களா?

இல்ல, இதுவரை ஜீப் பஞ்சராகி சரித்திரமாயிட்டாக்கும்....

சரித்திரம் இது இல்ல...

பின்ன?

ஒர அழகான பெண்ணுடன் நடுக்காட்டில் தனியா.... என்றபடி மேலிருந்து கீழ் வரை அவளை ஒரு பார்வை பார்த்து ஊடுருவினான். அவளுக்கு என்னமோ செய்தது. தன்னையறியாமல் அவள் தலை குனிந்து கொண்டாள். அழகான பெண் என்ற அவனது சொல் அவளது மூளைக்குள் கலர் கலர் பட்டாம் பூச்சிகளை உருவாக்கி சிறகடிக்க வைத்தது.

இனம் புரியாமல் உருவான வெட்கத்தை தளர விட்டு அவள் நிமிர்ந்தபோது அவன் பாட்டுக்கு நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டிரந்தவன், என்ன மகாராணிக்கு கனவு வந்திட்டதோ...? என்றான்.

கனவெல்லாம் ஒண்ணுமில்ல....

பின்ன... ஒர நிமிடம் கண்ணோட இமை சொக்கி கருவிழி இரண்டும் மேல் நோக்கி கிறங்கிப் போனீங்க...?

நான் ஒண்ணும் கிறங்கல...

அந்த அனுபவத்துக்காக ஒரு ஏக்கம் இருக்கும். ஆனா பொண்ணுங்க வெளிக்காட்ட மாட்டாங்க...

என்ன அனுபவம்? என்ன சொல்றீங்க...?

புரியல...

புரியல... என்றாள் மேலும் புரியாதவளாய்.

அவன் சிரிப்பை நிறுத்தவில்லை. எத்தனை சினிமாப் படங்கள் பார்த்திருப்பாய்? இப்படி தனியா ஒரிடத்தில் ஹீரோவும் ஹரோயினும் மாட்டிக்கிட்டா... அப்படியே



ஒருத்தரையொருத்தர் கட்டிப் பிடிச்சுக்கிட்டு உணர்ச்சிகளுக்கு அடிமையாகி அந்த இன்பத்தை....

அவன் மேற்கொண்டு முடிப்பதற்குள், த்தூ... என நிஜமாகவே காறி உமிழ்ந்தாள்.

என்ன உமிழுற?

இதை விட அசிங்கமா உங்களால பேச முடியாது...

நா... நான் நானா பேசல. உன்னோட நினைப்பைப் பார்த்து சொன்னேன்....

நான்.... அப்படி நினைக்கல. நான் அந்த மாதிரி பொண்ணு இல்லை..

அப்போ ஸாரி கேட்டுக்கிறேன்...

அனாலும் அவளுக்கு கோபம் அடங்கவில்லை. எல்லாம் பணத் திமிர்! இவர் பெரிய மன்மதனாக்கும். இவரைத்ட தனியா வெட்கத்தை விட்டுவிட்டு அசிங்கத்துக்கு தயாராகி ஏங்குவாங்களாம். என்ன ஒரு இறுமாப்பு இவனுக்கு...! மூச்சு வாங்க உள்ளுக்குள் கொதித்தாள்.

கோபமிருந்தா.... வெளிப்படையா திட்டலாம்... அவளுடைய நிலையை புரிந்தவனாய் பேசினான்.

அனால் அவளுக்குப் பேச பிடிக்கவில்லை. தன்னை இவ்வளவு கேவலமாக நினைத்து விட்டானே? என்ற எண்ணம் வேறு எரிச்சலை ஏற்படுத்தியது. பல்லைக் கடித்துக் கொண்டு பின் தொடர்ந்தாள்.

இருவரும் மேலும் ஐந்து நிமிட நடைக்குப் பிறகு அந்த மணல் தட்டை அடைந்து விட்டனர். நந்தகுமார் கூறியது சரிதான். அவர்கள திட்டை நெருங்கும்போதே இருந்த கொஞ்ச நஞ்ச வெளிச்சமம் அகன்று இருள் வர ஆரம்பித்து விட்டது. இந்த இருள் கூட நல்லதுக்குத்தான். இவன்

முகத்தைப் பார்க்காமல் இருக்கலாம் எனத்தான் நிர்மலா ஆசுவாசப்படுத்திக் கொண்டா;ள.

நந்தகுமாரோ டார்ச் லைட்டை எடுத்துக் கொண்டு அதன் வெளிச்சத்தில் பெரிய பாறைகள் பக்கம் போய்ப் பார்த்தான். சுற்றும் முற்றுமாய் நடந்து ஆராய்ந்தான்.

ஹேய்.... நிர்மலா... இங்க.... வா...

எதிர் பாறை ஓரமாய் நின்றபடி உரக்க கூப்பிட்டான்.

முதல் முறையாய் தன் பெயரை அவன் உச்சரித்தபோது நிர்மலாவுக்கு என்னவோ சந்தோஷம் வரவில்லை.

அவன் மேல் உள்ள வெறுப்பை கட்டுப்படுத்திக்கொண்டு பக்கத்தில் போனாள்.

நந்தகுமார் டார்ச் லைட் அடித்து காண்பித்தான். இரண்டு பெரிய பாறைகளுக்கு இடையே பொந்து போன்ற சற்றே விசாலமான பகுதி தெரிந்தது.

இந்த இடத்தில பாறைகள் மூணு பக்கம் சுவர் போல தடுப்பா இருக்கு. நாம இரவு தங்க இதுதான் சரியான இடம்...

அவன் சொன்னதிற்கு பதில் பேசாமல் தலையாட்டினாள்.

அந்த லெதர் பேக்கில் பெரிய போர்வை ஒண்ணு இருக்கு. அதை கொஞ்சம் விரியேன்....

அவன் டார்ச் பிடிக்க அந்த வெளிச்சத்தில் போர்வையை எடுத்து விரித்தான்.

ஆ.... ஆங்.... உள்ளே கேண்டில்.... மெழுகுவர்த்தி கூட இருக்கும். தேடிப் பாரு.... அகப்படுதா?

பேக்கில் கைவிட்டு துழாவினாள். அவன் சொன்னபடியே இரண்டு மூன்று மெழுகுவர்த்திகள் அகப்பட்டன. அவற்றில் ஒன்றை எடுத்துக் கொடுத்தாள்.



மேட்ச் பாக்ஸ்.... என்றபடி அவன் பாக்கெட்டுகளில் துழாவி எடுத்துக் கொடுத்தான்.

செயின் ஸ்மோக்கர் போல பாக்கெட்டுக்குள்ளே தீப்பெட்டி...? என நினைத்ததை அவன் உணர்ந்தானோ என்னவோ, எனக்கு புகை பிடிக்கிற பழக்கமில்லை... தற்காப்புக்காகத்தான்! என்றான்.

நான் ஒண்ணும் கேட்கலை... என்றாள் கோபமாக.

தெரியும், நீ என் மேல கோபமா இருக்க.

புரிஞ்சா சரி....

ஆனா... நான் பேசினது புரியாமத்தான்...

என்ன ஒரு நெஞ்சழுத்தம்! டக்குனு கேவலமா, கீழ்த்தனமா மனசு நினைக்குறது!

அதுக்குத்தான் ஸாரி கேட்டுட்டேனே...?

ஸாரி... கேட்டா போதுமா? சரியாயிருமா?

வேணும்னா காலில் விழட்டுமா?

காலில் விழ வேண்டாம். கோணல் புத்தியை மாத்திட்டா சரி....

அதற்குப் பின் இருவரும் பேசவில்லை. கொஞ்ச நேரம் அமைதியாய் கழிந்தது. அந்த அமைதியை கிழித்தபடி வெளியே பேய்க் காற்றும், மரங்களில் உராய்வும், வினோத சலசலப்பும் பெரியதாய் எழும்பியது. சட்டென விசித்திரபிளிறல் சப்தம் ஒன்று கேட்க கதிகலங்க வைக்க, கோபமெல்லாம் மறைந்தவளாய், இது என்ன சப்தம்? என்றாள் பயத்தோடு.

இது ஓநாயின்.... பிளிறல்... என்றான் அவன்.

என்ன ஓநாயா?

ஆமாம்... காட்டு ஓநாய்கள் திமுதிமுவென மூன்றடி உயரத்திற்கு இருக்கும். கூட்டம் கூட்டமாய் இரைதேட கிளம்பும்.... நேரமிது....

இரை தேடவா.. அப்படியானால்?

பயப்படாதே. நம் பக்கம் அவகைள் வரவே வராது. அதற்காகவே வரும் வழியெல்லாம் துப்பாக்கி மதருந்தை கசிய விட்டு வந்திருக்கிறேன்...

துப்பாக்கி மருந்தா?

அதான் வெடி மருந்து! இந்த வெடிட வாசனைக்கு ஓநாய்களோ, வேறு எந்த மிருகமோ நம் பக்கம் வராது. நாம் தைரியமாய் இருக்கலாம்...

பயப்படாதே... அதுவும் நல்லதுக்குத்தான்....

நல்லதுக்கா?

ஆமாம்.. இன்னும் கொஞ்ச நேரம் போனதும் சுள்ளிகளை எல்லாம் போட்டு எரிக்க வேண்டும். நெருப்பும் புஙகை மூட்டமும் எழும்பும். அதன் பின் சிறுசிறு பூச்சிகள் தொந்தரவு ஏற்படாது....

பூச்சிகளா?

நான் பாம்புகளைச் சொன்னேன்....

அவன் சொல்லச் சொல்ல அவளுக்கு நா உலர்ந்து ஒட்டிக் கொண்டது. பேச்சே வரவில்லை. திடுமென வீட்டு நினைப்பு வேறு வந்துவிட்டது. இந்நேரம் அப்பா, தங்கையெல்லாம் தேடுவார்கள்... அலுவலகத்தில் விசாரிப்பார்கள். ஆனால், அவள் வேட்டைக்குப் போன விஷயம் யாருக்கும் தெரியாதே!

நீ வீட்டிற்க தகவல் சொன்னாயா? என்று அவன் கேட்டபோது எப்படி தன் போன்றே அவனுக்கும் நினைப்பு ஓடுகிறது என வியந்தாள்.

உன்னைத்தான்... சொன்னாயா?

மறுபடியும் அவன் கேட்க மறுத்து தலையசைத்தாள்.

ஆனால்... பரவாயில்லை. நீ என்னுடன் வந்தது மேனேஜருக்குத் தெரியும். அவர் உன் வீட்டுக்கு தகவல் சொல்லி பதட்டத்தை குறைத்து விடுவார்...

சரி.ட...

அவள் சொல்லிவிட்டு முகத்தை தொங்கப் போட்டவள் போல் வைத்துக் கொள் அவன் வேண்டுமென்றே அவளை உற்று அதிசயமாய்ப் பார்த்தான். கண்களை உறுத்தாத பச்சை வண்ண சுடிதாரில் அவள் அழகாகவே தெரிந்தாள். உடம்மை ஒட்டிய ஆடை அவள் அழகின் நளினத்தை வெளிப்படுத்தியது.

தன்னையே அவன் அப்படிப் பார்ப்பது அவளுக்கு எரிச்சலைக் கிளப்பியது.

என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்? என்றாள் வெடுக்கென.

அவன் சிரித்தான்.

உனக்கு உணர்ச்சியே வரவில்லையா?

அவன் மறுபடி உணர்ச்சி என்றதும் இன்னும் அந்தப் பேச்சை விடவில்லையா? என்ற சினத்துடன் அவனை முறைத்தாள்.

நான் சொன்னது பசி உணர்ச்சியை என்றான் அவன் அவசரமாய்.

எவ்வவு நேரமாகி விட்டது நாம் கிளம்பி? பச்சைத் தண்ணீர் கூட குடிக்கவில்லை. பசி வயிற்றை குடைகிறது...



சீக்கிரமாக ஏதாவது சாப்பிடுவோம்... என்றபடி அவளிடம் கொடுத்திருந்த லெதர் பேக்கை வாங்கித் திறந்தான்.

உள்ளிருந்து ப்ரெட் ஸ்லைஸும், ஜாம் பாட்டிலும் வெளியே எடுத்தான். அவனே அவசர அவசரமாய் ஜாம் தடவி சாண்ட்விச் ப்ரெட்டை அவளிடம் நீட்டிய போது அவள் வாங்க மனமில்லாமல் மறுத்தாள்.

பிகு செய்ய..... இது நேரமில்லை....

ம்ம்... வேண்டாம்...

புடி..... சாப்பிடு இப்போ......

ஏறக்குறைய அவள் கையில் திணித்து அதட்டல் போட்டதும் மறு பேச்சின்றி வாங்கி அவசர அவசரமாய் வாயில் திணித்தாள். ஒரு மணி நேரமாய் பசி பிடுங்குவதை அவளும் உணரத்தானே செய்தாள். ப்ரெட்டும் ஜாமும் அந்த சூழ்நிலைக்கு தேன் தடவிய பலாப்பழமாய் இனித்தது.

திங்குறதைப் பாரு....

அவன் கேலி செய்து சிரித்தபோது அவளாலும் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

சட்டென முத்துப்பற்கள் தெரிய அவள் சிரித்தது அவனை ரொம்பவும் ஈர்த்தது.

நீ அழகா சிரிக்கிறாய்... என்றான்.

போதும் அத்தோடு நிறுத்தி விடுங்கள். மேற்கொண்டு கற்பனை செய்ய வேண்டாம்... என்றாள் அவள் எதையோ யோசித்து.

கற்பனையா?

ம்ம்... கற்பனையில் பின் இந்த சிரிப்பும் எதற்காகவோ அழைப்பு விடுப்பது போல தோன்ற ஆரம்பித்து விடும்....

அவன் பதில் சொல்லாமல் குறும்பாய் உற்றுப் பார்த்தான்.

அவள் கோபம் கூடியது.

என்ன... ஒரு மட்ட புத்தி....! முணுமுணுத்தாள்.

சே... சே...!

அவள் தலையை வெட்டினாள்.

நீ நினைப்பது போல் இல்லை. உன்னை பரிசோதிக்கவே அப்படிப் பேசினேன்!

அது... என்ன பரிசோதனையோ?

பொதுவா சில வகைப் பெண்கள் அப்படிப் இருப்பார்கள்...

அப்படி என்றால்?

எளிதில் ஆண்களிடம் மசிந்து விடும்படி! ஆனால் நீ அப்படி இல்லை!

ஒருவேளை நான் அப்படியிருந்தால்...?

ம்ஹூம்...! நான் ஒண்ணும் மலர்களைத் தேடி அலைகிற மன்மத வண்டு அல்ல...

ஆனால் வலிய வரும் மலர்களை முகராமல் விடுவது கிடையாது... அப்படித்தானே?

அவள் சினமாய் கேட்க அவன் எளிதாய் புன்னகைத்தான்.

அப்படி வலிய மலர்கள் வந்ததும் இல்லை. நான் முகர்ந்ததும் இல்லை... போதுமா?



ம்ம்... நம்புகிற கதை! என சலித்தபடி ஒரு வழியாய் அவள் பேச்சை முடித்தாள். அந்தப் பேச்சில் நாலைந்து ப்ரெட்ஸ்லைஸ்களை இரவரும் காலி செய்திருந்தார்கள். அப்படியும் தாகம் அடங்கியபாடில்லை. அலைச்சலும் நடையும் அசதியைக் கொடுத்தது. அவளையறியாமல் அவளது இமைகள் மூடி மூடி திறந்தது.

அதை அவன் கவனித்து விட்டான்.

உனக்கு தூக்கம் வந்து விட்டது.... ம்ம்... நீ தூங்கு என்றபடி மற்றொரு போர்வையை மடித்து அவள் படுப்பதற்கு வாகாய் வைத்தான்.

நிர்மலா பதில் பேசாமல் படுத்தாள். அப்படியே களைப்பில் உறங்கியும் விட்டாள்.

நேரம் விரைந்து.... திரும்பவும் அவள் விழிப்புக்கு வந்தபோது மணி நள்ளிரவை தொட்டிருந்தது.

திடுக்கிட்டு விழித்தவளுக்கு சுற்றிலும் தீப்பந்தம் போல் பாறைகளைச் சுற்றி எரியும் மரக் கட்டைகளும், குவிந்த சுள்ளிகளும் மூலம் ஏற்பட்ட புகைமூட்டமே தெரிந்தது. நந்தகுமாரைக் காணவில்லை.

பதட்டமாகி சுற்றும் முற்றும் தேடிப் பார்த்தாள். பலம் கொண்டு கத்தினாள். ம்ஹூம்.... நந்தகுமார் இல்லை! கூடவே... இருந்த துப்பாக்கிகளும், இரும்புத் தடியும் காணாமல் போயிருந்தன. என்னாயிற்று நந்தகுமாருக்கு!

குழப்பத்துடன் பரிதவித்தவளாக நிர்மலா அப்படியே உட்கார்ந்து விட்டாள். நடு நிசியில் நட்ட நடு காட்டில் தனியாக... என்ன ஒரு நிலை!

தனியே விட்டுப் போன நந்தகுமார் மீது ஆத்திரம் ஆத்திரமாய் வந்தது.

கூடவே அந்த பயம்.

ஒருவேளை நந்தகுமாருக்கு ஆபத்து ஏதும் ஏற்பட்டிருக்குமோ? விலங்குகள் ஏதாவது அவனைத் தாக்கி.... அப்படி யோசிக்கும்போது துப்பாக்கிகள் ஞாபகம் வந்தது.

விலங்குகள் ஆபத்து என்றால்... துப்பாக்கி எடுத்து உபயோகித்திருப்பானே? அவளும் துப்பாக்கி சப்தத்தில் விழித்திருப்பாளே?

அப்படியானால் அப்படி நடக்கவில்லை.

பின் என்ன நடந்தது?

அவளது கேள்விக்கு விடை கொடுக்கும் விதமாய் கொஞ்ச நேரத்தில் நந்தகுமார் தோன்றினான். அவனது தோள் பட்டையில் வேட்டையாடிய காட்டு முயல்களும் நரியும் உயிரற்று தொங்கி கொண்டிருந்தன.




நந்தகுமார் வேட்டையாடிய வெற்றிக் களிப்போடு செத்த முயல்களை நரிகளை கீழே போட்டான்.

கொழுத்துப் பெருத்திருந்த காட்டு முயல்கள் சுடப்பட்டு கருப்பாய் ரத்தம் உறைந்து போய்... முயல்களின் கண்கள் மட்டும் திறந்து வெறித்த பார்வையில் இருந்தது பார்த்த நிர்மலா அரண்டு போனாள்.

என்ன இது கோரம்? என்றாள் கத்தலாய்.

கோரமா? எவ்வளவு கஷ்டப்பட்டு வேட்டையாடி வந்திருக்கேன் தெரியுமா?



இந்த வாயில்லா ஜீவன்களை சுட்டு வீழ்த்தியதற்கு பெயர் வேட்டையாடுவதா?

நாம் வந்ததே அதற்குத்தானே? அதனால்தான் டயர் பஞ்சராகி இந்த அத்துவான காட்டில் மாட்டிக் கொண்டாலும் வந்த காரியத்தைக் கவனிப்போம் என வேட்டையாடப் போனேன்...

கொஞ்சம் நீங்கள் வேட்டையாடிய ஜீவன்களின் முகத்தைப் பாருங்கள்...

நிர்மலா சொல்ல அவன் அப்படியே பார்த்துவிட்டு நிமிர்ந்தான்.

என்ன சதைப்பற்று நிறைய இருக்கிறது.... கொழுத்த கறி கிடைக்கும்...

நான் சொல்ல வந்தது அது இல்லை...

பின்ன என்னவாம்?

நீங்கள் சுடுவதற்கு முன் வரை அவை எப்படித் துள்ளித் திரிந்து உயிரோடு இருந்திருக்கும்?

உண்மைதான், சுட்ட பின் செத்து விட்டது.... என்றான் படு அலட்சியமாய்.

இப்படி இந்த வாயில்லா ஜீவன்களை சுட்டு வீழ்த்தி கொக்கரிப்பதா உங்கள் வீரம்?

அது... அது... அவன் ஒரு கணம் பதில் சொல்ல முடியாமல் திணறினான்.

அவள் முன்னால் வந்து கைகளை கட்டிக் கொண்டு அவளைப் பார்த்தான்.

இந்தக் காடு அவர்களது இடம். இங்கு சுதந்திரமாய் சந்தோஷமாய் அவகைள் வாழ்ந்து வருகின்றன. அவைகளது நிம்மதியை நாம் ஏன் கெடுக்க வேண்டும்?

அப்படியானால் வேட்டையே ஆடக் கூடாது என்கிறாய்...

ம்ம்... அப்படித்தான்...

என் முன்னோர் காலத்தில் இருந்து பரம்பரை பரம்பரையாக இந்தக் காட்டில் வேட்டையாடி வருகிறோம். என் தாத்தா எத்தனை புலிகளை வேட்டையாடி கொன்றிருப்பார் தெரியுமா? அரசாங்க சட்டம் தான் என்னைத் தடுக்கிறது. இல்லாவிட்டால் நீ சொல்வது போல் இந்த அப்பாவி முயல்களை வேட்டையாடுவதற்குப் பதில் பயங்கர புலிகளை வேட்டையாடியிருப்பேன்...

அவள் சிரிக்க ஆரம்பித்தாள்.

என்ன சிரிக்கிறா;?

அந்தக் காலத்து ராஜாக்கள் பொழுது போகாமல் இப்படி காட்டுக்குச் சென்று வேட்டையாடும் வினோத பழக்கத்தை வைத்திருந்தார்கள். அதை இன்னமும் கடைப்பிடிக்க வேண்டுமா?

அவன் ஒரு கணம் பேசாமல் அவளையே உற்றுப் பார்த்துவிட்டுச் சொன்னான்.

இதை... இந்த உபதேசத்தை எல்லாம் முன்பே உன்னை வேட்டைக்கு அழைத்து வரும்போதே சொல்லியிருக்கலாமே?

சொல்லியிருக்கலாம்... ஆனால் வேட்டை என்ற பெயரில் நீங்கள் என்ன தான் சொல்கிறீர்கள் என தெரிந்து விட்டு உபதேசிக்கலாம் என காத்திருந்தேன்.

அதுசரி...



அவன் தலையாட்டி தோள்களை குலுக்கியபடி திரும்பிக் கொண்டான். அத்தோடு அந்த பேச்சு நின்று விட்டது. நெருப்பு குறைவதைப் பார்த்து அவன் மேலும் காய்ந்த சுள்ளிகளை, சருகுகளை மரங்களின் இடையே இருந்து எடுத்து வந்தான். நிர்மலாவுக்கு அவனுக்கு உதவியாய் கட்டை ஒன்றின் மூலம் சருகுகளை கூட்டி எரியச் செய்தான். கடும் குளிரில் தகதகவென எரியும் நெருப்பிற்கு பக்கத்தில் இருப்பது சுகமாய் இருந்தது.

குளிர் ஜாஸ்தி... என்றாள்.

கடும் குளிர். இந்த நெருப்பு மட்டும் இல்லாவிட்டால் நாம் வெடவெடத்துப் போவோம்... என்றபடி அவன் பக்கத்தில் வந்தான். நெருப்பின் ஜுவாலையை வெளிச்சம் பட்டு தங்க மினுமினுப்பில் தேவதை போல் அவள் ஜொலித்துக் கொண்டிருப்பதை கண் கொட்டாமல் பார்த்தான். என்ன ஒரு அழகு...! என அவள் உடல் நளினத்தில் வியந்தவன் அப்படியே கிறக்கமாய் பார்த்தவன் அதற்கு மேல் அடக்க முடியாமல் சட்டென அவளை இறுகக் கட்டியணைத்தான்.

## 8

நந்தகுமார் திடீரென்று பக்கத்தில் இருந்த நிர்மலாவை அணைத்துக் கொண்டான். அணைப்பு என்றால் மயிலிறகல் வருடும்படி இதமான அணைப்பு. அதனால்தானோ என்னவோ நிர்மலாவும் எவ்வித எதிர்ப்பும் காட்டவில்லை.

இருவரும் சுயநினைவு இழந்தது போல் ஓரிரு நிமிடங்கள் கழித்து.

பின் டக்கென சுதாரித்து தீ பட்டது போல், இருவரும் விலகினர்.

ஏ...ன்...ன...இது? தவித்துப் போனவளாய் வாய் குழறிய வார்த்தைகளால் நிர்மலா கேட்டாள்.

நந்தகுமாரின் முகமும் கேலியோ சிரிப்போ இல்லாமல் சீரியஸாகவே இருந்தது.

பயப்பட வேண்டாம்... இதனால் ஒன்றுமில்லை என்றான்.

ஒன்றுமில்லையா?

நிர்மலா, நாம் இருவரும் வந்ததில் இருந்து சண்டைக் கோழி போல் எதிரும் புதிருமாய் பேசி சண்டை போட்டுக் கொண்டே இருந்தோம். அதற்கு எதிர்மறை விளைவு போல்தான் இந்த அணைப்பு நடந்தது. இதை பெரிது படுத்தாதே... பொருட்படுத்தவும்... செய்யாதே...

நந்தகுமார் பாட்டுக்கு சொல்லியபடி எவ்வித உணர்ச்சியுமில்லாமல் மீண்டும் சுள்ளிகளை பொறுக்கி நெருப்பு மூட்டுவதில் கவனம் செலுத்த ஆரம்பித்தான்.

நிர்மலா... ஒர நிமிடம் ஏற்பட்ட உணர்ச்சியின் விளிம்பில் ஏறக்குறைய விக்கித்து தான் நின்றாள். விதவிதமான உணர்வுகள் எழுந்து அவளை ஆட்டிப் படைத்தன. திடுமென அவன் அணைத்தபோது... தன்னை மறந்து அவன் நெஞ்சில் சாய்ந்த போது எங்கே போயிற்று புத்தி? என தன்னைத்தானே கேட்டுக் கொண்டாள். ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் ஒரிரு நிமிடங்களில் அவனது அணைப்பில் கிடைத்த சுகத்தை இனி வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாதது போல் தோன்றியது. அந்த சுகம் வாழ்நாள் முழுக்க தொடர்ந்து கிடைத்தால் வாழ்க்கை எப்படியிரக்கும் எனவும் சிந்தனை போக...



திடுக்கிட்டவளாய் புத்தி ஏன் இப்படி போகிறது என்று பல்லைக் கடித்தாள்.

நிமிர்ந்து அவனது முகத்தைப் பார்க்கவே தயக்கமாய் இருந்தது. நல்ல வேளை...! இந்த அணைப்பின் வேறு எந்த அர்த்தமும் கற்பிக்கவில்லை. அந்த வகையில் நிம்மதிதான்! பெருமூச்சு விட்டவள் இப்படியும் யோசித்தாள். நந்தகுமாருக்கு ஒன்றுமே ஏற்படவில்லையா? வலிய வந்து தன்னை அணைத்தவனுக்கு மனதுள் எப்படி எவ்வித உணர்ச்சிகளும் ஆட்கொள்ளாமல் இருக்க முடியும்? அது... சாத்தியமில்லையே...? ஆனால் அது சாத்தியம் என்பது போல் நந்தகுமாரின் நடவடிக்கை இருந்தது. அவன் பாட்டுக்கு எதுவுமே நடவாதது போல் சுள்ளிகளை பொறுக்கி நெருப்பு மூட்டுவதிலே கவனமாயிருந்தான். அவள் தான் திரும்பி அடிக்கடி அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் திரும்புவதாகவே இல்லை. சுள்ளிகளை எல்லாம் சேர்த்து பெரும் நெருப்பாய் மூட்டி விட்டு அவனே அவள் பக்கம் வந்தான்.

இன்று சிவராத்திரிதானே... என்றான்.

நிர்மலா அப்போது தான் அவன் கண்களைக் கவனித்தாள். நன்கு சிவந்து போய் தூக்கமில்லாத எரிச்சலில் இமைகள் துடித்துக் கொண்டிருந்தது. நாமாவது கொஞ்ச நேரம் தூங்கினோம். அவன் தூங்கவே இல்லை என்ற உணர்வும் நிர்மலாவுக்கு வந்தது.

நீங்க கொஞ்சம் தூங்குக்க.... என்றாள்.

நந்தகுமார் சிரித்தபடி, தூங்கவா? இதுதான் முக்கியமான நேரம்... என்றான்.

முக்கியமான நேரமா?

ம்ம்... மணி இப்போது நடு இரவு இரண்டை தாண்டுகிறது. இனிமேல்தான் நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் ஆபத்துதான்...

அபத்தா?

நிர்மலா, நான் எப்படி வேட்டையாட கிளம்பினேனோ அதுபோல் இக்டகாட்டின் பயங்கர மிருகங்களும் இரை தேடி கிளம்பும் நேரமிது..

ஐயோ, இப்ப என் செய்வது?

பயப்படவேண்டாம். இந்த நெரப்பு மிருகங்களை விரட்டி விடும். அதற்காகத்டதான் நிறைய சுள்ளிகளை போட்டு எரிக்கிறேன்... இனி பயமில்லை....

நிர்மலா பயம் நீங்கினாள். நந்தகுமார் அவள் பக்கமாய் நின்றவன் அப்படியே கீழே உட்கார்ந்து கைகளைக் கட்டிக் கொண்டான்.

நீயும்... உட்கார். நாம் ஏதாவது பேசிக் கொண்டிருப்போம் என்றான்.

பேசிக் கொண்டிருக்கவா? நிர்மலா புரியாமல் விழித்தாள்.

ம்ம்... பேசினால் நேரமும் போகும். தூக்கமும் வராது...

சொன்னவனை தலை சாய்த்து உற்றுப் பார்த்தாள் நிர்மலா. சீராய் வெட்டப்பட்ட அவனது அடர்த்தியான முடியழகும், அந்த அசதியிலும் அசாத்திய ஆண்மையோடு பார்த்துக் கொண்டே இருக்க வேண்டும் போலிரந்தது. கொஞ்ச நேரத்திற்கு மன் தன்னை அணைத்தது இவன்தானே? என்ற எண்ணமும் சிலிர்ப்பாய் ஓடியது. அப்படியே மெய் மறந்தவளை சட்டென உலுக்கிக் கொண்டு நினைவுக்கு வந்தான் நந்தகுமார்.

ம்ம்... என்ன வீட்டு நினைப்பா?



அ...அ...அது... ஆமா! சமாளித்தாள்.

நிர்மலா, உனக்கு உங்கப்பா விஷயத்துல என் மேல கோபம் இருக்கும்.

ம்ம்...

அனா... நான் அப்படி நடந்துக்கிட்டதுக்கு காரணமிருக்கு..

காரணமா?

அந்தக் காரணமும் நீ யோசிச்சா உனக்கே புரியும்...

நீங்களே சொல்லுங்க...

உங்கப்பாவுக்கு கணக்கு வழக்குல, தன்னோட கவனக்குறைவால பண மோசடி நடந்திருப்பது தெரிஞ்சதும் குற்ற உணர்ச்சி ரொம்ப அதிகரிச்சு அவரு பதட்டமாயிட்டாரு.

அதனால...?

உங்க அப்பாவுக்கு தொடர்ந்து கம்பெனியில வேலை பார்க்க இஷ்டமில்லை...

அப்படி சொன்னாரா?

சொன்னாரு.. ஆனா என்கிட்டே இல்ல. பர்ச்சேஸ் மேனஜருகிட்ட.....

அதனால்தான் நானே யோசிச்சு இப்படி ஒரு திட்டத்தை உங்கப்பா கிட்டே சொன்னேன். உங்க மகனையோ மகளையோ கம்பெனியில சேர்த்து விடுங்க. நீங்க விருப்ப ஓய்வு எடுங்கன்னு...

அப்ப... தப்பு செஞ்சதுக்கு தண்டனைன்கு அதப்பாகிட்டே சொல்லலையா?

இல்ல...

பொறகு... என் மூலமா சம்பளத்தில் பிடித்டதம் செய்யறதாச் சொன்னது...?

எல்லாம் பொய்...!

பொய்யா?

நந்தகுமார் பெரிதாய் வாய்விட்டுச் சிரித்தான்.

உங்கப்பாவுக்கு இப்படியொரு அழகான பொண்ணு இருக்கும்ன்னு நான் நினைக்கல. அப்படித் தெரிஞ்சதும் சும்மா உன்கிட்டே விளையாடினேன்....

நிஜம்மாவா சொல்றீங்க?

கண்களை விரித்து நம்ப முடியாமல் பலமாய் தலையசைத்தான்.

ரெண்டும் நிஜம்தான். என்றான்.

அது... என்ன இரண்டு?

ஒண்ணு நீ அழகான பொண்ணுங்கிறது... ரெண்டாவது நான் விளையாட்டுக்குச் சொன்னது.. ரெண்டுமே நிஜம்தான்...

இம்முறை உண்மையாகவே அவளது கன்னம் சிவந்தது. நேருக்கு நேர் முகத்துக் குழுகம் பார்த்து அவன் அழகைச் சொன்னது அவளை கிறங்கடித்தது. தன்னையறியாமல் கருவிழிகள் மேலேற கனவில் சொக்கிப் போனவள்... சட்டென சுதாரித்து நிஜத்திற்கு வந்தாள். நந்தகுமாரோ அவளது உணர்ச்சிகள் எதையும் உணராதவனாய் அவன் பாட்டுக்குப் பேசிக் கொண்டிருந்தான்.

உன் அப்பாவுக்கென்று மட்டுமில்லை நிர்மலா. நம் கம்பெனியின் அலுவலர்கள் அனைவருக்கும் அவர்கள் ஓய்வு வயதை நெருங்கும்போது அவர்கள் விருப்பப்பட்டால் கம்பெனியில் அவர்களது வாரிசுகளுக்கு வேலை கொடுப்பது



நம் அலுவலக பாலிஸி. அதனால் தான் உன் தந்தை மனம் நோகாமல் இருக்க உன்னை வரச் செய்து... தொடர்ந்து நந்தகுமார் பேசிக் கொண்டே போக... பார்த்த நிர்மலாவுக்கோ அவன் பேசுவது எதுவும் காதில் விழவில்லை. கண்களை அகல விரித்து அவனையே கண் கொட்டாமல் கிறங்கிப் போய் பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 9

மறுநாள் காலை நன்கு விடிந்து சூரியன் தெரிந்ததும் நந்தகுமார் ஜீப்பின் டயரை அகற்றி ஸ்டெப்னி மாட்டினான். அரை மணி நேரத்தில் எல்லாம் முடிந்து இருவரும் கிளம்பிவிட்டார்கள். கிளம்பும்போது அவன் வேட்டையாடிய முயல்களை எடுக்காததை நிர்மலா கவனித்தாள்.,

என்னாயிற்று... நீங்கள் வேட்டையாடியது...? என கைகளை காட்டினாள்..

நந்தகுமார் மறுப்பாய் தலையசைத்தான்.

நீ சொன்னது புத்தியில் உரைத்து விட்டது. பாவம் அந்த ஜீவன்கள் அவைகளைப் போய் வேட்டையாடி விட்டோமே... என்ற குற்ற உணர்வும் ஏற்பட்டு விட்டது..

அப்படியா?

இனி இப்படி வேட்டை என்ற பெயரில் முட்டாள்தனம் செய்வதைக் கூட விட்டுவிடலாம் என தீர்மானித்து விட்டேன்.

அவன் சொல்லச் சொல்ல நிர்மலாவுக்கு தன் பேச்சை அப்படியே கேட்கிறானே என உள்ளூர சந்தோஷம் இருந்தது.

நந்தகுமார் ஜீப்பை கிளப்பி வேகமாகச் செலுத்தினான். சரிவான பாதையைக் கண்டுபிடித்து முன்னேறினான்.

இருவரும் கொஞ்ச நேரம் எதுவும் பேசவில்லை. அப்படி பேசாதது கூட நிர்மலாவுக்கு ரம்மியமாயிருந்தது. நேற்று நடந்த நிகழ்ச்சிகள் எல்லாம் அவள் மதனதில் படமாய் ஓடிக்கொண்டிருந்தன. அடிக்கடி திரும்பி ஓரக் கண்ணால் சுருள் கேசம் பறக்க அவன் வண்டி ஓட்டும் அழகை ரசித்தாள்.

நந்தகுமாரோ வண்டியை செலுத்துவதிலேயே கவனமாயிருந்தான். எப்படியும் சரியான பாதையை கண்டுபிடித்து இந்தக் காட்டை விட:டு வெளியேறிவிட வேண்டும் என்பதில் அவனது நினைப்பு இருந்தது.

கொஞ்ச தூரத்தைக் கடந்ததும் லெதர் பேக்கில் இருந்து பிஸ்கெட் பாக்கெட்டுகளை எடுத்து இருவருமத் சாப்பிட்டனர். ஆயினும் யானைப் பசிக்கு சோளப் பொறி என்பதுபோல பசி அடங்கின பாடில்லை.

என்ன பசிக்கிறதா? என்றான்.

ம்ம்.. சமாளித்து விடலாம் என்றபடி நிர்மலா தண்ணிர் பாட்டிலை எடுத்து மடமடவெனக் குடித்தாள்.

இன்னும் தூரம் அதிகமா? என்றாள்.

ம்ம்... பாதி தூரத்தைக் கடந்து விட்டோம்...

மதியம் தாண்டுவதற்குள் போய் விடலாமா?

நானும் அப்படித்தான் நினைக்கிறேன்... என்றபடி நந்தகுமார் ஜீப்பை கிளப்பி மறுபடி செலுத்தலானான்.

ஆயிற்ற ஒரு வழியாய் மதியம் இரண்டு மணிக்கு ஊருக்குள் நுழைந்தார்கள். நிர்மலா மறுத்தும் அவளை அவள் வீட்டு முன்பே சென்று இறக்கி விட்டான். இரண்டு நாள்



நன்கு ஓய்வெடுத்து விட்டு அலுவலகம் வா...! எனவுத் சொல்லிச் சென்றான்.

நந்தகுமார் இரண்டு நாள் லீவு எடுத்துக் கொள்ளச் சொன்னாலும் நிர்மலா ஒரு நாளுக்கு மேல் இருக்க முடியவில்லை. அந்த ஒரு நாளும் தங்கையிடமும் அப்பாவிடமும் காட்டு அனுபவங்களை கதை கதைகதையாய்ச் சொன்னாள். நந்தகுமாரை நேரில் மட்டம் தட்டிக் கிண்டலடித்தாலும் வீட்டில் சொல்லும் போது அவன் கொஞ்சம் கூட பயமில்லாமல் வேட்டையாடியதை வீரமாகவேச் சொன்னாள்.

எல்லோரும் வாய் பிளக்கக் கேட்டாலும் திரும்பத் திரும்ப தான் நந்தகுமார் பற்றியே பேசிக் கொண்டிருப்பது கண்டு உள்ளூர திடுக்கிடவும் செய்தாள். ஒரு நாளைக்கு மேல் அவளால் வீட்டில் இருக்க முடியாமல் போகவே மறுநாளே ஹாண்ட் பேக்கை தூக்கிப் போட்டுக் கொண்டு அலுவலகத்திற்கு கிளம்பி விட்டாள்.

அலுவலகத்தை நோக்கிச் செல்கையில், திரும்பவும் இன்று நந்தகுமாரைப் பார்க்கப் போகிறோம்... பேசப் போகிறோம்... என்ற நினைப்பே பரபரப்பாய் தன்னை தொற்றிக் கொள்வதை தணுக்குற கவனித்தாள். ஒரு நாள் அவனைப் பார்க்காமல் இருந்து விட்டதாலே தவித்துப் போய் அலுவலகத்திற்கு கிளம்பி விட்டது போன்ற எண்ணமும் உண்மையாய் எழுந்து அவளை இம்சித்தது.ட ஆனாலும் அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை என தனக்குத்தானே சமாதானம் சொன்னவளாய் நடந்து கொண்டாள்.

அலுவலகத்தில் நந்தகுமார் முன்பே வந்து வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். அவனைப் பார்த்ததும் வழக்கமான ரெடிமேட் புன்னகையை உதிர்த்து விட்டு வேலைகளில் ஆழ்ந்து விட்டாள். கண்கள் விரிய அவனைப் பார்த்தவள் அவன் ஏதாவது கேள்விகள் கேட்பான் என

எதிர்பார்த்து ஏமாந்துதான் போனாள். தனது இருக்கையில் அமர்ந்து மேஜையைப் பார்த்தபோது அன்று டெஸ்பாச்சுக்குத் தயாராய் நிறைய கோப்புகள் இருப்பதைக் கவனித்தாள்.

உடனே அவசர அவசரமாய் அவளும் வேலைகளில் ஆழ்ந்தாள். கோப்புக்களை சரிபார்த்து, பாரங்களை பூர்த்தி செய்து கையெழுத்துக்காக நந்தகுமாரிடம் எடுத்துச் சென்றாள். நந்தகுமார் ஒவ்வொரு கோப்புகளாக வாங்கி சரிபார்த்துக் கையெழுத்திட ஆரம்பித்தான். கூடவே ஓரக் கண்ணால் அவளை நிமிர்ந்து பார்த்தபடி....

நிர்மலா... என அழைத்தான்.

அப்பாடா... இப்பவாவது பேச ஆரம்பித்தானே என்ற நிம்மதியில் ம்... என்றாள் அழுத்தமாக.

எப்படி இருந்தது? என்றான்.

எது? என்றாள் அவள் தெரியாதது போல்.

காட்டு அனுபவத்தை.... வேட்டையைச் சொன்னேன்...

வித்தியாசமாக இருந்தது... என்றாள்.

வீட்டில் ஏதும் சொன்னார்களா?

இல்லை என மறுத்தாள்.

உனக்கு பயம் ஒன்றும் ஏற்படவில்லையே?

நீங்கள் பக்கத்தில் இருக்கும்போது எனக்கென்ன பயம் என அவசரப்பட்டுச் சொன்னவள் மறுகணமே தன் பேச்சை உகணர்ந்து நாக்கை கடித்தாள்.

வியப்பாய் நிமிர்ந்தான் நந்தகுமார்! அவளை ஒரு கணம் ஊடுருவி பார்த்தவன், நான் பக்கத்தில் இருந்தால் பயம் வராதா? ஏதோ.... புலி வேட்டைக்கெல்லாம் சென்று வேட்டையில் அனுபவப்பட்டவள் போல் பேசினாய்..... என்று



கூறியபடி சிரித்தபோது அசடாய் சிரிப்பதைத் தவிர அவளுக்கு வேறு வழியில்லாமல் போயிற்று.

இன்னும் அவன் முன் நின்றால் வேறு எதையாவது உளறிக் கொட்டி விடப் போகிறோம்..... என பயந்தவளாய் கையெழுத்திட்ட கோப்புகளை வாங்கி அடுக்கியவள் அவசர அவசரமாய் அகலப் போனாள்.

ஆனால் அவனது குரல் அவளை நிறுத்தியது.

நிர்மலா, மதியம் என்னுடன் சாப்பிட வருகிறாயா? என்றான்.

சாப்பிடவா... எ....எதற்கு? என்றாள் உள்ளூர தவிப்பை அடக்கியபடி.

உன்னிடம் முக்கியமாக ஒன்று பேச வேண்டுமட்....

பேச வேண்டுமா? என்று ஆரம்பித்தவள், அதற்கு மேல் தவிப்பை அடக்க முடியாமல், என்ன விஷயம் என்று சொல்கிறீர்களா? என்றாள்.

நந்தகுமார் சிரித்தான்.

அவசரப்படாதே, அதை டிரைவ் இன்னில் வைத்துச் சொல்கிறேன்...

டிரைவ் இன்னா?

நான் டிரைவ் இன் ஹோட்டலைச் சொன்னேன். அங்கு சுவையான உணவை ருசித்தபடி அதைப் பேசுவோம்.... என அவன் முடித்ததும் வேறு வழியில்லாமல் தவிப்பை அடக்கியபடி இருக்கைக்கு வந்தாள். ஆனாலும் மனம் வேலையில் ஒப்பாமல் அவன் சொன்னதில் ஆர்வமாய் சுழன்று கொண்டிருந்தது.

மதியம் சொன்னபடியே வேலை முடிந்ததும் அவளை அழைத்துக் கொண்டு டிரைவ் இன்னும் கிளம்பினான் நந்தகுமார்.

ஹோட்டலை அடைந்து மேனு கார்டை பார்த்து உணவு வகைகளை ஆர்டர் செய்தான்.

அவனையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் நிர்மலா. ஏனோ... இப்போதெல்லாம் அவன் கண்களைச் சந்தித்தால் அதிலிருந்து அவளது கருவிழிகளை விலக்க அவளால் எளிதில் முடியவில்லை. பிடுங்கித்தான் வலுக்கட்டாயமாக வேறுபுறம் திரும்ப முடிகிறது.ட

அப்படியே இம்முறையும் பிடுங்கி வேறு திசையில் கண்களை வைத்தாள்.

ஆனால் நந்தகுமார், அவளை குறுகுறுப்பாய் பார்த்தான்.

நிர்மலா....

ம்....

அது.... ஒரு முக்கியமான விஷயம்.... அதை உன்னிடம் சொல்ல தயக்கமாய் இருக்கிறது....

தயக்கமா, என்னிடமா?

இம்முறை நிர்மலாவை குறுகுறுப்பு தொற்றிக் கொண்டது. ஆவலாய் அவனைப் பார்த்தாள்.

தயக்கமில்லாமல் சொல்லுங்கள்... என்றாள். இம்முறை அவளது கருவிழிகள் நேராக அவனோடு விழிகளில் மோதி ஐக்கியமாகி விடுவது போலிருந்தது.

நான் சொல்ல வரும் விஷயம் உனக்கு பிடிக்குமா பிடிக்காதா என்று தெரியாது.... நந்தகுமார் பீடிகையை நீட்டினான்.

முதலில் விஷயத்தைச் சொல்லுங்கள்....

இம்முறை கெஞ்சலாகவே அவள் குரல் ஒலித்தது.



ம்ம்... சொல்கிறேன்...

நந்தகுமார் தயக்கம் நீங்கினான். நிர்மலா, காதலைப் பற்றி என்ன நினைக்கிறாய்? என்றான் நேரிடையாய் அவளைப் பார்த்தவாறு.

நிர்மலா இந்தக் கேள்வியை எதிர்பார்க்கவில்லை. ஆனாலும் இனம் புரியாத உணர்ச்சியொன்று எழும்பி அந்தரத்தில் தட்டாமாலை போல் ஒரு சுற்று சுற்றி அவளை ஒரு ஆட்டு ஆட்டியது.

அ....அ...அது....அது....

பதில் சொல்ல முடியாமல் நிர்மலா தவித்தாள்.

சரி, நேரிடையாகவே விஷயத்துக்கு வாரேன்... என்றான் நந்தகுமார் அவள் மேல் பார்வையை விரித்தபடி.

மெய்சிலிர்க்க விக்கித்துப் போனவளுக்கு அடுத்து அவன் பேசிய வார்த்தைகள் இதயத்தில் சாட்டையடியாய் விழுந்தது.

நான் ஒரு பெண்ணைக் காதலிக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கேன். அவள் பெயர் ஆஷா! அமைதியாகச் சொன்னான் நந்தகுமார்.




நந்தகுமார் சொல்லச் சொல்ல நிர்மலாவின் தலையில் இடிதான் விழுந்தது. நான் ஒரு பொண்ணை காதலிக்க வேண்டிய கட்டாயம். அவள் பெயர் ஆஷா.... என்ற போது விளையாடுகிறானோ என்றுதான் நினைத்தாள். ஆனால் அவனது சீரியஸான மகம் உண்மையை பறை சாற்றியது.

யார் அந்த ஆஷா?

ஆஷாவைப் பற்றி விரிவாகவே சொல்ல ஆரம்பித்தான் நந்தகுமார்.

நிர்மலா, நான் சிறு வயதிலேயே தாய் தந்தையை இழந்து மாமா வளர்ப்பில் உருவானவன். என் மாமாதான் அன்பா ஆதரவா என்னை படிக்க வைச்சு ஒரு நல்ல நிலைமைக்கு கொண்டு வந்தார். நான் நிர்வகிக்கிற கம்பெனியில பாதி கம்பெனிகள் அவர் உருவாக்கினதுதான். எனக்கு தொழில்ல ஒவ்வொரு விஷயங்களா கற்றுக் கொடுத்தது தொழில் சூட்சமங்களை புரிய வைத்ததும் அவர்தான். அதனால் அவருக்கு நான் ரொம்பவும் நன்றிக் கடன் பட்டிருக்கேன். அந்த மாமாவோட பெண்தான் இந்த ஆஷா..!

நந்தகுமார் ஒரு கணம் நிறுத்தி விட்டு, அவளையே உற்றுப் பார்த்தான்.

உடைந்து போன துண்டாகிப் போன இதயத்தை இறுகப் பிடித்துக் கொண்டு எவ்வித உணர்ச்சியையும் காட்டாமல் கற்சிலை போல் உட்கார்ந்திருந்தாள் நிர்மலா.

நந்தகுமாருக்கு அவள் உணர்வில் இர்கிறாளா இல்லையா வென்று சந்தேகம் வந்து விட்டது.

நிர்மலா, கேட்டுக் கொண்டுதானே இருக்கிறாய்? என்றான்.

ம்ம்...சுரத்தில்லாமல் தலையசைத்தாள் நிர்மலா.

நந்தகுமார் தொடர்ந்தான்.

அந்த ஆஷாவைத் தான் நான் கல்யாணம் பண்ணிக்க வேண்டும் என்பது மாமாவின் விருப்பம். அவரது சொத்துக்கள் முழுவதும் எனக்கே கிடைக்க வேண்டும். அவைகளை நானே நிர்வகிக்க வேண்டும் என்பது அவரது தீராத ஆசை....

அவன் மறுபடியும் நிறுத்தினான்.



அவளுக்கு எரிச்சலாய் இருந்தது. அவன் பேச்சை அப்படி நிறுத்துவானாம்... அவள் சுவாரஸ்யமாய் கேட்பது போல் ம்ம் கொட்ட வேண்டுமாம்... என்ன ஒரு இக்கட்டான நிலை...?

வேறு வழியில்லாமல் அதே எரிச்சலுடன் ம் என்றாள்.

ஆனால் அதற்குப் பின்தான் விஷயமே இருக்கிறது நிர்மலா..

மறுபடியும் நந்தகுமார் சுவாரஸ்ய பீடிகை பிடிக்க நிர்மலா கனைக்காத குறையாய் ம்ம் என்றாள்.

அந்த ஆஷாவுக்கோ எனக்கோ அப்படி ஒரு எண்ணமே ஏற்படவில்லை....

அப்படி ஒரு எண்ணம் என்றால்..? நிர்மலாவின் முகம் புதிரானது.

ஒருவரையொருவர் விரும்புவதோ... இருவரும் கல்யாணம் செய்து கொள்வதோ... என்ற எண்ணம்...

அதற்கான காரணம்தான் என்னவோ? கேலியாய்த்தான் நிர்மலாவின் குரல் எழுந்தது.

காரணம் ஒன்றும் பெரிதல்ல. என் மாமாதான் அப்படி நினைத்தாரே தவிர, நாங்கள் அப்படி நினைக்கவில்லை. மேலும் ஆஷாவின் டைப், அவளுடைய பழக்க வழக்கங்கள் எல்லாம் வேறு. நிச்சயம், எனக்கு ஒத்துப் போகாது. ஆனால் மாமா பிடிவாதம் பிடிக்கிறார். அதுதான் என்னை யோசிக் வைக்கிறது..

ஓஹோ...

இப்போது மாமா என்ன சொல்கிறார் தெரியுமா?

சொல்லுங்கள்...

ஒன்று... நான் எப்படியாவது ஆஷாவை விரும்பி கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமாம். இல்லையெனில் ஆஷாவுக்கு கல்யாணமே கிடையாதாம். வாழ்நாள் முழுவதும் அவள் கன்னியாகவே இருந்து விட்டுப் போகட்டுமாம்...

இது.. என்ன புதுக்கதை?

கதையல்ல... நிபந்தனை...! என்னைத் தவிர வேறு யாரையும் ஆஷாவின் மாப்பிள்ளையாய் நினைத்துப் பார்க்க முடியாது என்பதில் குறியாய் இருக்கிறார்...

அதற்கு நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?

கேட்ட நிர்மலாவை கூர்ந்து பார்த்தவன், முயற்சித்துப் பார்க்கப் போகிறேன்.... என்று சொல்லிவிட்டு ஒரு நிமிடம் நிறுத்தி,

காதல் முயற்சி.... என்றான்.

என்ன காதல் முயற்சியோ? குரல் அதிர கேட்டவாறு அவனைப் பார்த்தாள்.

ஆமாம் நிர்மலா. இந்த ஆஷாவை காதல் பண்ண அவள் மீது எனக்கு ஆசை வர முயற்சித்துப் பார்க்கப் போகிறேன். அதைியாய் அவன் குரல் ஒலித்தது.

நல்ல முயற்சிதான்.... கிண்டல் பறக்க அவள் சொன்னாலும் சீரியஸாகவே நந்தகுமார் தொடர்ந்தான்.

ஆனால் நிர்மலா, இப்போது வேறு ஒரு விஷயத்தை தெளிவாக உணர்கிறேன்...

அப்படி உங்கள் மூளையில் உதித்தது எதுவோ?

அதாவது.... ஆஷாவை நான் விரும்ப வேண்டும் என்றால்... முதலில் அவள் மனம் மாறி என்னை விரும்ப வேண்டும். அப்படி அவள் என் மீது ஆசை வைத்தால்தான்



எனக்கு அவள் மேல் ஈடுபாடு, இந்தக் காதல் எல்லாம் வரும் என்பதைப் புரிந்து கொண்டேன்...

நல்ல கண்டுபிடிப்புதான்... தலையை பலமாய் ஆட்டி அவன் பார்க்காத போது உதட்டைச் சுழித்தாள்.

நந்தகுமார் மேலும் சீரியஸானவன் கைகளைக் கட்டிக் கொண்டு அவளைக் கூர்மையாய்ப் பார்த்தான்.

நிர்மலா, நான் சொல்வது உண்மைதானே?

எது...? என்றாள் புரியாதவள் போல்.

அதாவது ஒருவர் நம்மை விரும்பினால் தானே.... நமக்கும் அவர் மீது ஆசை வரும்... ஒரு வித ஈடுபாடு ஏற்படும்...?

அதாவது காதல் ஈடுபாடு.... அப்படித்தானே?

ம்ம்...

இம்முறை நந்தகுமார் பலமாய் தலையசைத்தான்.

அவளோ உள்ளுக்குள் சரியான மரமண்டை. நான் உன்னை விரும்புகிறேன். பதிலுக்கு நீ என்ன விரும்பவா செய்கிறாய்? என கொதிப்பாய் நினைத்தாள்.

நிர்மலா என்ன யோசிக்கிறாய்? என்றான் நந்தகுமார் விடாமல்.

ஒன்றுமில்லை.. நிர்மலா தலையை வெட்டினாள்.

உன் கருத்தை தைரியமாகச் சொல்..

அ...அ...அது நிர்மலாவுக்கு எரிச்சலாக வந்தது.

உன் அபிப்பிராயத்தைச் சொல் நிர்மலா..

பேசாமல்... நீங்கள் உங்கள் எண்ணப்படி செய்ய வேண்டியதுதானே...? ஆஷா உங்கள் மீது காதல் கொள்ளும்படி

நடந்து கொள்ள வேண்டியததானே...? பொரியாத குறையாய் சொல்லி முடித்தாள். அவள் சொல்லி முடித்ததும் உற்சாகமாய் தலையாட்டினான் நந்தகுமார்.

கரெக்ட்! அதைத்தான் செய்யப் போகிறேன்... என்றவன் முத்தாய்ப்பாய், அதற்கு நீதான் நிர்மலா உதவ வேண்டும். உதவி செய்யப் போகிறாய்... என்று முடித்தும் வைத்தான்.

## 11

என்ன எநான் உதவி செய்ய வேண்டும்? என்றபடி நிர்மலா அதிர்ந்து தான் போனாள்.

அனால் நந்தகுமார் அதற்கும் கதை போன்ற ஒரு காரணம் வைத்திருந்தான்.

நிர்மலா, ஒரு பழமொழி சொல்வார்களே... ஒரு பெண்ணின் மனதை இன்னொரு பெண்ணால்தானே சரிவர புரிந்து கொள்ளமுடியும் என்று. அதேபோல ஆஷா மனதில் என்னைப் பற்றி என்ன இருக்கிறது.... எதனால் அவளுக்கு என் மீது ஈடுபாடில்லை என்று கண்டுபிடிக்க வேண்டும்... அதை கண்டுபிடித்து விட்டால் எல்லாமே எளிதாகி விடும்...

அப்படி பெண்ணின் மனதை நீங்கள் ஆராய்ச்சியில் கண்டுபிடிக்க என் உதவி வேண்டுமாக்கும்?

அவள் குத்தலாய் கொதிப்பாய் கேட்டாள்.

ஆனால் நந்தகுமார் அவளது உணர்ச்சிகளை கொஞ்சமும் உணராதவனாகவே பேசினான்.

மிகச் சரியாய் சொன்னாய் நிர்மலா. நீ தான் அதற்கு சரியான ஆள்!

ஓஹோ...

நிர்மலா.... அந்த ஆஷாவும் கிட்டத்தட்ட உன் டைப்... உன் சுபாவம் தான். வெடுக்வெடுக்கென கோபித்துக் கொள்வாள்... என்று அவன் அடுக்கிய போது வேகமாய் இடை மறித்தாள் அவள்.

என்னை... என்ன.... கோபக்காரி... சிடுமூஞ்சி என்று சொல்கிறீர்களா?

நந்தகுமார் கரங்களை சாந்தமாய் அசைத்தான்.

கோபித்துக் கொள்ளாதே நிர்மலா... ஒரு உதாரணத்திற்கு அப்படி ஒப்பிட்டேன்...

என்ன ஆஷாவோடு ஒன்றும் நீங்கள் ஒப்பிட வேண்டாம்... நிர்மலாவுக்கு நெஞ்சு தணலாய் ஏறி இறங்கியது.

சரி... ஓகே ஒப்பிடவில்லை. ஆனால்....

நந்தகுமார் மேற்கொண்டு பேசுவதற்குள் கைகளை உயர்த்தி முதலில் ஒரு விஷயம்... என்று தடுத்து நிறுத்தினாள்.

என்ன நிர்மலா?

என்னால் உங்களுக்கு உதவ முடியாது... நிர்மலாவின் குரலில் உஷ்ணம் தெறித்தது.

உதவ முடியாதா... ஏன்?

எனக்குப் பிடிக்கவில்லை.

பிடிக்கவில்லையா...? எது...?

அவன் ஒன்றுமே தெரியாதவன் போல் கேட்டது அவளது ஆத்திரத்தை அதிகப்படுத்தியது.



இப்படி யாரோ ஒரு பெண்ணிடம் போய் பேசி, பல்லிளித்து அவள் மனதில் என்ன இருக்கிறது என்ற விசித்திர ஆராய்ச்சியெல்லாம் என்னால் செய்ய முடியாது...

அது யாரோ இல்லை... என்னுடைய ஆஷா! நந்தகுமாரும் சூடு பிடிக்கப் பேசினான்.

என்னுடைய ஆஷா... என்றது அவளுக்கு ஆத்திரமாய், முட்ட வந்தவளுக்கு சிவப்புத் துணியைக் காட்டி மேலும் ஆத்திரப்படுத்துவது போல் இருந்தது.

அந்த... உங்களுடைய ஆஷா யாரோ.... எப்படியோ, அந்த உங்களது ஆஷாவை, உங்கள் காதல் தேவதையாய், உங்கள் இதயத்தில் வைத்து தினம் பூஜை செய்ய வேண்டுமானாலும் நீங்கள் செய்யுங்கள். அது உங்கள் இஷ்டம். என்னை விடுங்கள்.. என்றாள் கோபமாக.

நந்தகுமாருக்கு கோபம் குறையவில்லை.

என்ன நிர்மலா... என்ன பேசுகிறாய்? என்றான் ஆத்திரம் வந்தவனாய்.

ம்ம்... தெளிவாய்த்தான் பேசுகிறேன்... நான்.

என்ன தெளிவு?

நீங்கள் சொல்லும் காரியத்தை என்னால் செய்ய முடியாது. வேறு ஆளைப் பாருங்கள்... என்றாள் நிர்மலா அலட்சியத்துடன்.

உம்ம்...நீதான் செய்ய வேண்டும் நந்தகுமார் குரல் உயர்ந்தது.

நோ! இது என்னுடைய வேண்டுகோள் இல்லை. என்னுடைய கட்டளை...!

கட்டளை? நீங்கள் யார் என்னை கட்டளையிட?

நந்தகுமார் அவள் முன்னால் வந்து கைகளைச் கட்டிக் கொண்டு நேராய்ப் பார்த்தான்.

நிர்மலா...

நிர்மலா வேண்டுமென்றே அசூசையாய் முகத்தை திருப்பி வெட்ட... மறுபடியும் அழைத்தான். இம்முறை அவனது குரலில் கடுமை தொனித்தது.

நிர்மலா...

சொல்லுங்கள்...

நான் நினைத்திருந்தால் உன் தந்தை செய்த தவறுக்கு அவரை ஜெயிலுக்கு அனுப்பியிருக்க வேண்டும். ஆனால் நான் தான் பெருந்தன்மையாக அவரை விட்டுவிட்டேன்...

ம்ம் புரிகிறது... அதற்குப் பிரதியுபகாரமாய் நான் இதை செய்ய வேண்டுமாக்கும்?

அப்படி கூட நீ வைத்துக் கொள்ளலாம்...

இம்முறை நிர்மலா நிமிர்ந்து அவனை கூர் பார்வை பார்த்தாள்.

நான் மறுத்தால்... என்ன செய்வீர்கள்?

அவன் ஒரு கணம் பதில் பேசால் அவளையே உற்றுப் பார்த்தான்.

சொல்லட்டுமா?

ம்ம்...

எனது பெருந்தன்மையை விலக்கிக் கொள்வேன். உன் தந்தை சிறை செல்ல நேரிடும்.. எவ்வித உணர்ச்சியுமில்லாமல் அவன் பேசியது அவளை திகைக்க வைத்தது.



என்ன... தந்தையை சிறைக்கா? என்னை மிரட்டுகிறீர்களா? என்றாள் ஆவேசத்துடன்.

நீ எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள். எனக்கு காரியம் முக்கியம். நாளை டெல்லியிலிருந்து வரும் காலை பிளைட்டில் ஆஷா இங்கு வரப் போகிறாள். அவளை வரவேற்க விமான நிலையம் செல்லப் போகிறேன். நீயும் என்னுடன் வருகிறாய்!

சொல்லிவிட்டு விருட்டென எழுந்து சென்று விட்டான் நந்தகுமார்!

## 12

அன்று இரவு நிர்மலாவுக்குத் தூக்கம் பிடிக்கவில்லை. மனம் பரிதவித்தவாறு புரண்டு புரண்டு படுத்தாள். நந்தகுமார் மிரட்டலாய் சொன்னது அவளது ஆவேசத்தை அதிகப்படுத்தியிருந்தது. யாரோ.... ஆஷாவாம்... அவள் அவனை காதலிக்க வேண்டுமாம்.... அதற்காக அவள் பாடுபட வேண்டுமாம்.. என்ன ஒரு நெஞ்சழுத்தம்!

அதைவிட நந்தகுமார், சொன்னபடி செய்யாவிட்டால் உன் தந்தையை சிறைக்கனுப்பி விடுவேன். என்றது அவளை கொதிப்பாய் கொதிக்க வைத்தது. அவ்வளவு கல் நெஞ்சக்காரனா நந்தகுமார்? அதைச் சொலல்லி அவளை மிரட்டவும் துணிந்து விட்டானே! அவனைப் போய் நினைத்து நினைத்து உருகினோமே... நம் புத்தியை செருப்பால்தான் அடிக்க வேண்டும்! என குமைந்து போனாள்.

தன்னைத்தானே நொந்து கொண்டு நிர்மலா ரொம்ப நேரம் யோசித்தவள், இறுதியாய் திடமான ஒரு முடிவிற்கும்

வந்தாள். இனி நந்தகுமாரைப் பற்றி எவ்வித எண்ணத்தையும் மனதில் வைத்திருக்கக் கூடாது. இயந்திரம் போல் தான் நடந்து கொள்ள வேண்டும். ஸ்விட்ச் போட்டால் சொல்கிற வேலையை செய்யும் கருவி போல்தான் இனி அவள் இருப்பாள். அவளுக்கென்று இனி தனி மனமுமில்லை. அதில் நந்தகுமாருக்கு இடமும் இல்லை.

ஏதோ... மன பலத்தையெல்லாம் திரட்டி உறுதியாய் முடிவெடுத்த திடத்துடன் அப்படியே தூங்கியும் போனாள்.

மறுநாள் எவ்வித சலனமும் கொள்ளாமல் வழக்கம் போல் கிளம்பி அலுவலகத்தை அடைந்தாள். அலுவலக முகப்பில் வருகையை பதிவு செய்து விட்டு நந்தகுமாரை சந்திக்க விருப்பமில்லாமல் டெஸ்பாட்ச்சிங் செக்ஷனுக்கு சென்றாள். அங்கு கவனிக்க வேண்டிய மேலாளர் விடுப்பில் இருந்ததால் அந்தப் பணியை தான் கவனித்துக் கொண்டிருப்பதாக நந்தகுமாரின் இன்னொரு உதவியாளரிடம் சொல்லிவிட்டு வேலையை ஆரம்பித்தாள்.

கருமமே கண்ணாய் அவள் வேலை பார்த்தாலும் மணி பத்தை தாண்டும்போது நந்தகுமாரே அவளைத் தேடி வந்துவிட்டான்.

அவன் வருவதை தூரத்தே பார்த்திருந்தாலும் பார்க்காதது போல் கையிலிருந்த பைலிலே கவனமாயிருந்தாள். நந்தகுமார் பிரவுன் நிற சபாரி சூட் போட்டிருந்தான். புத்தம் புதியதாய் மடிப்புக் குறையாத சூட் இருதயப் பகுதியில் ரோஜா நிற எம்ப்ராய்டரி டிசைன் வேறு. படிய வாரப்பட்ட தலையும் பளிச்சென இருந்த முகமும் அவன் அழகை கூட்டியது. எல்லாம் அந்த மாயக்காரி ஆஷாவை மயக்கத்தானா?

அவள் நினைப்பை கொஞ்சமும் அறியாதவனாய் பக்கத்தில் வந்து, நிர்மலா, கிளம்பலாம் என்றான் அவசரத்தோடு.

ம்ம்...



நேரமாகிறது... சீக்கிரம்...

அவள் ஒரு முறைப்பாய் நிமிர்ந்தபோது அவன் அவள் முகத்தைக் கூட பார்க்காமல் கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டிரந்தான். ஆஷாவைக் காண அவ்வளவு அவசரமா... என்ன?

நிர்மலா நிதானமாக ஹாண்ட் பேக்கை எடுப்பதற்குள் நந்தகுமார் முன்னால் நடக்க ஆரம்பித்து விட்டான்.

மேலும் சீறத்ட துடித்த நெஞ்சை சட்டென அழுத்தி அடக்கினாள் நிர்மலா. அவன் யாரையோ, எவளையோ காதலித்து விட்டு போகட்டும். அதற்காக மேலும் மேலும் துடித்துப் போக அவள் ஒன்றும் நந்தகுமாரின் காதலி அல்லவே!

இயந்திரகதியாய் அவனைப் பின் தொடர்ந்து காரில் ஏறி அமர்ந்தாள். காரில் முன்புறமாய் அவன் பக்கத்து சீட்டில் உட்காரும் போது கூட இப்போதுதான் அவளுக்கு முன் ஸீட் திரும்பி வரும் ஆஷா அவன் பக்கத்தில் அமர்ந்து அவளை பின்னுக்குத் தள்ளி விடுவாள். தன்னையறியாமல் அந்த நினைப்பு வந்தபோது மீண்டும் எரிச்சல் துளிர் விட்டது.

நந்தகுமாரோ அதற்கு நேர் எதிராய் அளவு மிகுந்த சந்தோஷத்தில் காரை கிளப்பி விரைவாய் சென்று கொண்டிருந்தான். நிர்மலா உம்மென்றிருந்தாலும் கொஞ்ச நிமிடம் தூரம் சென்றதுமே மறுபடியும் படபடவென பேச ஆரம்பித்து விட்டான்.

எல்லாம் ஆஷாவைப் பற்றித்தான்.

நிர்மலா, உன்கு ஆஷாவைத் தெரியாது. நல்ல நிறம் அவளை பார்ப்பதற்கு வெள்ளைக்காரி போல ஆங்கிலோ இந்தியப் பெண்போல்தான் இருப்பாள். அவளது ஆங்கிலப் புலமை அபாரம். நுனி நாக்கில் இங்கிலீஷ் விளையாடும் என்றால் பார்த்துக் கொள்ளேன்...

ம்ம்...

அவளிடமே எனக்கு பிடித்த விஷயம் எதை நினைக்கிறாளோ, அதை பட்டென்று சொல்லி விடுவாள். யார் என்னை நினைத்தாலும் கவலைப்பட மாட்டாள்....!

ஓஹோ... அவளது கேலியை புரியாமல் அவன் தொடர்ந்தான்.

அதைப் போல் எதையாவது விரும்பி விட்டால், வெறி பிடித்தவள் போல் அதை அடையாமல் விட மாட்டாள். மேலும் அவளுக்கு முன் கோபம் ஜாஸ்தி... அப்புறம் அவள்....

அவன் சொல்வது பெரும் எரிச்சலை ஏற்படுத்த, இதெல்லாம் ஏற்கனவே சொல்லி விட்டீர்கள்... என்றாள்.

அவனோ விடுவதாயில்லை.

நிர்மலா, இதைச் சொல்லியிருப்பேன். ஆனால் சொல்லாத ஒரு சுவாரஸ்யமான விஷயமும் இருக்கிறது. ஒரு முறை பிக்னிக் போல அவளுடன் தேக்கடி சென்றிருந்தேன். படகுச் சவாரி செல்ல அவள் விரும்பவே.... ஒரு படகை எடுத்து இருவரும் செல்ஃப்ரைடிங் போனோம். ஏரியல் நடுப்பகுதிக்கு சென்றதும் ஆஷா டபக்கென தண்ணீரில் குதித்து விட்டாள். குதித்தவள் அப்படியே மூழ்கியும் விட்டாள். நான் ஒரு கணம் பதறிப் போய்விட்டேன்....

ம்ம்... உங்கள் பதற்றம் அதிகமானாலும் மூச்சைப் பிடித்துக் கொண்டு வெளிவந்தாளாக்கும்?

அவளது கிண்டலுக்கும் சீரியஸாகவே பதில் சொன்னான் நந்தகுமார். மிகச் சரியாகச் சொன்னாய் நிர்மலா. ஆஷா அப்படி மூச்சை அடக்கி உள்ளிருந்து விட்டு வெளியே வந்து சிரித்தபடி என்னை பயங்காட்டினாள். ஒரு கணம் நானும் அரண்டு போனேன்..



நல்ல விளையாட்டுதான்... ம்ம்... அவள் உதட்டைச் சுழித்துப் பழிப்புக் காட்டியதைக் கவனிக்காமல், அடுத்த விஷயத்திற்குத் தாவினான்.

அதேபோல் இன்னொரு முறை கடும் வேகத்தில் காரை ஓட்டி என்னை பயப்படுத்தி விட்டாள்... என்றவாறு மற்றொரு சம்பவத்தை விவரிக்க ஆரம்பித்து விட்டான். காரை ஓட்டியபடி அவன் பாட்டுக்குச் சொல்லிக் கொண்டு போக... ஒரு ம் கூட கொட்டாமல் காதைப் பொத்தாத குறையாக உட்கார்ந்திருந்தாள் நிர்மலா.

கொஞ்ச நிமிடம் கழித்தே அதை உணர்ந்த நந்தகுமார் திகைப்பாய், என்ன... நிர்மலா, நான் சொல்வதையெல்லாம் கேட்கிறாயா, இல்லையா? என்றான்.

லேசாய் முகம் இறுகியவள், ம்ம்... கேட்கிறேன். ஆனால் இந்த ஆஷா புராணத்தை எல்லாம் என்னை விட அந்த ஆஷாவிடமே சொன்னால் நன்றாயிருக்கும். அவர்களும் சந்தோஷப்படுவார்கள்... அவள் சொன்னதும் அவனும் பலமா தலையாட்டினான்.

பெண்களே இப்படித்தான். நான் கேள்விப்பட்டது சரிதான்.... என்றான் அலுப்பதுபோல்.

என்ன கேள்விப்பட்டீர்கள். அப்படி?

ஒரு பெண்ணுக்கு இன்னொரு பெண்ணைப் புகழ்ந்தால் பிடிக்காது. எரிச்சல்தான் அடைவார்கள் என்று....

எனக்கு எரிச்சல் ஒன்றுமில்லை...

பின் என்னவாம்?

ஒன்றுமில்லை...!

அவள் அத்தோடு பேச்சை முடித்துக் கொண்டாள். விமான நிலையத்தை அதற்குள் நெருங்கி விட்டதால் வேறு

வழியில்லாது அவனும் பேச்சை நிறுத்தினான். காரை அதற்குரிய நிறுத்தத்தில் விட்டுவிட்டு இருவரும் இறங்கினார்கள்.

நிர்மலா ஒரு விஷயம் தெரியுமா?

என்ன? என்பது போல் நிர்மலா பார்த்தாள்.

ஆஷாவை கிட்டத்தட்ட ஒரு வருடம் கழித்து இப்போது தான் பார்க்கப் போகிறேன்...

ஒரு வருடமா?

ம்ம்... சரியாகச் சொன்னால் ஒரு வருடம் ஐந்து மாதங்கள்...! ஆஷாவுக்கு கேட்டரிங் படிப்பில் ஒருவித ஈடுபாடு உண்டு. அதுபற்றிய உயர் படிப்பு ஒன்றுக்கு கலிபோர்னியா யூனிவர்சிட்டியில் படிக்கச் சென்றவள் இப்போதுதான் திரும்புகிறாள். அடிக்கடி அவளுடன் போனில் ஊர் விபரங்களை பேசுவதோடு சரி....

அவன் சொல்லச் சொல்ல ஒரு வருடமாய் ஆஷாவை சந்திக்கவில்லையா? அப்படியானால் நந்தகுமாருக்கு அவள் நினைப்பது போல் நெருக்கமான பழக்கம் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லையே...? என்ற எண்ணம் உள்ளூர எழுந்து ஒரு சந்தோஷத்தை உருவாக்க இது என்ன அவசர புத்தி?: என தன்னைத்தானே அடக்கிக் கொண்டாள்.

அதற்குள் லவுஞ்சை அடைந்து விட்டார்கள். இன்னும் ஐந்து நிமிடத்தில் விமானம் வந்துவிடும் என அறிவிப்பு வெளியாக அங்கு இருந்த இருக்கையில் காத்திருந்தார்கள்.

ஐந்து நிமிடம் கடந்தது.

இதோ... ப்டைள் இறங்கி... பெரிய சூட்கேஸ் மற்றும் உடைமைகளுடன் ஜீன்ஸ் பேண்ட்டும் டீ ஷர்ட்டும் பாப் தலையுடன் வெளிப்பட்டாள் ஆஷா..!



தூரத்திலே அவளை அடையாளம் கண்டு பெரிதாக கையசைத்தான் நந்தகுமார்.

பதிலுக்கு ஆஷா கையசைத்தாள். நெருங்கியதும் நந்தகுமாரே ஒரே தாவாய் தாவி காணாததைக் கண்டதுபோல வெளிநாட்டு பாணியில் இறுக கட்டியணைத்தான்.

நிர்மலாவின் முகம் அஷ்ட கோணலாய் போனது

## 13

நிர்மலாவுக்கு அந்த கணம் நெருப்பில் விழுந்தாற்போல் உடம்பே துடித்டதது. ஹாய் நந்து.. என்றபடி ஆஷா நந்தகுமாரை இறுக கட்டியணைத்துக் கொண்டிருந்தாள். தான் விரும்பியவனை தன் கண் முன்னே இன்னொருவள் கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறாள். அவளும் அதை பார்த்துக் கொண்டிருக்கிறாள். கையில் ஏதும் இல்லை. இருந்தால் அந்த ஆஷா மண்டையில் ஓங்கி போடலாம் போலிருந்தது.

எழுந்து ஆக்ரோஷமான உணர்வை மறுகணமே தன் நிலை உணர்ந்து அடக்கினாள். ம்ஹூம்! என்ன ஒரு நினைப்பு... நாம் யார்... நந்தகுமாரின் ஆசை நாயகியா... காதலியா.. கொதிப்படைய? அவனிடம் வேலை பார்க்கும் ஒரு சம்பளக்காரிதானே! இருந்தாலும் தவிக்கும் மன நிலையை அடக்க முடியாமல் இந்த கணத்தில் நந்தகுமாரின் நிலை எப்படியிருக்கிறது என பார்த்தாள். ஆஷா இறுக அணைத்திருந்தாலும் நந்தகுமாரின் முகத்தில் பெரிதாய் ஏதும் சந்தோஷக்களை இல்லாமல் சாதாரண உதட்டுப் புன்னகையே இருந்தது நிர்மலாவுக்கு இனம் புரியாத ஆறுதலை ஏற்படுத்தியது.

கடன்காரி... இன்னும் தழுவலை விட மாட்டங்கிறாளே...? என மேலும் நிர்மலா தவிப்பதற்குள் ஆஷா நந்தகுமாரை விடுவித்தாள். அவன் கையைப் பிடித்து

பெரிதாய் குலுக்கினாள். நந்து... நீ மாறவே இல்லை... அப்படியே இருக்க! என்றாள்.

ஆனால் நீ மாறிட்ட ஆஷா... என்றான் நந்தகுமார் முத்து உதிர்த்தபடி.

மாறிட்டானா... எப்படி... எப்படி?

ஆஷா... வியக்க நந்தகுமார் தடித்துப் போயிருந்த அவளது இடுப்பளவைக் காட்டினான். இதான் கடைசி வருஷம். அடுத்த வருஷம் இந்த ஜீன்ஸையெல்லம் உன்னால் போட முடியாது.,

நந்தகுமார் சிரிக்க, ஹேய்... யூ... நாட்டி...! என்றபடி ஆஷாவும் சிரித்தாள். இருவரும் இப்படிப் பேசிபேசி சிரிக்க அங்கு நின்ற நிர்மலாவின் பாடுதான் பெரும்பாடாய் இருந்தது. முகத்தை எப்படி வைக்க எங்கு வைக்க என்று புரியாமல் தவித்தாள்.

கொஞ்ச நேரத்தில் அதை உணர்ந்த நந்தகுமார் அவசரத்துடன், ஓ...ஐ... ஆம் ஸாரி... என்றபடி நிர்மலாவின் பக்கம் திரும்பினான்.

நிர்மலா... இதுதான் ஆஷா.... என்றான்.

மறுபடி ஆஷா பக்கம் திரும்பி, இது நிர்மலா என்றான்.

ஆஷா முகம் சுருக்கிப் பார்க்க நிர்மலா வலுக்கட்டாய புன்முறுவல் ஒன்றை தவழ விட்டவாறு ஆஷாவைப் பார்த்து கை கூப்பலாய் நமஸ்கரித்தாள்.

பதிலுக்கு ஒரு சின்ன தலைவெட்டலுடன் நந்தகுமாரைப் பார்த்தவள், நிர்மலா...? என்றபடி இழுத்தாள்.

ம்ம்... என்னுடைய பர்ஸனல் செக்ரட்டரி... என்ற நந்தகுமார் முடித்து வைக்கவும் ஆஷா திரும்பி நிர்மலாவை மேலிருந்து கீழ் வரை ஒரு அளவெடுத்தாள்.



மயில் தோகை பார்டருடன் மஞ்சள் வண்ண சேலை கச்சிதமாய் உடம்போட ஒட்டியிருக்க... அலங்காரம் எதுவுமில்லாமல் பளிச்சிட்ட நிர்மலாவின் நளினமான அழகு அவளை வியப்பிலாழ்த்தியது. நிர்மலாவும் அப்போதுதான் ஆஷாவை கண்களை விரித்துப் பார்த்தாள். பாப் செய்யப்பட்டு நாய் வால் போல் தொங்கும் செம்பட்டை கலந்த கேசம். முகத்தில் அதீத மேக்கப்பை பளீச்சாக்கும் நவீன பர்ப்யூம் சமாச்சாரங்கள். உதட்டில் ரோஸ் லிப்ஸ்டிக் சற்றே பருத்த உடல் வாகு. உடல் குட்டையை மறைக்க பெரிதான ஹைஹீல் காலனிகள்... ம்ஹூம்... இதில் எது நந்தகுமாரை ஈர்க்கப் போகிறது? எதைக் கண்டு மயங்கிப் போகிறான்?

நிர்மலா ஆஷாவையே வைத்த கண்ணாய்ப் பார்க்க, இருவரும் ஒருவரையொருவர் வியப்பாய் பார்ப்பதை நந்தகுமாரும் அதிசயமாய்ப் பார்த்தான்.

ஆனால் ஆஷா மறுகணமே ஒரு அலட்சிய வெட்டு வெட்டி திரும்பியவள் கமான் நந்து.... என்றபடி அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு நடக்க ஆரம்பித்து விட்டா;ள.

நந்தகுமாரும் குட்டிப் போட்ட பூனையாய் பின்தொடர ஆரம்பித்தான்.

நிர்மலா அப்போதுதான் ஆஷா கைகளால் உருட்டி தள்ளிக் கொண்டு வந்த பெரிய சூட்கேஸுகளை அப்படியே விட்டு விட்டு நடப்பதை கவனித்தாள்.

அதை மறந்து விட்டீர்களா? என அவள் அழைப்பதற்குள் ஆஷாவே சட்டென திரும்பி, ம்ம்... அவைகளைக் கொண்டு வா...! என்று அதிகாரமாய் சொல்லிவிட்டு நடந்தாள்.

நிர்மலாவுக்கு ஜிவ்வென்றிருந்தது. அவள் என்ன ஆஷாவின் வேலைக்காரியா? ஏதோ எஜமானி போல் ஒருமையில் பேசி இந்த விரட்டு விரட்டுகிறாள்? இவளை...

கோபமாய் நினைத்தவள் பக்கத்தில் நந்தகுமார் அவளிடம் அக்கறையாய் பேசியபடி நடப்பதைப் பார்த்ததும் வீண் பிரச்சனை வேண்டாம் என அடக்கிக் கொண்டு, சூட்கேஸ்களை தள்ளிபடி பின் தொடர்ந்தாள்.

ஆஷாவும் நந்தகுமாரும் பேசினார்கள், சிரித்தார்கள், அதிலும் நந்தகுமார் என்ன சொன்னாலும் உடம்பு குலுங்காத குறையாய் ஆஷா சிரித்து நிர்மலாவுக்கு எரிச்சலைத் தர முகத்தை வேறுபுறம் திரும்பி பார்த்தபடி நடந்தாள்.

ஆயிற்று ஒரு வழியாய் விமான நிலைய எக்ஸிட்டை கடந்து காரை அடைந்து விட்டார்கள்.

ம்... டிக்கியில் வை....

மறுபடியும் சொடுக்கிடாத குறையாய் ஆணையிட்டாள் ஆஷா. நிர்மலா கோபமாய் நிமிர்ந்து நந்தகுமாரைப் பார்க்க.... அவன் கொஞ்சம் சங்கடமாக நெளிந்தபடி பக்கத்தில் வந்தான். அதற்குள் ஆஷா காருக்கள் ஏறி உட்கார்ந்தாள். நந்தகுமார் நிர்மலாவிடம் கிசுகிசுப்பாய், நிர்மலா, அவளைத் தவறாக எண்ணாதே. அவள் அப்படி அதிகாரமாய் பேசியே பழக்கம் பட்டவள். எனக்காக கொஞ்சம் பொறுத்துக் கொள்.. என்றான் கெஞ்சலாக.

நிர்மலாவுக்கு கோபம் குறைவில்லைதான். ஆனால் நந்தகுமார் எனக்காக என்று அழுத்தமாய் சொன்னது அவளைச் சந்தோஷப்படுத்தியது. அவனுக்காக கிணற்றில் கூட குதிக்கலாம். ஆனால் போயும் போயும் இந்த ஆஷா முன் அல்லவா மண்டியிட்டு அவமானப்படச் சொல்கிறான் என அவஸ்தையாக நினைத்டதவள் ஒன்றும் பதில் கூறாமல் தலையாட்டினாள்.

நந்தகுமார் டிரைவிங் ஸீட்டில் ஏறியதும் அவளும் பின்புறமாய் ஏறிக்கொண்டாள்.

ஆஷா தகர டப்பாவை குலுக்கியதுபோல் லொடலொடவென பேச ஆரம்பித்து விட்டாள். எல்லாம்



அவளது கலிபோர்னியா புராணம்தான்! கலிபோர்னியாவில் அவள் படித்தது. அவளது நண்பர்கள், அவளர் பார்த்தது என ஒன்று விடாமல் கதையளந்தாள். நந்தகுமார் அவைகளை கேட்கிறானோ இல்லையோ தலையை மட்டும் நொடிக்கொருதரம் தவறாது அசைத்துக் கொண்டிருந்தான்.

ஒரு வழியாய் நந்தகுமாரின் பங்களாவில் நுழைந்து போர்டிகோவில் கார் நின்றபோது ஆஷா பேச்சை நிறுத்தினாள்.

இருவரும் இறங்க... நிர்மலாவும் இறங்கினாள்.

நிர்மலா அப்போதுதான் முதல் முறையாய் நந்தகுமாரின் பங்களாவைப் பார்க்கிறாள். பச்சைப் பசேல் மரங்கள் அழகான செடிகளுக்கிடையே மொசைக் பளபளப்பில் பார்ப்பதற்கே ரம்மியமாய் இருந்தது. அழகையும் பரம்மாண்டத்தையும் இழைத்து இழைத்து கட்டியது போல் இருந்தது. அழகு பூஞ்சாடிகள், வண்ண விளக்குகள் சிற்பமாய் வடிவமைக்கப் பட்ட நவீன வடிவங்கள் உயர் ரக கார்ப்பெட் விரிப்புகள், குளிர்விக்கப்பட்ட விசாலமான அறைகள் என எல்லாமே நிர்மலாவை வியப்பாக்கியது.

அப்படியே வாய் பிளக்காத குறையாய் இறங்கி நடந்தவள் சட்டென தன் நிலை உணர்ந்து அப்படியே நின்று விட்டாள். அழையாதார் வீட்டுக்கு அவள் எப்படிச் செல்ல முடியும்?: அவள் ஒன்றும் ஆஷா இல்லையே!

முன்னால் ஆஷாவுடன் பேசியபடி நடந்த நந்தகுமாரும் ஒரு கணம் உள்ளே நடந்து பெரிய ஹாலுக்குச் சென்று விட்டான். ஆனால் மறு கணமே நிர்மலா தொடராததை உணர்ந்து, ஆஷாவை உள்ளே செல்லும்படி அனுப்பி விட்டு, முன்புறம் நிர்மலாவைத் தேடி வந்தான்.

நிர்மலா.... ம்...ம்... என்ன நின்று விட்டாய்...? உள்ளே வா....! என உரிமையாய் அழைத்தபோது. அப்பாடா. ஆஷா பேச்சில் நம்மை ஞாபகம் வைத்திருக்கிறானே, என்ற நிம்மதி

அவளுக்கு ஏற்பட்டது. ஆனாலும் தன்மானம் இடம் கொடுக்காதவளாய், இல்லை... நான் அலுவலகம் கிளம்புகிறேன்... என்றாள் அவசர்தோடு.

அவள் என்னவோ அழையா வீட்டுக்கு வந்து விட்டது போல் முகத்தை வைத்துக்கொண்டு கிளம்ப முயற்சிக்க... அந்த காட்சியை வெகுவாய் .ரசித்த நந்தகுமார் சிரித்தபடியே, அட.... உனக்கு இந்த ரோஷமெல்லாம் கூட உண்டா? என்றான் சிரிப்பு மாறாமல்.

ம்ம்... கிளமபுகிறேன்... என்றாள் அதே விரைப்பான குரலில்.

நந்தகுமார் அவள் முன்னாள் வந்து வழிமறிப்பது போல் கைகளைக் கட்டிக் கொண்டு நின்றான்.

அவன் அப்படி நின்றதே எரிச்சல் தர, அவன் அவளை மேலிருந்து கீழ்வரை அப்போதுதான் புதுசாய் பார்ப்பது போல் கண்கள் விரியப் பார்க்க மேலும் எரிச்சலானாள்.

நிர்மலா இந்த மஞ்சள் பூ சேலையில் நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா?

அவன் பெரிதும் ரசித்துச் சொல்ல, இப்போதுதான் நானும் என் சேலையும் உங்க்ள கண்களில் விழுகிறோமைாக்கும்? என உள்ளுக்குள் குமைந்தவள் அதை வெளிக்காட்டாதவளாய் முகத்தை வெட்டி, ஐயோ நிறுத்துங்கள்... இப்படி நீங்கள் வர்ணித்து வழிய வேண்டியது என்னிடமல்ல ஆஷா ஆஷாவிடம்...! என்றாள்.

ஆஷாவிடமா... என்ன சொல்கிறாய்?

அதற்குள் மறந்துவிட்டீர்களா? ஆஷா உங்களை காதலிக்க வேண்டுமல்லவா? அதற்காக போய் அவளை புகழுங்கள்... அவள் அழகை கவிஞர் போல் வர்ணியுங்கள்... உங்களுக்க வேலையாவது நடக்கும்!



அவன் சிரித்தான்.

நான் மறக்கவில்லை. நீதான் மறந்துவிட்டாய்....

நான் மறந்தேனா... எதைச் சொல்கிறீர்கள்?

நீ... இப்போது அலுவலகம் போக வேண்டும் என துடிக்கிறாயே, அதைச் சொல்கிறேன். உன்னை அழைத்து வந்ததே ஆஷா மனதைப் புரிந்து பக்குவமாய் நடந்து அவளுக்கு என் மீது காதல் வரும்படி செய்ய வேண்டும் என்பதுதானே? அந்தக் கடமையை மறந்து நீ பாட்டுக்கு கிளம்பப் போகிறாய்?

ஓஹோ.... அது சரி! பெரிய கடமைதான், கண்டிப்பாக செய்கிறேன். இப்போது நான் என்ன செய்ய வேண்டும்? ஆஷா காலைப் பிடித்து உங்களைக் காதலிக்கும்படி மன்றாடவா? கேலியாய் கேட்டு முகம் சிவக்க முறைத்தாள்.

அப்படியெல்லாம் ஒன்றும் வேண்டாம். நான் சொன்னதை மட்டும் செய்தால் போதும்....

ம்ம்.... சொல்லுங்கள்...

மதிய டின்னரை நான், நீ, ஆஷா மூவரும் சேர்ந்து சாப்பிடப் போகிறோம். அப்படி சாப்பிடும்போது நீ ஆஷாவின் குணாதிசயங்களை உற்றுக் கவனி...

கவனிக்கிறேன்.... கவனிக்கிறேன்... பூம்பும் மாடு போல தலையாட்டி எரதிச்சலானாள் நிர்மலா.

## 14

நந்தகுமார் விடாப்பிடியாய் அவளை இழுத்துச் சென்று டைனிங் டேபிளில் உட்கார்த்தி வைத்து விட்டான்.

நிர்மலாவிற்கோ நெருப்பில் விழுந்த மாதிரிதான் இருந்தது. ஆஷாவை அவள் உன்னிப்பாய் கவனித்து அவள் குணத்தைக் கண்டு பிடித்து நந்தகுமாரை விரும்பும்படி செய்ய வேண்டுமாம்...! என்ன ஒரு நிலை...! நான் விரும்பியவனைத் தானே இன்னொருவளுக்கு தாரை வார்க்க வழி செய்ய வேண்டுமாம்...?

நிமிர்ந்து நந்தகுமாரை பார்த்தாலே அவன் அத்தனை பல்லையும் காட்டிக் கொண்டு ஆஷாவின் வரவிற்காக ஆஷா தாசனாய் காத்திருந்தான். எப்படி நிர்வாக விஷயங்களில் தெளிவாக முடிவெடுக்கத் தெரிந்தவன் ஆஷா விஷயத்தில் இப்படி ஆகிவிட்டானே... என நிர்மலா நினைத்தாள். மேலும் ஆஷாவின் பகட்டான அலட்டல் சுபாவத்திற்கும் இவனுக்கும் கொஞ்சம் கூட ஒத்துவர வாய்ப்பில்லையே? எனவும் வியந்தாள்.

அவளை மேலும் சிந்திக்க விடாதபடி யாரோ முகத்தருகே சொடுக்கிடுவது கண்டு நிர்மலா திடுக்கிட்டு நினைவில் வந்தாள். எதிரில் உருட்டும் பெரிய விழிகளோடு ஆஷா!

இன்னும் நீ கிளம்பவில்லை..? என்ன செய்து கொண்டிருக்கிறாய் இங்கு? என்றாள் விரட்டல் குரலில்.

நிர்மலாவுக்கு வந்ததே கோபம்! முகம் சிவக்க படீரென வேகமாய் எழுந்து விட்டாள். நீங்கள் என்ன... என்ன கேட்கிறீர்கள்? என்றாள் குரல் உயர.

என்ன கேட்கிறேனா? நான் கேட்பது கூடவா உனக்குப் புரியவில்லை? காது சரியில்லை என்றால் ஹியரிங் மெஷினை மாட்டு என்றாள் ஆஷா அலட்சியமாய்.

அதற்கு மேல் நிர்மலாவிற்கு பொறுமை போயிற்று.

உதடு துடித்தவள், இதோ... பாருங்கள்... ஆஷா. என ஆவேசமாய் கையை உயர்த்தி எச்சரிப்பது போல் பேச ஆரம்பிக்க, நடக்கும் விபரீதத்தை அப்போதுதான் உணர்ந்து நடுவில் வந்துவிட்டான் நந்தகுமார்.



கைகளை இருவர் பக்கமும் சாந்தமாய்க் காட்டி, பொறுங்கள்... பொறுங்கள்... என அமைதிப்படுத்தியவன் ஆஷா பக்கம் திரும்பி, ஆஷா, அவளை நான்தான் இங்கு இருக்கச் சொன்னேன்..! என்றான்.

ஆனாலும் ஆஷா அடங்கவில்லை.

அலுவலகம் செல்லாமல் இங்கு எதற்கு? என்றாள்.

ஆஷா... மதியம் ஒரு போர்டு மீட்டிங் இருக்கு. அதற்கு நானும் நிர்மலாவும் கண்டிப்பாக செல்ல வேண்டும். இப்போது மதியம் ஒரு மணியைத் தாண்டி நேரமாகி விட்டது. அதனால் தான் நம்முடன் நிர்மலாவை டின்னர் சாப்பிடும்படி இருக்கச் சொல்லியிருக்கிறேன். நீ முதலில் உட்கார்...! என்றான் ஆணையிடுவது போல். அவன் சொன்னதற்கு மறுபேச்சில்லாமல் ஆஷா உட்கார்ந்து விட்டாள்.

நந்தகுமார் கொதிப்போடு நின்ற நிர்மலாவையும், அதே தொனியில் பார்த்து, நீயும் உட்கார் என்றான் கடுமையாக.

இதற்கொன்றும் குறைச்சலில்லை! உதட்டைச் சுழித்து முணுமுணுத்தபடி வேறு வழியில்லாது நிர்மலாவும் உட்கார்ந்தாள்.

தயாராயிருந்த பணியாள் உணவை பீங்கள் தட்டுகளில் பரிமாற ஆரம்பித்தான்.,

பசி வயிற்றைக் கிள்ளினாலும் வேண்டா வெறுப்பாய் ஒரு வித அசூயையுடன் வைக்கப்பட்ட எல்லாவித உணவுவகைகளைப் பார்த்தாள். ஆனால் ஆஷாவோ எவ்வித சங்கோஜமும் இல்லாமல், வாவ்...! இதுபோன்ற வெஜிடேரியன் ரெசிபிகளை ருசித்து எவ்வளவு நாளாயிற்று.... கலிபோர்னியாவில் கிடைக்காத விஷயமாச்சே... என்றபடி பழை லொடலொட பேச்சை சகஜமாய் பேச ஆரம்பித்து விட்டாள். நந்தகுமாரும் ஆஷாவும் சாப்பிட ஆரம்பித்து விட்டார்கள்.

நிர்மலா பேசாமல் எவ்வித உணர்ச்சியுமில்லாமல் அந் உணவு வகைகளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ம்ம்... சாப்பிடு... மறுபடியும் அதட்டல் போட்டான் நந்தகுமார்.

அவள் அவ்வகை உணவு வகைகளை வாழ்நாளில் பார்த்திருக்க மாட்டாள்... அதுதான் இப்படி திகைத்துப் போய் நிற்கிறாள்!

ஆஷா முந்திரிக் கொட்டையாய் திரும்பவும் வம்பிழுக்க அதே கோபத்தில் சீறப் போன நிர்மலா, மறுகணமே அவள் வேண்டுமென்றே சீண்டுவதை உணர்ந்து காதில் விழாதது போல் அமைதி காத்தாள்.

நாம் ஏன் உணர்ச்சிவசப்பட வேண்டும்? பேசாமல் நம் தன் முன் உள்ள உணவு பதார்த்தங்களில் தனக்கு வேண்டியவைகளை எடுத்து உண்ண ஆரம்பித்து விட்டாள். ஆஷாவும் மறுபடியும் அவளைப் பார்த்து கெக்கலிப்பான அலட்சிய சிரிப்பை உதிர்த்து விட்டு திரும்பிக் கொண்டாள்.

நந்தகுமார் அதற்குள் அவன் புதிதாய் ஆரம்பிக்க இருக்கும் டெக்ஸ்டைல் யூனிட் பற்றி விவரிக்க ஆரம்பித்து விட்டான்.

நிர்மலா வீராப்பாய் உண்ண ஆரம்பித்து விட்டாள். தவிர, அவளால் மனம் இருந்த சூழ்நிலையில் எதுவும் வயிற்றுக்குள் இறங்க மறுத்தது. ஒப்புக்கு கொஞ்சம் சாப்பிட்டு வைத்தவள் அப்படியே உணவு தட்டை மூடி வைத்து விட்டாள்.

என்ன நிர்மலா அதற்குள் சாப்பிட்டு விட்டாயா?

நந்தகுமார் அக்கறையாய் கேட்பது போல் கேட்க வெறு ம் என்றாள்.

நிர்மலா நீ வேண்டுமானல் வீட்டைச் சுற்றிப் பாரேன்...



நந்தகுமார் சொன்னதும் அப்பாடா இந்த சூழ்நிலையில் இருந்து தப்பித்தோம்... என்று எழுந்து விட்டாள். நந்தகுமார் நின்றிருந்த பணியாளை சைகை காட்டி நிர்மலா அவரைப் பின் தொடர்ந்தாள்.

தான் எழுந்து போவதை ஓரக் கண்ணால் பார்த்து ஆஷா முறைப்பதை நிர்மலாவும் உணர்ந்தாள். கடன்காரி, இவளுக்கென்ன வந்தது, எதற்கெடுத்தாலும் புலி பாய்ச்சல் பாய்கிறாளே... இவளைப் போய் நந்தகுமார் மனைவியாக்க நினைக்கிறானே!

குமைந்தவளாய் பணியாளைப் பின்தொடர்ந்து பங்களாவின் ஒவ்வொரு அறையையும் பார்த்தவளுக்கு மலைப்பாகவே இருந்தது. அதை பங்களா என்று கூட சொல்ல முடியாது. பிரம்மாண்டமான அரண்மனை என்று சொல்லலாம். விலை உயர்ந்த சோபாக்கள், கட்டில்கள், வண்ண மயமான சாண்ட்லியர் விளக்குகள் நல்ல வேலைப்பாடுகளுடன் கூடிய தேக்கு மர கதவமைப்புகள், என ஒவ்வொன்றையும் நிர்மலா பிரமிப்பாகவே பார்த்தாள்.

இந்த ஒற்றை வீட்டில் நந்தகுமார் தனி ஆளாகவா இருக்கிறான்? எப்படி அவனால் முடிகிறது..?

அவளது கேள்வியை அடக்க முடியாமல் பணியாளிடமே கேட்டு விட்டாள்.

ஓ... அதுவாம்மா? குமார் ஐயா தனியாகத்தான் இருக்கிறார். ஆனால் கோடை மாதம் ஏப்ரல், மே இரண்டிலும் ஐயாவின் மாமா உறவுக்காரர்கள், குழந்தைகள் என வீடே நிரம்பி விடும். அப்போதெல்லாம் வீடே குதூகலமாய் சிரிப்பும் கும்மாளமுமாய் அமர்க்களப்பட்டு விடும்மா....

அப்படியா? என ஆச்சரியத்துடன் நடந்தாள்.

பணியாள் ஒவ்வொரு அறையாய் காட்டி விளக்கியவன் கடைசியாய் ஒரு பெரிய அறையை காட்டி அதுதான் குமார்

யைாவின் ரூம் அம்மா. அத்தோடு பங்களாவின் பின்பகுதி முடிகிறது. நான் செல்லட்டுமாம்மா? என்றபடி அவன் பதிலுக்கு காத்திராமல் நடையைக் கட்டினான்.

பணியாள் சென்றதும் நிர்மலாவின் பார்வை விசாலமாய் தெரிந்த நந்தகுமாரின் அறையையே நோட்டமிட்டது அவனது அறையில் என்னென்ன இருக்கிறதென பார்க்க ஆவல் கூடியது. மேலும் ஆவலைக் கட்டுப்படுத்த முடியாதவளாய் மெல்ல அறையினுள் நுழைந்து விட்டாள்.

விசாலமான அறையென்றாலும், ஓரமாய் சிறு கட்டில் ஒன்றும் ஸ்டிரியோ இசை அமைப்பும் ஒன்றும் தவிர, அறை முழுவதும் பெரிய ஷெல்ப்பில் வைக்கப்பட்ட புத்தகங்கள் தான். விதவிதமாய் ஒவ்வொரு பிரிவையும் பற்றி பல வகை புத்தகங்கள் சரியான புத்தகப் பிரியன் போலும். கீழே சிறிய ஷெல்ப் ஒன்று இரக்க அதில் வரிசையாய் பைல்கள் தெரிந்தது. பைல்களுக்கு ஓரமாய் வெளியே தலைகாட்டியபடி அந்த பச்சை நிற டயரி.

டயரியைப் பார்த்ததும் நிர்மலாவின் ஆவல் அதிகமாகியது. அடுத்தவர் டயரியை படிப்பது அநாகரிகம் என தனக்குத்தானே உணர்ந்திருந்தாலும் ஆவலை அடக்க முடியாதவளாய்ப் டயரியை எடுத்து பிரித்தாள். நந்தகுமாரின் கையெழுத்து குண்டு குண்டாய் மிக அழகாக இருந்தது. அவனே கைப்பட அலுவலக குறிப்புகள், நிகழ்ச்சி நிரல்கள், பண பட்டுவாடா பற்றிய விபரங்கள் என எழுதியிருக்க... டயரியை புரட்டினாள், டக்கென உள்ளிருந்து அந்த புகைப்படம் நழுவி விழுந்தது.

என்ன இது போட்டோ? என்றபடி நிர்மலா, அந்த போட்டோவைப் பார்க்க.... மிகுந்த

அதிர்ச்சியானாள். அது அவளது பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம். வேலையில் சேருவதற்காக விண்ணப்பத்தில் ஒட்டியிருந்தது. அது எப்படி அவனது டயரிக்குள்? குழம்பலானாள் நிர்மலா.





# 15

நிர்மலா அந்த தனது புகைப்படத்தை அவனது டயரியில் இருப்பது பார்த்து திகைத்தபடி ஓரிரு நிமிடங்கள் சிலையாய் நின்றவள், யாரோ வரும் அரவம் கேட்பது போல் இருக்க மறுகணமே சுதாரித்தாள். டக்கென போட்டோவை பழையபடி டயரியில் வைத:து, டயரியை ஷெல்ப்பில் இருந்தபடி வைத்து விட்டு அறையிலிருந்து வெளிவந்தாள்.

நல்லவேளை படி வழியாக பணியாள்தான் வந்து கொண்டிருந்தான்.

என்னம்மா பார்த்து விட்டீர்களா...? போகலாமா? என்று கேட்டவனிடம் தலையாட்டியபடி பின் தொடர்ந்தாள் நிர்மலா.

மறுபடியும் டைனிங் ஹாலுக்கு வந்தபோது ஆஷாவும் நந்தகுமாரும் சாப்பிட்டு முடித்திருந்தார்கள். நிர்மலா நந்தகுமார் முகத்தையே உற்றுப் பார்த்தாள். ஆனால் தான் வருவதை கூட உணராமல் ஆஷா பேசுவதை கருமமே கண்ணாய் கேட்டுக் கொண்டிருந்தான் நந்தகுமார். ம்ஹூம்... இது நந்தகுமார் இல்லை. ஆஷாதாசன் நந்தகுமார் என்று சொல்ல வேண்டும்.

ஒரு கணம் டயரியில் தனது போட்டோவைப் பார்த்ததும் மனதில் என்னவெல்லாம் நினைப்பு ஓடியது என நிர்மலா நினைத்துப் பார்த்தாள். அது எவ்வளவு தவறானது முட்டாள் தனமானது என தன்னைத்தானே நொந்து கொள்ளவும் செய்தாள்.

விறுவிறுவென படியிறங்கி வந்தவள் அப்படியே மருகிப் போய் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை நந்தகுமார் கவனித்து விட்டான்.

நிர்மலா... வா... உட்கார்.... என்று சோபாவைக் காட்டினான்.

ஆஷா அந்த சோபாவில் கால் மேல் கால் போட்டு அலட்சியமாய் உட்கார்ந்திருந்தாள். ஒரு ஆண் முன் பெண் இப்படியா அமர்த்தலாய் அமர்வாள்? நிர்மலா யோசிப்புடன் பக்கத்தில் போய் உட்கார்ந்தாள்.

அதற்குள் ஆஷா ஏதோ வேலையிலிருப்பது போல் எழுந்து உள்புறம் நோக்கி நடந்தாள்.

அவள் சென்றதும் ஒரு பெரிய அமைதி நிலவியது. நந்தகுமார்தான் திரும்பவும் பேச்சை ஆரம்பித்தான்.

நிர்மலா.... ஆ....ஷா.... வைப் பார்த்தாயல்லவா... எப்படி... எப்படி? என்றான்?

எப்படி என்றால்..?

உனக்குப் பிடித்திருக்கிறதா..?

நிர்மலாவுக்கு சிரிப்பு வந்து விட்டது...

உங்களுக்குத்டதானே பிடிக்க வேண்டும்... அதைச் சொல்லுங்கள்...

ம்ஹூம்... என்னைவிட ஆஷாவிற்குத்டதான் பிடிக்க வேண்டும். அதுதான் முக்கியம்.

ஆஷாவுக்குத்டதான் உங்களைப் பிடித்திருக்கிறதே...

என்ன சொல்கிறாய், நீ?

இன்னும் புரியவில்லையா? ஆஷாதான் வந்தது முதல் உங்களுடன் விழுந்து விழுந்து பேசுகிறாள். நீங்கள் எது



சொன்னாலும் சிரித்து குலுங்குகிறாள். போதாக்குறைக்கு விமான நிலையத்தில் காதல்கள் போல் இருவரும் கட்டித் தழுவ பேறு செய்கிறிர்கள்....

மூஞ்சைத் தூக்கும் கோபத்துடன் நிர்மலா சொல்ல இம்முறை நந்தகுமார் சிரித்து விட்டான்.

அட... அதெல்லாம் காதல் என்று நினைத்து விட்டாயா...? என்று அடக்க மடியாமல் சிரித்தவன், நிர்மலா, அதெல்லாம் ஆஷாவின் சுபாவம், பழக்கம் வழக்கம்... நிச்சயமாக காதல் கிடையாது. என்றான்.

எனக்கு அப்படித் தோன்றவில்லை... என்றாள் விடாப் பிடியாய்.

உன்னால் நம்ப முடியவில்லையா? என்றான் அவன் மறுபடியும்.

ஆமாம் நம்ப முடியவில்லை தான்! மேலும் இவ்வளவு சிரித்துப் பேசுபவளிடம் சுற்றி வளைக்காமல் நீங்கள் கேட்டு விடலாம்..

கேட்டு விடவா? எதைக் கேட்கச் சொல்கிறாய்?

காதலைப் பற்றியல்ல... கல்யாணம் பற்றி...! நேரிடையாக என்னை கல்யாணம் செய்து கொள்கிறாயா... என்று கேட்டு விட வேண்டியதுதானே?

ஓஹோ... நான் அப்படிக் கேட்டு விட்டால் அவள் உடனே சரி என்று சொல்லி விடுவாளா?

கண்டிப்பாய் சொல்வாள்... அழுத்தந்திருத்தமாய் நிர்மலா சொல்லவும், உள்ளிருந்து ஆஷா வரவும் சரியாயிருந்தது. நந்தகுமார் உடனே நிர்மலாவிடம், இதோ அவளே வந்து விட்டாள். உன் முன்பாகவே கேட்டு விடுகிறேன்.. என்று கிசுகிசுப்பாய் சொல்லிவிட்டு, ஆஷா பக்கம் திரும்பி, ஆஷா... என்றழைத்தான்.

ஆஷா பக்கத்தில் வந்தாள்.

என்ன நந்தகுமார்?

பேசாமல் என்னை கல்யாணம் செய்து கொள்கிறாயா? என்றான்.

ஆஷா ஹாஸ்யம் கண்டவள் போல் சிரிக்க ஆரம்பித்து விட்டாள்.

உன்னைக் கல்யாணம் செய்வதா? உனக்கும் எனக்கும் சுத்தமாய் ஒத்துவராது நந்தகுமார்...

அப்படியா?

நந்தகுமார் ஏதோ கதை கேட்பது போல் வாய் பிளந்து அவளைப் பார்த்தான்.

ஆஷா ஒரு முறை நந்தகமாரையும் நிர்மலாவையும் உற்று உற்றுப் பார்த்தவள், நந்தகுமார், வேண்டுமானால் நான் ஒன்று சொல்லட்டுமா? என்றாள்.

சொல்லு, அப்படி என்ன சொல்லப் போகிறாய்?

உனக்குப் பொருத்தமான மேட்ச் ஒன்று என் மனதில் படுகிறது..

எனக்குப் பொருத்தமாகவா... யார் அது?

ம்ம்... உனக்குப் பொருத்தமாய் உன் பக்கத்திலேயே சேலையைச் சுற்றி இறுக்கி கட்டிக் கொண்டு ஒரு பட்டிக்காட்டு உட்கார்ந்திருக்கிறதல்லவா அதைத்தான் சொல்கிறேன்..

ஆஷா எதையோ சொல்லப் போகிறாள் என்று நினைத்த நிர்மலா, அவள் தன்னைச் சுட்டிக்காட்டி சொல்வதைக் கண்டு பயங்கரமாகத் திடுக்கிட்டாள்.



## 16

இரண்டு நாள் கழித்திருந்தது. அன்று அவசரமாய் அழைத்தான் நந்தகுமார்.

நிர்மலா மாத இறுதியானதால் கம்பெனியின் அக்கவுண்டுகளை டேலி செய்வதில் ஆழ்ந்திருந்தாள். அவன் கூப்பிட்டதும் எல்லாவற்றையும் அப்படியே போட்டு விட்டு அரக்கப் பறக்க ஓடினாள்.

நிர்மலா நாளை நாம் பிக்னிக் போகிறோம்... என்றான் நந்தகுமார் சாதாரணமாய்.

என்ன சொல்கிறீர்கள்? என்றாள் நிர்மலா திகைத்துப் போனவளாய்.

ம்ம்... பிக்னிக் அதுவும் மகாபலிபுரத்துக்குத்தான்...! மாமல்லபுர சிற்பங்களை பார்க்க ஆஷா ரொம்பவும் ஆசைப்படுகிறாள். அவளுக்காகத்தான் இந்த பிக்னிக்பினான்...!

அவன் சொல்லி முடித்ததும் முகத்தை வெட்டினாள் நிர்மலா.

என்னால் முடியாது. நான் வரமாட்டேன்... நந்தகுமார் எழுந்து கொண்டான்.

ஏன் முடியாது?

என்னால் இதற்குமேல் அவமானப்பட முடியாது!

அவமானமா?

அந்த ஆஷா ஒவ்வொரு முறையும் செருப்பால் அடிக்காதகுறையாய் என்னை அவமானப்படுத்துகிறாள். இனியும்

என்னால் அதை பொறுத்துக் கொள்ள முடியாது.. என்னை விட்டுவிடுங்கள்!

நிர்மலா நீ ஒன்றை மறந்து விட்டாய்!

தெரியும் உடனே என் தந்தையை ஜெயிலுக்கு அனுப்பப் போறதாய் சொல்லி மிரட்ட ஆரம்பித்து விடுவீர்கள். அதானே? என்றாள் கோபம் குறையாதவளாய்.

அதில்லை..

பின்ன என்னவாம்?

ஆஷா என்னை விரும்பி விட்டால், நம் இருவருக்கும் எல்லா பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். பின் நான் உன்னை விடுவித்து விடுவேன்..

என்ன... என்ன... சொல்கிறீர்கள்? என்னை விடுவித்து விடுவீர்களா?

நம்ப முடியாமல் கண்கள் விரித்துக் கேட்டவளை அதேபோல் கண்கள் விரியப் பார்த்தவன், நிச்சயமாய்... என்றான் உறுதியான குரலில்.

நிர்மலா, நீ மட்டும் எப்படமியாவது என்னையும் ஆஷாவையும் சேர்து வைத்துவிட்டால் போதும். உன் தந்தை பட்ட கடனை தள்ளுபடி செய்து விடுவேன். நீயும் இந்த கட்டாய வேலையிலிருந்து விடுபட்டு சுதந்திரப் பறவையாய் நீ விரும்பும் இடத்தில் வேலையைத் தேடிக் கொள்ளலாம்...

நிஜமாக... நிஜமாகத்தானே சொல்கிறீர்கள்?

மறுபடியும் அவள் நம்ப முடியாமல் கேட்க, அவன் பக்கத்தில் வந்து, வேண்டுமானால், உன் தலையிலடித்துச் சொல்லட்டுமா? என்றான்.



மறுப்பாய் தலையசைத்து அவன் சொல்வதை ஆமோதித்தவள், சரி, இப்போது நான் பிக்னிக் வர வேண்டும். அவ்வளவுதானே? என்றாள்.

ஆமாம்... நாளை காலை ஆறு மணிக்கு கிளம்புகிறோம்... உன் வீட்டிற்கு காரை அனுப்புகிறேன்....

ஆமாமம்... நாளை காலை ஆறு மணிக்கு கிளமபுகிறோம்.... உன் வீட்டிற்கு காரை அனுப்புகிறேன்....

அவன் சொன்னதற்கு சரி... என்ற ஒற்றைச் சொல்லை உதிர்த்து விட்டு திரும்பி விறுவிறுவென நடந்தாள். அவள் போவதையே உதட்டில் மர்மப் புன்னகை தோன்ற பார்த்துக் கொண்டிருந்தான் நந்தகுமார்.

மறுநாள் சொன்னபடி சொன் நேரத்திற்கு தயாராயிருந்தாள் நிர்மலா. நந்தகுமார் அனுப்பிய கார் வந்ததும் ஏறிக் கொண்டாள். கார் நந்தகுமாரின் வீட்டிற்குச் சென்றது. அங்கு தயாராய் பெரிய ஜீப் ஒன்றில் ஆஷாவுடன் காத்திருந்தான். நந்தகுமார். நிர்மலாவைப் பார்த்ததும் அவன் புன்னகைக்க ஆஷாவோ வழக்கம் போல் முகத்தை வேறுபுறம் திருப்பி வைத்துக் கொண்டாள். நிர்மலா, ஏறியதும் ஜீப் மகாபலிபுரம் நோக்கி கிளம்பியது. நிர்மலா கொஞ்ச நேரம் ஆஷாவையே உற்றுக் கவனித்தவள் மனதிற்குள் ஒரு முடிவிற்கு வந்தாள்.

அந்த ஆஷா சிடுமூஞ்சியாய் கோபக்காரியாய் எப்படி இருந்தாலும் சரி.... அவளை இனி அப்படியே விடக் கூடாது. நாமே வலியச் சென்று அவளிடம் பேச வேண்டும். சிரித்துப் பழக வேண்டும். எப்படியாவது அவள் மனதை மாற்றி நந்தகுமாரை அவள் விரும்பும்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்துவிட்டால், அவள் வேலை சுளுவாகி விடும். யோசித்த நிர்மலா முகத்தை வெட்டி திரும்பிய ஆஷாவிடம் வலியப் போய் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்தாள்.

ஆஷா... உங்கள் அனுபவங்கள் பற்றிச் சொல்கிறீர்களா? என்று கேட்டாள்.

அதற்கும் ஆஷா சிடுமூஞ்சியாய் திரும்பி, அனுபவமா? எதைக் கேட்கிறாய்? என்றாள்.

ஆனால் நிர்மலா முகம் சுருங்கவில்லை. சிரிப்பு மாறவில்லை. அதே தொனியில், கலிபோர்னியாவில் நீங்கள் கேட்டரிங் படித்த அனுபவங்களைப் பற்றிக் கேட்கிறேன்... என்றாள்.

ஆஷாவின் முகம் கொஞ்சமாய் புன்னகைக்கு மாறியது.

ஓ... அதுவா? .... என்றபடி மறுகணமே சுவாரஸ்யத்துடன் கலிபோர்னியா யுனிவர்சிட்டியில் தான் படித்த அனுபவங்களை விவரிக்க ஆரம்பித்து விட்டாள் ஆஷா. முதல் நாள் படிப்பின் போது நம் ஊர் ஊறுகாயை அவள் கொண்டு போனது, மற்ற உடன் படித்த மாணவியரெல்லாம் அதை வினோத பொருள்போல் தொட்டு தொட்டு வியந்தது.... என பேச்சை ஆரம்பித்தவள் பேச்சை விடாமல் மகாபலிபுரம் நெருங்கும் வரை தொடர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

நிர்மலாவுக்கு அது பிடமித்திருக்கிறதோ இல்லையோ? தன் மனநிலை எதையும் வெளிக் காட்டாமல் பெரும் ஆர்வத்துடன் கேட்பதுபோல் இருந்தாள்.

மகாபலிபுரத்தில் நந்தகுமார் ஜீப்பை நிறுத்த மூவரும் இறங்கினார்கள்.

ஆஷா... கடற்கரையைப் பார்த்ததும் உற்சாகமாய் இறங்கி அதை நோக்கி ஓட ஆரம்பித்து விட்டாள்.

நந்தகுமார் நிர்மலா பக்கம் திரும்பினான்.

நிர்மலா, நீ உண்மையிலேயே புத்திசாலிதான்... என்றான்.



இந்தப் புகழ்ச்சி எதற்கோ? என்றாள் நிர்மலா உதட்டைச் சுழித்தபடி.

ஆஷாவின் மனநிலை புரிந்து கொள்ள... ஆஷாவின் சுபாவம் அறிந்து பேச ஆரம்பித்து விட்டாயே... அதைச் சொல்கிறேன்...

எல்லாம் உங்களுக்காகத்தான்... உங்களுடைய தெய்வீக காதலுக்குத்தான்! மறுபடியும் முகம் வெட்டினாள்.

அதற்காக இன்னொன்றையும் நீ செய்ய வேண்டும்?நந்தகுமார் பீடிகை போட என்ன? என்பதுபோல் நிர்மலா பார்த்தாள். நந்தகுமார் கொண்டு வந்திருந்த லெதர் பேக்கிலிருந்து இரண்டு கேமிராக்களை வெளியெடுத்தான்.

நிர்மலா, இதில் ஒன்றை நான் வைத்து சிற்பங்களை படமெடுக்கப் போகிறேன். இன்னொன்றை உன்னிடம் கொடுக்கப் போகிறேன்....

என்னிடமா எதற்கு?

ம்ம்... புரியவில்லை? நீ படமெடுக்க வேண்டும். என்னையும் ஆஷாவையும் சேர்த்து விதம் விதமாய் படமெடுக்க வேண்டும்...

இது என்ன கோமாளித்தனம்? என்றாள் நிர்மலா முகம் சுருங்க.

ஐயோ.... என்ன நிர்மலா சுத்த பத்தாம் பசலியாய் இரக்கிறாய்? காதலர்கள் போல் இப்படி இருவரும் போட்டோ எடுத்துக் கொண்டால்தானே பார்க்கும் போது இருவருக்கும்ங ஒரு நெருக்கம் வரும்.

ஓஹோ.. நல்ல கண்டுபிடிப்புதான்! கேலியாய் பேசி நிர்மலா தோள்களைக் குலுக்க நந்தகுமார் சீரியஸாகப் பார்த்தான்.

நிர்மலா...

ம்... சொல்லுங்கள். நான் என்ன செய்ய வேண்டும்?

நீ இந்த கேமிராவினால் என்னையும் ஆஷாவையும் படம் எடுக்க வேண்டும். அதுவும் ஆஷாவுக்குத் தெரியாமல்... அவள் பார்க்காதபடி....

ஓ.... அதுவேறா? சரிதான் எல்லாம் நான் நினைத்தது தான்!

என்ன நினைத்தாய்?

எப்படி இருந்த நீங்கள் இப்படி ஆகிவிட்டீர்கள்?

இப்படி என்றால்...? நந்தகுமார் கைகளை கட்டிக் கொண்டு அவளைப் பார்த்தான்.

இப்படி சதா ஆஷா... ஆஷா... என்று பேசிக் கொண்டு அலைய ஆரம்பித்து விட்டீர்களே...! பேசாமல் உங்கள் பெயரை நந்தகமார் என்பதற்குப் பதில் ஆஷாதாசர் என்று மாற்றிக் கொள்ளுங்கள். அது சரியாக இருக்கும்!

ஆஷாதாசர்? அந்தப் பெயர் கூட நன்றாகத்தானே இருக்கிறது...? என அதற்கும் அவன் விடாது சீரியஸாக சொல்லவும் தலையிலடித்தபடி அவனிடமிருந்து கேமிராவை வாங்கிக் கொண்டு நடக்க ஆரம்பித்தாள் நிர்மலா.

ஆயிற்று... ஒரு வழியாய் சுற்றிப் பார்த்து வீண் பேச்சு பேசி நேரமும் போயிற்று. மாலைச் சூரியன் தங்க நிறமாய் மறையத் துவங்கும் நேரம் வந்து விட்டது. ஆஷா அதுவரை நிர்மலா பக்கம் நின்று கொண்டிருந்தவள் கடற்கரை மணலில் கிடந்த சிப்பிகளில் ஆர்வமாகி அதைத் தேடிப் போனாள்.

யாரோ தன்னை மெதுவாக அழைப்பது போன்று தெரிய சட்டென திரும்பினாள் நிர்மலா.



அங்கு ஓரமாய் கிடந்த படகு மறைவில் நின்று கொண்டு பக்கம் வரும்படி சைகை செய்து கொண்டிருந்தான் நந்தகுமார்.

நிர்மலா மெல்ல எழுந்து அவன் பக்கம் போனாள்.

என்ன போட்டோவெல்லாம் எடுத்தாகி விட்டதா? பரபரத்தான் நந்தகுமார்.

ம்ம்... என்றாள் நிர்மலா.

ம்ம்... என்றால் என்ன அர்த்தம்? எத்தனை போட்டோ எடுத்தாய்? மீதி எத்தனை பிலிம் இருக்கிறது?

அது சரி...! உங்கள் காதல் கண் கொள்ளாக் காட்சி அத்தனையையும் படம் பிடித்து விட்டேன். இன்னும் மிஞ்சிப் போனால் இரண்டு பிலிம் பாக்கியிரக்கும்!

சரி... சரி... ரெண்டு பலிம்மிலும் வேஸ்ட் செய்யாமல் நான் சொல்கிற காட்சியை மட்டும் எடு...

நீங்கள் சொல்கிற காட்சியா? அப்படி என்ன காட்சி?

ம்ம்... ஆஷாவுடன் நெருக்கமாக நான் இருப்பது போல் ஒரு போட்டோ வேண்டும்....

நிர்மலா முகம் மாறினாள்.

நெருக்கமாக என்றால்?

மிக நெருக்கமாக! உனக்குப் புரியவில்லை...?

புரியவில்லை... என்றாள் தலையை உதறாத குறையாக.

சரி புரியும்படி சொல்கிறேன்... என்றபடி நந்தகுமார் மேலும் அவளை நெருங்கியவன் நிர்மலா சற்றும் எதிர்பாரா தருணத்தில் இறுக அவளைக் கட்டியணைத்தான்.

## 17

நந்தகுமார் ஒரு கணம் நிர்மலாவை பூக்குவியலை முகர்வது போல் மெல்ல அணைத்து அவள் அலறுவதற்குள் விடுவித்தும் விட்டான். ஒரு கணம் அப்படியே ஆடிப் போய் விட்டாள். நல்லவேளை அந்த அணைப்பு சுகத்தில் அவளம் தன்னிலையை மறப்பதற்குள் விட்டு விட்டான்.

அப்படியே உணர்ச்சிகள் பிடியில் சுதாரித்து நிலைக்கு வரவே ஓரிரு நிமிடங்கள் பிடித்து.

ஏ...என்ன... இது ச்சீ! நீங்களா இப்படி? நான்... நான்...? அரைகுறையாய் சீற ஆரம்பித்தவள்... மேற்கொண்டு வார்த்தைகள் வராமல் தடுமாறினாள்.

ஆனால் நந்தகுமார் எதுவுமே நடைபெறாதது போல் அவளை சமாதானப்படுத்திக் கொண்டிருந்தான். டேக் இட் ஈஸி நிர்மலா, நீ கேட்ட நெரக்கம் பற்றி விளக்கவே அப்படிச் செய்தேன்... தவறாக நினைத்துக் கொள்ளாதே....! என பேசியபடி அவளை சாந்தப்படுத்துவது போல் அவளது கைவிரல்கள் இரண்டையும் பற்றிக் கொண்டான்.

அவனது வலுவான கைகளுக்குள் அவளது பூவிரல்கள் அனைத்தும் சிறைப்பட்டது போல் கோர்த்திருந்தது. ஒருகணம் அந்த விரல் ஸ்பரிசம் மின்னல் போல் சக்தியாய் உருவெடுத்து இனம் புரியா பரவசம் ஒன்றை அவளுள் உண்டு பண்ணிது சொக்கிப் போயிருந்த அவளதுரு விழிகளை உற்று நோக்கிய நந்தகுமார் நிர்மலா... என்னை எனது கண்களைப் பார்...! என்றான்.



கண்களையா... என்ன சொல்... என்று குழறியபடி அவனது கூர்மையான கருவிழிகளை நேருக்கு நேர் பார்க்க முடியாமல் தவித்தாள்.

ம்ம்... பார் நிர்மலா...

கனவில் அசரீரி ஒலிப்பது போல் மீண்டும் அவனது குரல் ஒலிக்க மெல்ல நிமிர்ந்து பார்த்தாள்.

அவளால் அவன் கருவிழிகளின் மேல் வைத்த பார்வையை விலக்க முடியவில்லை. விடுபட முடியவில்லை. அப்படியே அவளை உள்ளிழுப்பது போல அவனது பார்வை விழுங்கியது.

அப்படியே பார்.... பார்... நிர்மலா பார்க்கப் பார்க்க உனக்கு ஏதாவது தோணுகிறதா? ஏற்படுகிறதா?

அது... அது....

ஏற்படும் நிர்மலா! ஒருவித இனம்புரியாத உணர்ச்சி இதுவரை நீ அனுபவித்திராத ஒருவித அனுபவம் ஏற்படும்....

ம்ம்....

இதுதான் காதல். இப்படிப் பார்ப்பதுதான் காதலின் ஆரம்பம் என்று சொல்ல கேள்விப்பட்டிருக்கிறேன்.

அப்படியா?

அதனால்தான்... ஆஷாவிடம் காதல் செய்ய உன்னிடம் பயிற்சி பெறுகிறேன்....

நந்தகுமார் மெல்ல முத்து உதிர்க்க... கிறங்கிப் போய் மயக்கத்திலிருந்தவளின் மூளையில் ஆஷா என்ற பெயர் சொரேலென உரைத்தது. மறுகணமே பிடறி சிலிர்த்தாற் போல் உடல் குலுங்க சுயநினைவுக்கு வந்தாள் நிர்மலா. முதற் காரியமாய் அவனை அப்படியே உதறித் தள்ளினாள்.

என்ன.... ஆஷாவிடம் காதல் செய்ய என்னிடம் பயிற்சியா?

கோபமாய் துடித்து காது மடல்க்ள அதிரக் கேட்டவளை எவ்வித குற்ற உணர்வும் இல்லாமல் சாதராரணமா;யப் பார்த்தான் நந்தகுமார்.

அமாம்... பயிற்சிதான்! இதிலென்ன தப்பு? என வினவவும் செய்தான்.

சினம் மிகுந்தவளாய் உதடு துடிக்க அவனைப் பார்த்தாள்,

இப்படி என்னுடைய உணர்ச்சிகளுடன் விளையாடுவது உங்களுக்கு பயிற்சியா?

நிர்மலா நீ இப்படிக் கோபப்படத் தேவையே இல்லை., நீதானே சொன்னாய்? அதன்படிதானே நடக்கிறேன்!

நான் என்ன சொன்னேன்... சொல்லுங்கள்?

ஆஷா என்னைக் காதல் செய்ய உதவுவதாய் சொன்னாய் அல்லவா? அந்த உதவி இதுதான்... இப்படித்தான்...!

அவன் சொல்லச் சொல்ல உதடு குவித்து அசூயையாய் முகம் வெட்டினாள் நிர்மலா.

நல்ல கதையாய் இருக்கிறது! நீங்கள் காதல் செய்வதற்கு என்னிடம் ஒத்திகை பார்த்து விடுவீர்கள் போலிருக்கிறது? ஆனால் பாருங்கள்... இனி என்னிடம் இப்படிப்பட்ட உதவியெல்லாம் எதிர்பார்க்காதீர்கள்.... என்னால் செய்ய முடியாது!

கண்டிப்பாய் சொல்லிவிட்டு அதே விரைப்புடன் விறுவிறுவென நடந்தாள் நிர்மலா. அவள் கோபமாய் போவதை ஒருவித ரசனையுடன் ரசித்து பார்த்துக் கொண்டிருந்தான் நந்தகுமார்.



இப்படி நந்தகுமார் நெருக்கமாய் நடந்து கொள்ள... நடந்து கொள்ள ஆபத்து அவனுக்கு மட்டுமல்ல ஆஷாவுக்கும்தான்! தப்பித்தவறி ஆஷா இந்த ஒத்திகை காட்சியைப் பார்த்திருந்தால் என்ன நடந்திருக்கும்? தலையை விரித்துப் போட்டுக் கொண்டு பேயாட்டம் ஆடியிருப்பாளே! நல்ல வேளை அவள் பார்க்கவில்லை. தப்பித்தோம் என நிம்மதியும் அடைந்தாள் நிர்மலா.

அப்படியே குழப்பமான மனநிலையோடு தூங்கியும் போனாள்.

மறுநாள் அலுவலகத்தில், நந்தகுமாரின் கண்ணில் பட்டுவிடக் கூடாது என்று கங்கணம் கட்டிக் கொண்டாள். அதேபோல் இந்த கண்ணாமூச்சி ஆட்டம் மதியம் வரை நீடித்தது.

ஆனால் நந்தகுமாராவது... விடுவதாவது...? மதியம் லஞ்சிற்கு டிபன் பாக்ஸைத் தூக்கிக் கொண்டு அவள் கிளம்பும் போது அவளை உடனடியாக வருமாறு பணியாள் மூலம் கூப்பிட்டு அனுப்பினான்.

நேற்று நடந்த விஷயங்கள் எல்லாம் ஞாபகத்திற்கு வரமுகத்தை எப்படி வைத்துக் கொள்வது என குழம்பியவளாய் தயக்கத்தோடு உள்ளே நுழைந்தாள் நிர்மலா.

ஆனால் எவ்வித சங்கோஜமும் இல்லாமல் உற்சாகமாய் அவளை வரவேற்றான் நந்தகுமார்.

வா... வா... உட்கார். சேர்ந்தே சாப்பிடுவோம்... என்றான்.

வேண்டாம், நான் ஸ்டாப் ரூமில்..

ஸ்ஸூ.... பேசாமல் உட்கார். உன்னிடம் நிறைய பேசவேண்டும்... என்றாள் அவசரமாய்.

என்ன பேசவேண்டும்?

முதலில் உட்கார் சொல்கிறேன்...

உட்கார்ந்தாள்.

சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்... என்றபடி அவனுக்கு வந்த டிபன் கேரியரைத் திறந்தான். நிர்மலாவும் வேறு வழியில்லாமல் தனது சிறு பாக்ஸைத் திறந்து சாப்பிட ஆரம்பி;த்தாள்.

சொல்லுங்கள்...

எல்லாம் அந்த ஒத்திகை சமாச்சாரம்தான்...

ஒத்திகை என்றதுமே அவளுக்கு விக்கிப் போயிற்று. மிடறு விழுங்க நெளிந்தவள் அவனைப் பார்க்கவே கூச்சப்பட்டாள்.

உன்னிடம் பார்த்த ஒத்திகையை எல்லாம் இரவு ஆஷாவிடம் நிஜமாய் செய்து பார்த்தேன்.... ம்ம்.... பிரமாதம்! அவன் சொல்லச் சொல்ல மிளகாயைக் கடித்தது போல் அவளது முகம் போனது.

என்ன ஆஷாவிடமா? என்றாள் நம்ப முடியாமல்.

ம்ம்... ஆஷாவிடம்தான்...! எனது செல்ல காதல் நாயகிடம் நேற்றிரவு ஒத்திகை பார்த்தபோது அவள் ஒன்றும் கோபபட வில்லையே!

அப்படியா? என்றவளின் முகம் மெல்ல கூம்ப ஆரம்பித்தது. அவனோ மேலும் உற்சாகமாகி.

அதிலும் பார் நிர்மலா... இந்தக் காதல்கள் கண்களும் கண்களும் சந்தித்து விழுங்குவது போல் பார்ப்பார்களே.... அதில்தான் ஆஷா பணிந்து விட்டாள்... அப்படியே என் விழிகளோடு ஐக்கியமாகி விட்டாள்! என்றான்.

நிஜமாகவா சொல்கிறீர்கள்?



நிஜம்தான் நிர்மலா. அந்தக் கண் கொள்ளாக் காட்சியை நீ காண வேண்டுமே...? நான் பார்க்க... ஆஷா பார்க்க... கிட்டத் தட்ட ஒரு மணிநேரம் பிரமை பிடித்தாற்போல் இருவரும் ஒருவரையொருவர் தங்களை மறந்து பார்த்துக் கொண்டிருந்தோம்...

பின்... என்... என்னவாயிற்று..?

நந்தகுமார் பதில் சொல்லாமல் சிரித்தான்.

என்ன சிரிக்கிறீர்கள்?

நிர்மலா இன்னுமா உனக்குப் புரியவில்லை? அந்தக் கணத்தில் எங்கள் இருவருக்கும் காதல் வந்து விட்டது. ஆஷா என்னைக் காதலிக்க ஆரம்பித்து விட்டாள்...

என்ன ஆஷா காதலிக்க ஆரம்பித்து விட்டாளா? ஆற்றாமையாய் அவள் குரல் ஏக்கத்தோடு ஒலிப்பதை நந்தகுமார் உற்றுக் கவனித்தான்.

நிர்மலாவோ திரும்பத் திரும்ப அதையே கேட்டாள். அவளால் நம்ப முடியவில்லை. ஆஷா, உங்களை நிஜமாகக் காதலிக்கிறாளா? சொல்லுங்கள்... சொல்லுங்கள்... என்றாள்.

நந்தகுமார் அவள் தலையிலடிக்காத குறையாய் பேசினான்.

நிர்மலா, ஆஷாவுக்கு என் மீது பிடிப்பு வந்து விட்டது. என்னைப் பார்த்ததும் கண்களைத் தாழ்த்தி திடீரென வெட்கம் வேறு கொள்கிறாள். அநேகமாய் இதையெல்லாம் வைத்துப் பார்க்கும்போது அது காதல் போல் தெரிகிறது. ஆனால் அதற்கு முக்கியமாக நீ ஒன்று செய்ய வேண்டும் என்றான் பீடிகையுடன்.

நானா...? என்ன செய்ய வேண்டும்? என்றாள் நிர்மலா சுரத்தில்லாத குரலில்.

நீ பேசாமல் இன்று மாலை ஆஷாவைப் பார்த்துப் பேச்சுக்கொடு. அவள் மனதில் என் மீது காதல் வந்துவிட்டதா... என்பதைக் கண்டுபிடித்து விடு.

அவன் சொல்ல எரிச்சலாய்... ம் என்றாள். அவன் முன்னாள் அதற்கு மேலும் உட்காரப் பிடிக்காமல் பாதி சாப்பாட்டுடன் எழுந்து வந்து விட்டாள்.

மாலை நான்கு மணி இருக்கும்.

வேலையாள் ஒருவன் கையில் பெரிய கவருடன் நந்தகுமாரைப் பார்க்க வந்திருந்தான்.

நிர்மலா நந்தகுமார் ரூமை எட்டிப் பார்த்தாள்.

ரூம் பூட்டியிருந்தது. நந்தகுமார் கிளம்பி எங்கோ சென்று விட்டான். இந்த ஆஷாதாசன் ஆஷாவைத் தேடிச் செ ன்றிருப்பானோ... நிர்மலா நினைத்தபடி வேலையாளிடம் நந்தகுமார் சென்று விட்ட விபரத்தைக் கூறி நாளை வந்து பார்க்கும்படி சொன்னான்.

அதற்கு வேலையாள்.... நான் புகைபட லேப்பில் இருந்து வருகிறேன். இந்தக் கவரை அவரிடம் ஒப்படைத்து விடுங்கள்... என்று சொன்னபடி கவரை நிர்மலாவிடடம் ஒப்படைத்து விட்டு கிளம்பி விட்டான்.

புகைப்பட லேப்பா...? அப்படியானால் மகாபலிபுரம் பிக்னிக்கில் எடுத்த போட்டோக்களா? என யோசித்தபடி நிர்மலா அந்தக் கவரைப் பிரித்துப் பார்த்தாள்.

உள்ளே... அவள் நந்தகுமாரையும் ஆஷாவையும் வைத்து எடுத்த போட்டோக்கள் இருப்பதைப் பார்த்ததும் அவளது எரிச்சல் அதிகமாகியது.



# 18

வேலை முடிந்து அன்று வீட்டில் வந்தவளுக்கு ஒன்றும் ஓடவில்லைதான். வழக்கமான உற்சாகம் அவளிடம் இல்லாததைக் கண்டு தந்தை அக்கறையாய், என்னம்மா என்ன விஷயம்? என்று பயந்து கேட்டபோது, எல்லாம் தலைவலிதான். கொஞ்சம் தைலம் தேய்த்தால் சரியாகிவிடும்.... என சொல்லி சமாளித்தாள்.

ஆனால் மனம் முழுவதும் ஆஷா நந்தகுமாரை விரும்ப ஆரம்பித்துவிட்டாள். இனி நந்தகுமார் ஆஷாவைக் கட்டிக் கொளவது உறுதி என்ற எண்ணமே பூதாகாரமாய் எழுந்து அவளை ஆட்டி வைத்தது. இதுநாள் வரை ஆஷா மனது மாற, அவள் நந்தகுமாரை விரும்ப, விளையாட்டுப் போல் தான் நந்தகுமார் சொன்னதையெல்லாம் செய்தாள். அப்போது கூட இதுபோன் வேதனை அவளுள் எழவில்லை,

ஆஷாவின் குணம் நிச்சயமாய் நந்தகுமாருடன் ஒத்துப் போகாது... ஆஷா ஒரு போதும் நந்தகுமாரை மணமுடிக்க சம்மதிக்க மாட்டாள் என்ற உள்ளூர உறுதியாக நினைத்திருந்தாள். ஆனால் இன்று நிலைமை தலைகீழ் ஆகிவிட்டதே....!

ஆஷாவை நந்தகுமார் மணமுடிக்கப் போகிறான். அதை அவளும் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறாள்... ஆஷாவும் நந்தகுமாரும் கணவன் மனைவியாக வலம் வரப்போகிறார்கள்... அதைக் கண்குளிர பார்த்தபடி அவளும் அந்த அலுவலகத்தில் வேலை பார்க்கப் போகிறாள். என்ன ஒர இக்கட்டான நிலை!

நினைக்க நினைக்க வேலை மீது வெறுப்பாய், அவலகம் செல்ல ஆத்திரமாய் வந்தது. அந்த கோபத்தில் அடுத்து வந்த

இரண்டு மூன்று நாட்கள் வேலைக்குச் செல்லாமலிருந்தாள். வீட்டில் விசாரித்த தந்தையிடம் உடம்பு அசதியாய் இரப்பதாய்ச் சொல்லி சமாளித்தாள். அலுவலகத்திற்கோ உடன் வேலை பார்க்கும் பணியாள் மூலம் ஜூரம் அடிப்பதாய் விடுப்பு கடிதம் கொடுத்தாள்.

லீவு போட்டு வீட்டில் இருந்தாலும் அவளால் நிம்மதியாய் இருக்க முடியவில்லை. சதா நந்தகுமார் நினைப்பாகவே இருந்தது. எதில் எதிலோ கவனமைம் செலுத்தி மனதை திசைதிருப்பப் பார்த்தாள். மனம் எங்கு சுற்றினாலும் திரும்பவும் விட்ட இடத்திற்கே நந்தகுமாரை சுற்றியே வந்தது. இரவு நேரத்திலும் தூக்கம் வராமல் துக்கம் தாளாமல் அழக் கூட செய்தாள். மறுகணமே ரோஷம் வந்தவளாய் அழுகையை துடைத்து விட்டு எழுந்து உட்கார்ந்து கொள்வாள்.

இந்த வீராப்பு, உறுதி எல்லாம் கொஞ்ச நேரம்தான். திரும்பவும் அவளது நினைப்பு நந்தகுமாரையே தேடிச்செல்லும். பெரும் அவஸ்தை கொண்டவளாய் நான்கு நாள் பொழுதை ஓட்டி விட்டாள்.

ஐந்தாம் நாள் மாலை அன்று அவள் இருப்பிடம் தேடி நந்தகமாரே வந்து விட்டான்.

என்ன நிர்மலா, என்னாச்சு உனக்கு? என்று நந்தகுமார் கேட்டபோது அழுது விடுவோமோ என்று பயந்தாள். ஆனாலும் எல்லாவற்றையும் மறைத்து, பல்லைக் கடித்துக் கொண்டு ஜூரம்தான்! இப்போது சரியாயிற்று... என்றாள்.

சரி... சரி...கிளம்புங்க... என்றான் நந்தகுமார் அவசரமாய்.

கிளம்பவா... எங்கு? என்றாள் அவள் புரியாதவளாய்.

ஹோட்டல் மெரிடியனுக்கு.... என்றான் மறுபடியும் புதிராய்...

மெரிடியனுக்கா? பெரிய ஸ்டார் ஹோட்டல்தானே... அங்கு எதற்கு?

நந்தகுமார் தோள்களைக் குலுக்கிச் சிரித்தான்.

என்ன நிர்மலா புரியாமல் பேசுகிறாய்? ஆஷா காதலுக்கு. கல்யாணத்திற்கு சம்மதித்து விட்டாள். அவளது கல்யாண உறுதி நிகழ்ச்சிதான் ஸ்டார் ஹோட்டலி; இன்று மாலை நடக்கப் போகிறது... அதில் நீயும் கலந்து கொள் வேண்டும்... ம்...ம்... கிளம்பு!

கல்யாண உறுதியா? ஆஷாவுக்கா....? நொந்து போயிருந்தவளின் தலையில் மறுபடி ஓர் சம்மட்டி அடி! நந்தகுமார் ஆஷாவைத்தான் மனைவியென முடிவே பண்ணி விட்டான் இனி அவளால் ஒன்றும் செய்ய முடியாது!

ம்ம்... சீக்கிரம் கிளம்பு...

நந்தகுமார் அவளது நிலைமை புரியாமல் அவசரப்படுத்தினான். தலைக்கு மேல் வெள்ளம் போயாயிற்று... இனி சாண் போனால் என்ன முழம் போனாலல் என்ன? நிர்மலா துணிந்து விட்டாள். எவ்வித உணர்ச்சியும் இல்லாமல் அவனைப் பின் தொடர்ந்தாள்.

மெரிடியன் ஹோட்டல்

ஐந்து நட்சத்திர அந்தஸ்த்துக்கு ஏற்ப பிரம்மாண்டமாய் பெரிய பெரிய அறைகள், ஹால்களுடன் அலங்காரமாய் விளங்கியது.

நந்தகுமார் காரை பார்க்கிங்கில் நிறுத்தி விட்டு நிர்மலாவை உள்ளே கூட்டிப் போனான். கான்பரன்ஸ் ஹாலைக் கடந்து, விசிட்டர்ஸ் ஹாலில் ஆஷாவின் கல்யாண உறுதி நிகழ்ச்சிக்கு எல்லா ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. அந்த ஹால் முழுக்க பெரிய மனிதர்கள், பிரபலமான வி.ஐ.பிக்கள் அனைவரும் வணக்கம் செலுத்தியபடி நந்தகுமார் நடந்தான்.



அவனுக்குப் பின் குனிய வைத்த தலையுடன் நடந்து கொண்டிருந்தாள் நிர்மலா.

கூட்டத்தைக் கடந்து ஸ்டேஜை நெருங்கிய போது மெல்ல தலையைத் தூக்கி பார்த்தாள். ஸ்டேஜில்ன் நடுவே... சர்வ அலங்காரங்களுடன் பட்டுச் சேலையில் ஆஷா ஜொலித்துக் கொண்டிருக்க.... பார்த்த நிர்மலா பயங்கரமாய் திடுக்கிட்டாள்.

ஆஷாவுக்குப் பக்கத்தில் கோட்டும் சூட்டுமாய் டை கட்டியபடி இளைஞன் ஒருவன்!

யாரது அவனை.... இதுவரை பார்த்ததே இல்லை! இவன் எப்படி..... ஆஷாவுக்குப் பக்கத்தில் இப்படி நெருக்கமாய் நின்று கொண்டு.....

திகைத்தவளின் காதுகளில் அவன்தான் ஆஷாவைக் கட்டிக் கொள்ளப் போகிற அவளது காதலன்... நந்தகுமாரின் குரல் தேன் பாய்வது போல் அவளது காதுகளில் ஒலித்தது.

## 19

நிர்மலாவால் ஒரு கணம் காதுகளை நம்ப முடிடயவில்லை. ஆனால் நம்பித்தான் ஆக வேண்டும்? சொல்வது நந்தகுமார் அல்லவா! திடுக்கிட்டு அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

என்ன சொல்கிறீர்கள்? அது.... ஆஷாவின் காதலனா... அப்படியானால் நீ....நீ...நீங்கள்?

நான் ஆஷாவின் காதலன் இல்லையே...! கைகளை விரித்து பெரிதாய் சிரித்தான். அவன்.

நீங்க... நீங்கள்... காதலித்தீர்களே...? காதலித்ததாய் சொன்னீர்களே...? அது என்னவாயிற்று...? உடம்பு முழுவதும் ஏற்பட்ட இனம் புரியா பதட்டத்தில் பரபரப்பில் வார்த்தைகள் வராமல் குழறினாள்.

ம்ம்... நான் காதலித்டதேன்.... அவளுக்காக கனிந்து கனிந்து உருகினேன்.....

பின் என்ன நடந்தது? சொல்லுங்கள்!

அவள் பரபரக்க அவன் கூர்மையாய் அவளையே உற்றுப் பார்த்தான்.

இந்த இடம் வேண்டாம்... கொஞ்சம் இப்படி வா.... என்றபடி அவளைக் கையோடு இழுத்துக் கொண்டு ஹோட்டலை விட்டு வெளியே வந்து வெளிப்புறமாய் இருந்த பெரிய மர நிழலுக்கு வந்தான்

இப்போ கேள் சொல்கிறேன்...

உங்கள் காதல்.... நீங்கள் காதலித்தது என்னாயிற்று? துடிக்காத குறையாய் கேட்டாள் அவள்

அப்படியே... என்றால்? எனக்கப் புரியவில்லை. விளக்கமாய் சொல்லுங்கள்...

சொல்கிறேன். நான் காதலித்தது... என்று ஆரம்பித்து நந்தகுமார் ஒரு நிமிடம் நிறுத்தியவன் அவளை குறும்பாய் பார்த்தவாறு, ஆஷாவை அல்ல! என்றான் குரலை உயர்த்தி.

என்ன ஆஷாவை நீங்கள் காதலிக்கவில்லையா? என்னிடம் என்னவெல்லாம் ஆஷா பற்றி பேசினீர்கள்? ஆஷாவைக் கல்யாணம் செய்ய வேண்டுமென்பது... மாமாவின் கட்டளை என்று கூட சொன்னீர்கள்?

எல்லம் பொய்...! நடிப்பு....! நந்தகுமார் சிரித்தான்.



என்ன நடிப்பா?

அப்படித்தான் வைத்துக் கொள்ளேன். ஆனால் உண்மையில் நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன்... என்றவனின் பார்வையில் குறுகுறுப்பு கூடியது.

யார் அது..... சொல்லுங்கள்....!

இதோ இதில் அவளுடைய போட்டோ இருக்கிறது... நீயே பார்....! என்றபடி நந்தகுமார் மூடப்பட்ட போட்டோ ப்ரேம் செட் ஒன்றை நீட்டினான்.

விரல் நடுங்க அதை வாங்கியவள் மெல்ல பிரித்தாள். உள்ளே போட்டோ இல்லை. அதற்குப் பதில் பளபளப்பான கண்ணாடி ப்ரேம்! அதனுள் நிர்மலாவின் முகம் தெரிந்தது.

## 20

நிர்மலா அதிசயித்துப் போய் விட்டாள்.

கண்ணாடியில் அவள் முகம்! அப்படியானால் நந்தகுமார் காதலித்தது அவளைத்தானா? நம்ப முடியாமல் நிமிர்ந்தாள். எ....என்ன... சொல்கிறீர்கள்? கண்ணாடி.... என் முகம்... நீங்கள்... என்று திக்கித் திணறி வாய் குழறியவளைச் சாந்தமாய்ப் பார்த்தான்.

இன்னுமா புரியவில்லை... கண்மணி...? நீதான் என் காதலி!

கண்மணியா? காதலா...? நீங்கள்... நீங்கள்..... நிஜமாகவா அல்லது உளறுகிறீர்களா...? அவள் படபடத்து சீரியஸாய் கேட்டதும் அடக்க முடியாமல் சிரிக்க ஆரம்பித்து விட்டான் நந்தகுமார்.

அவனுக்கு ஒருவேளை எதுவும் ஆகிவிட்டதோ? என்ற பதற்றத்துடன் நம்பாமல் பார்த்தாள் நிர்மலா.

நிர்மலா, நான் காதலித்தது இருக்கட்டும்... நீ காதலித்தாயா.... அதைச் சொல்லு!

நான் காதலித்தது.... அது... அது....ஆ...

என்னை.... என்னைத்தானே?

இல்லை... இல்லை... என்றாள் அவசரமாக.

எங்கே நிமிர்ந்து என் முகம் பார்த்துச் சொல்... கரங்களால் அவள் முகத்தை நிமிர்த்தியபடி கேட்க அவன் முகம் பார்க்க திராணியற்றவளாய் அப்படியே குனிந்தாள்.

ம்ஹூம்.... இந்த வெட்கமெல்லாம் என்னிடம் ஆகாது... என்றவன் மறுபடி அவள் முகம் நிமிர்த்தினான். ம்ம்... இப்போரு நேராய் என் கண்களைப் பார்... கண்களைப் பார்த்துச் சொல்.... பார்ப்போம்... என்றதும்நிர்மலா ஒரு கணம் நிமிர்ந்து நேருக்கு நேர் அவன் கண்களைச் சந்தித்து விட்டு மறுகணமே குனிந்து கொண்டாள்.

நீ சொல்லிவிட்டால் என்ன... அழுது வீங்கிய உன் முகம் சொல்லுகிறதே?

நான் ஒன்றும் அழவில்லை.... என்றாள் சிறு பிள்ளை சினத்துடன்.

நீ அழவில்லை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் நீ காதலித்தது.... என் மேல் காதல் வைத்தது உண்மைதானே?

அதற்கு மேலும் அவனைச் சோதிக்க விரம்பாமல் தலையை பலமாய் ஆட்டியவள், நான் வைத்த காதல் இருக்கட்டும்.... உங்கள் காதல் புராணத்தை கொஞ்சம் சொல்லுங்கள். தலை சுற்றுகிறது.... என்றாள் நெற்றியை அழுத்திப் பிடித்தபடி.



அதில்... தலைவலி ஒன்றுமில்லை கண்மணி குழப்பம் தான்.... அதை புரியும்படி சொல்கிறேன்.

சொல்லுங்கள்.

முதலில் ஆஷா விஷயத்தை தெளிவுபடுத்துகிறேன். ஆஷாவும் நானும் இணை வேண்டும் என்று என் மாமா நினைத்தது உண்மைதான். ஆனால் ஆஷா கலிபோர்னியாவில் படிக்கும்போதே தன் சக மாணவர் ஒருவரை காதலிக்க ஆரம்பித்து விட்டாள். இந்த விஷயத்தை ஆஷாவுக்காக நான்தான் மாமாவிடம் பேசி காதலுக்குச் சம்மதம் வாங்கிக் கொடுத்தேன். அந்த சம்மதம் வாங்கிய பையனுடன் தான் இப்போது ஆஷாவிற்கு இந்த ஹோட்டலில் உறுதியும் நடக்கிறது...

அப்படியானால்...நீங்கள்?

பொறு... சொல்கிறேன்... கண்மணி... என்றபடி அவளை தன் பக்கம் இழுத்து மெல்ல அணைத்தான். திமிறப் போனவள் அவன் பிடியின் இறுக்கம் உணர்ந்து அப்படியே சிறைப்பட, அவள் காதுமடல் நோக்கி குனிந்தவன் உனக்கு ஞாபகம் இர்கிறதா...? முயல் வேட்டைக்கு நாம் சென்றபோது... இப்படி உன்னை அணைத்தேனே..? அந்த அன்பமாலன அணைப்பில் இருந்து தான் உன் மீதான எனது காதலைத் துவக்கினேன் என்று சொல்லி விட்டு அவன் சிரித்தபோது நம்ப முடடியாமல் வாய் பிளக்காத அதிர்ச்சியில் அவனைப் பார்த்தாள்.

நிஜம்மாகவா சொல்கிறீர்கள்?

நிஜமாகத்தான்! வேண்டுமானால் உன் தலையிலடித்துச் சத்தியம் செய்யட்டுமா? என்றவன் அவள் தலையில் கை வைப்பது போல வந்து கன்னத்தை கிள்ளினான். அப்படி கிள்ளியதில் சிவந்து போன கன்னத்திற்கு இதழ் முத்தம் ஒன்றும் பதித்து அவளை சிலிர்க்க வைத்தான்.

இதெல்லாம் அப்புறம்... முதலில் சொல்லுங்கள்...! பரபரத்தாள்.

அவன், அப்படியா! சொல்கிறேன்... என்றபடி தோளோடு தோளாய் அவளை அணைத்துப் பிடித்தவன், நிர்மலா, உன்னுடன முயல் வேட்டைக்குச் சென்ற அனுபவத்தில்தான் காதல் பிறந்தது. வேட்டை முடிந்து திரும்புவதற்குள் அது ஜிகுஜிகுவென பெரிய மரமாய் வளர்ந்து விட்டது. உடனே அதை உன்னிடம் சொல்லிவிட ஆசைதான்.... ஆனால்....

சொல்ல... என்ன பயமா? என்றாள் அவள் துடுக்காய் முகத்தை வைத்துக் கொண்டு.

பயம்தான்... ஆனால் இது வேறு வித பயம்... ஒருவேளை நீ மாட்டேன் என்று மறத்து விட்டால்... பிடிவாதம் பிடித்தால்....

நல்ல யோசனைதான்...! அவள் கேலியாய் சிணுங்க, அவளை மறுபடியும் அணைத்து அடக்கியவன், அதனாலே ஆஷாவை வரவழைத்து உன்னிடம் நடிக்கச் சொன்னேன். உன்னுடைய காதலை, நீ என் மேல் வைத்த அன்பை வெளிக்கொண்டு வருவதற்காக ஆஷாவைக் காதலிப்பது போல நடிக்க வேறு செய்தேன். அதற்காகன உன்னை மிரட்டவும் செய்தேன்...

நல்ல நடிப்புதான்...! துரத்தி துரத்தி காதலித்தீர்களே...

பின்... நீ நம்ப வேண்டுமே? அதனாலே ஆஷாவை சிடு மூஞ்சி போல் கோபமாய் அலைய விட்டேன். பிகனிக் என்ற பெயரில் உன்னிடம் நெருங்கிப் பழகவே மகாபலிபுரம் கூட்டிச்சென்றேன்..

ம்ம்... நெருங்கித்தான் பழகினீர்களே? கட்டியணைத்து. கண்களைப் பார்த்து.... அவள் கண் சிமிட்டி சிரிக்க அவனும் சேர்ந்து சிரித்தான்.



அப்படி.... கடைசியில் காதலை கண்டுபிடித்தீர்களா? காதல் அகப்பட்டதா? மறுபடியும் அவள கேலி செய்ய அவன் சீரியசாகவே, ம்ம்... காதல் அகப்பட்டது. உன்னை உடல் தழுவ அணைக்கும்போது... நீ அனுமதித்த போதே நான் புரிந்து கொண்டேன்... நீயும் என் மீது தீராத காதல் கொண்டிருக்கிறாய்.... ஆனால் உண்மையைச் சொல்ல மறுத்து மறைக்கிறாய்... என்று...

அது உண்மைதான்...! என்றாள் தலையை பலமாய் ஆட்டியவாறு.

பின் ஏன் சொல்லாமல் மறைத்தாய் நிர்மலா?

நான் எப்படிச் சொல்ல முடியும்? நீங்கள்தான் ஆஷாவே கதி என்று ஆஷா தாசராய் நடித்துக் கொண்டு இருந்தீர்களே!

அவள் கேட்க அவனும் அதைச் சிரித்தபடி ஆமோதித்தவன், என்ன சொன்னாய்...? ஆஷா தாசனா? நல்ல பெயர்தான்! ஆனால் இனி அதை நிர்மலாதாசராய் மாற்றிவிடு... என்று மேலும் ரசித்து சிரித்தான்.

இன்னொரு விஷயம்... என்றாள் நிர்மலா

என்ன...?

உங்கள் டயரியில் என் போட்டோ ஒளிந்திருந்தைப் பார்த்தேன்... அப்போதே மனசில் சின்ன சந்தேகம்....

ஓ..... அதைப் பார்த்து விட்டாயா? பெரிய துப்பறியும் புலிதான் நீ! உன்னை வீட்டிலும் பார்த்து ரசிக்கத்தான் அலுவலக போட்டோவைக் கொண்டு போய் டயரியில் ஒளித்தேன்...

தினம் தினம் எடுத்து பார்ப்பீர்களே? என்றாள் அவள் ஆவல் மிகுதியாய்.

அதில் சந்தேகமா உனக்கு? என்றபடி அவளை அப்படியே நெஞ்சார சிரித்தவன் இறுக அணைத்து அவளது செவ்விதழ்களில் முத்தம் பதித்தான்.

இனி தினமல்ல... ஒவ்வொரு நிமிடமும்... ஒவ்வொரு நொடியும் என் செல்லத்தை... ஆசை தீர பார்த்து ரசித்துக் கொஞ்சப் போகிறேன்...

மறுபடியும் தழுவியவனிடம் சினுங்கலாய்... கண்மணி, செல்லம் என ஒவ்வொன்றாய் சொல்லி கொஞ்ச ஆரம்பித்தாயிற்று. அடுத்து என்ன பெயர்... எப்படிக் கொஞ்சப் போகிறீர்கள்? என்றாள் துடுக்காய்.

ம்ம் யோசித்து... கொஞ்சுகிறேன்... என்றபடி சிரிப்புடன் அவளை அணைத்து தன்னுடன் ஐக்கியப்படுத்திக் கொண்டான் நந்தகுமார். அந்த இறுக்கமான அணைப்பில் கட்டுண்டு, தன் வசமிழந்தவளாய் வெட்கம் படர கண்களை மூடிக் கொண்டாள் நிர்மலா

(முற்றும்)

**நந்தினி ஸ்பெஷல்**

மலர் : 1

இதழ் : 1

வெளியிடுபவர் - ஆசிரியர் :

**எம்.எஸ்.முருகன்**

அக்ஷயா பப்ளிகேஷன்ஸ்

56/2, ஸ்ரீராம்பேட்டை தெரு, சி.ஐ.டி.நகர், நந்தனம், சென்னை-35.

போன். 044-24361734

கதையில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே, கதையை திருத்தவும் சுருக்கவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு.

**Akshaya Novel Monthly**

Owner, Publisher & Editor **M.S. Murugan,**

Published at :

New No. 56/2, Sri Rampet Street, C.I.T. Nagar, Nandanam, Chennai - 600 035.